

கல்கி
தீபாவளிச் சிறப்பிதழ்
KALKI 18.10.98 ரூ. 4.50
இலவச இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்!
படையப்பாவுக்குக்
கதையெழுதும்
வழிப்போக்கர்கள்!
சினிமா ஸ்பெஷல்!


உள்ளத்தை
கொள்ளை
கொள்ளும்
கனவுமாளிகை
ஆஷிகா ஸாரீஸ்
ASHIKA
வாங்கும் முன்பு தலைப்பில் ஆஷிகா
அடையாளம் உள்ளதா என கவனித்து வாங்கு
KALPANA



மனிஷா கொய்ராலா – இந்த பாலிவுட் பறவை, தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத கதாநாயகி ஆகி வருகிறார். மணிரத்னம், ஷங்கர், மறுபடி மணிரத்னம் என்று கலங்கடித்தவர் இப்போது மறுபடி ஷங்கர் படத்தில் ஒப்பந்தமாகியிருக்கிறார். (முதல்வன்). நமக்கோ, தலை வெடித்து விடும் போலிருந்தது.

ஷங்கரின் ஜீன்ஸ் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்த போது அது பற்றி மனிஷாவிடம் கருத்துக் கேட்டனர் பத்திரிகையாளர்கள். (ஐஸ்வர்யா ராய் அல்லவா அதில்?!)

வன்மம் கொப்பளிக்க மனிஷா சொன்ன பதில்: "ரகுமான் இசையால்தான் ஓடுகிறதே தவிர, இதில் வேறு யாரும் பெருமை கொண்டாட முடியாது!"

இதற்குப் பிறகும் மறுபடி ஷங்கர் படத்தில்! எப்படி?

'மேன்' என்ற தெலுங்குப் படத்துக்காக ஹைதராபாத் பிர்லா மந்திரில் ஷூட்டிங்குக்கு வந்திருந்தவரைச் சந்தித்துக் கேட்டோம்:

"இப்பவும் நான் சொன்ன கருத்தில் மாற்றம் ஏதுமில்லை. ஆனால் என் கருத்தின் ஒரு பகுதியை மட்டுமே வெளியிட்டு பிரச்னை பண்ணி விட்டார்கள். (பிலிம்ஃபேர்) ஷங்கர் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நீங்களே சொல்லுங்கள். ஒரு ஹீரோயினால்தானா படம் ஓடுவதும் ஓடாததும் நிர்ணயிக்கப்படுகிறது?"

தமிழ் வாத்தியார் தேடுகிறார் மனிஷா!

கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ. மெயில் : kalki@md2.vsnl.net.in

"நல்லது. 'முதல்வனி'ல் ஒப்பந்தமாகியிருக்கிறீர்கள். வாழ்த்துகள். படம் பற்றி அவுட்லைன் ஏதாவது தெரியுமா?"

"ஸாரி. ஷங்கர், மணிரத்னம் போன்றவர்களிடம் கதை கேட்டுத்தான் நடிப்பேன் என்று பிடிவாதமா பிடிக்க முடியும்? இது வரை நான் நடித்த மூன்று தமிழ்ப்படங்களிலும் எனக்கு முன்னதாகக் கதை தெரியாது. ஆனால் இரண்டு இயக்குநர்களுமே என் கேரக்டர்களைச் சிறப்பாக அமைத்திருந்தார்கள். அதே நம்பிக்கை இனியும் தொடரும்."

"போகட்டும். யோகா, மெடிட்டேஷன் ஏதாவது செய்து வருகிறீர்களா?"

(வியப்புடன்) "ஏன் கேட்கிறீர்கள்?"

"சென்ற முறை சந்தித்தபோது இருந்த படபடப்பு, கோபம் எதுவும் காணோமே?"

"ஹா! கண்டு பிடித்து விட்டீர்கள். ஆனால் யோகா எதுவும் செய்வதில்லை. ஒரு நெருங்கிய தோழியின் அறிவுரைப்படி என் நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டு வருகிறேன். முன்பு ஹைப்பர்-சென்ஸிடிவ் பெண்ணாக இருந்தேன். படுபயங்கரக் கோபம் வந்து விடும். இப்போது மிகவும் குறைத்துக் கொண்டிருக்கிறேன்."

"தில்ஸே சென்னையில் மிக சுமாராகத்தான் போகிறது. மும்பையிலும் எதிர்பார்த்த வெற்றி இல்லை என்கிறார்கள்..."

(குறுக்கிட்டு) "அதனாலென்ன? இங்கிலாந்தில் சூப்பர் ஹிட்! முதல் வார கலெக்ஷன் மட்டும் 25 மில்லியன்! இது 'காட்ஸில்லா' கலெக்ஷனை விட அதிகம் தெரியுமா? அஃப் கோர்ஸ், படத்தின் வெற்றிக்கு இயக்குநர், ஒளிப்பதிவாளர், ரகுமான் எனப் பல காரணகர்த்தாக்கள் இருந்தாலும் பெயர் எனக்கும் வந்து விடுகிறதே! இந்தப் படத்தில் நான் கதாநாயகி என்கிற ஒரே காரணத்தால் இன்று புதிதாகப் பத்து படங்கள் கமிட் ஆகியிருக்கிறது எனக்கு!"

"நீங்கள் நடிக்க விரும்பி, நடிக்க இயலாமல் போன பாத்திரம் எது மனிஷா?"

"ரங்கிலாவில் ஊர்மிளா செய்திருந்த ரோலைப் பார்த்து லேசாகப் பொறாமைப் பட்டேன். 'ஐயோ, நமக்குக் கிடைக்கவில்லையே இது' என்று!"

"நாலு தமிழ்ப் படங்கள்! மொழி அறிமுகமாகியிருக்குமே? இனியும் டப்பிங் அவசியமா?"

"சொந்தக்குரலில் தமிழ் பேச ஆசைதான். ஷங்கரிடமும் இம்முறை கேட்டிருக்கிறேன். பார்க்கலாம். ஒரு நல்ல தமிழ் வாத்தியார் கிடைத்தால் தேவலை. ம்... நீங்கள் ஏற்பாடு செய்ய முடியுமா?"

(மனிஷாவுக்குத் தமிழ் சுற்றுத் தரும் புண்ணியகாரியத்தைச் செய்ய விரும்பும் தமிழாசிரியர்கள் கவனிக்கவும்.)

பேட்டி : **நீலா**

குட்சி

ஐஸ் ருசித்துக் கொண்டிருக்கும் இந்த கங்கைக்கரைப் பூங்காற்றின் பெயர் ஆஷா மெஹ்ரா. கொஞ்ச நாளில் தேசம் முழுக்க அலற வைக்கப் போகிறது இவர் நயாகியாக நடிக்கிற 'காமா'



படம். ஒளிப்பதிவாளர் அசோக்குமார் இயக்கும் இந்தப் படம், மீரா நாயரின் காமசூத்ரா கிளப்பிய புயலை விழுங்கி ஏப்பம் விடும் என்று இப்போதே இரண்டு 'வுட்'களிலும் பரவலான பேச்சு. ஆனால் அசோக் குமாரின் டார்கெட், ஹாலிவுட் என்கிறார்கள்!

• ஆஷா மெஹ்ரா



ஸ்பெயின், கலிஃபோர்னியா என்றெல்லாம் சுற்றிச் சுற்றி படம் வட்டமடித்தாலும், சரித்திரம் கொஞ்சம் ஊறுகாயாக மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (இது சரித்திரப் படம்!) மற்றபடி ஏழைகள் கஷ்டப்படும் போதெல்லாம் அங்கு வந்து குதிக்கும் ஹீரோ, எத்தனை பேர் சூழ்ந்தாலும் சண்டையில் அவர்களை வெற்றி காண்பது, அதே சமயம் கொடூர வன்முறையாக சண்டைக் காட்சிகள் இல்லாதது – எல்லாமாகச் சேர்ந்து ஒரு பிரும்மாண்டமான எம்.ஜி.ஆர் படத்தைப் பார்ப்பது போன்ற பொழுதுபோக்கு நிறைவு! பளிச்சிடும் வசனங்களும் கதை முழுக்க நிரவியிருக்கும் நகைச்சுவையும் சபாஷ் போட வைக்கின்றன.

ஜோரோ என்பது வழிவழியாக வந்து கொண்டிருக்கும் (!) ஒரு புரட்சி வீரனின் பெயர். தன் நாட்டு மக்களை வெளிநாட்டவர் அவமதிக்கும் போதெல்லாம் குதிரையில் வந்து குதித்து, எதிராளியின் கழுத்தில் வாளால் மூன்று கோடுகளை 'Z' வடிவத்தில் போட்டு தூள் கிளப்புவது ஜோரோவின் வழக்கம்.

ஒரு பிரும்மாண்டமான ஆங்கில எம்.ஜி.ஆர். படம்!

(அல்லது) THE MASK OF ZORRO

முகமூடி அவனது ஸ்பெஷாலிட்டி. இளைய ஜோரோவாக ஆண்டனியோ பேண்டரஸ் நகைச்சுவையும், வாள்வீச்சுமாக சேர்ந்து கலக்குகிறார் என்றால், இவற்றுடன் பாசமான தந்தை, கண்டிப்பான குரு ஆகிய பரிணாமங்களிலும் மின்னி ஒரு படி மேலே செல்கிறார் ஆண்டனி ஹாப்கின்ஸ். பார்வையில் கம்பீரம், அலட்சிய ஆட்டம், திறமை என்று மின்னுகிறார் இளவரசியாக வரும் ஜேட்டா ஜோன்ஸ்.

கலகலப்பான சரித்திரப் படங்கள் வெகு குறைவு. அந்தக் காரணத்தால் பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகமாக இருப்பதை மன்னிப்பதோடு மட்டுமல்லாமல், மனம் விட்டு ரசிக்கவே முடிகிறது.

— ஜி

வாஹினி ஸ்டுடியோ. கோள வடிவில் இரும்புக்கூண்டு. அதன் உள்ளே சரித்திரகால உடையில் நாசர். "சுதந்தர வேள்வியை நடத்தும் படை இருக்கு, சுரண்டலை எதிர்த்திட இனியும் பயமெதற்கு தோழா" என்ற கம்பீரமான பாடல் வரி ஒலித்த்துக் கொண்டே இருந்தது.

கழுத்தைச் சுற்றியிருந்த துண்டை நீக்கிவிட்டு, ஷாட் ஒருவழியாக ஓ.கே.வான திருப்தியுடனும் தீபாவளி ரிலீஸ் பற்றிய டென்ஷனுடனும் இயக்குனர் சேரன் நமது பேட்டிக்குத் தயாரானார்.

"படத்தின் பெயர் தேசியகீதம். போஸ்டரிலோ, முரளியின் கண்ணில் மூவண்ணக் கொடி. இப்போதெல்லாம் தமிழ்ப்படங்களில் பாட்டு, சண்டைக் காட்சி மாதிரி தேச பக்தியும் ஓர் அங்கமாகி விட்டதே?"

"நீங்க ஏன் அதை ஏதோ கமர்ஷியல் கோணத்திலே புகுத்துவதாக நினைக்கணும்? தேச பக்தியைத் திரைப்படங்கள் மூலம் ஊட்டுவதென்பது ஆரோக்கியமான போக்குதானே? ஐம்பது வருடங்களுக்கு முன் இந்தியா சுதந்தரம் பெற்றபோது இந்த நாடு எப்படியெல்லாம் முன்னேற்றங்களைக் காணும்னு பல கனவுகள் இருந்தது. அவற்றில் இப்போது எவ்வளவு நனவாகியிருக்கு?! கனவுக்கும் நனவுக்கும் இடையே உள்ள பெரிய இடைவெளிக்குக் காரணம் என்ன என்பதை ஒரு சுதந்தரப் போராட்ட வீரரின் பார்வையில் இந்தப் படத்தைக் காட்டியிருக்கேன். அதே சமயம் இதற்கெல்லாம் வன்முறை தீர்வு அல்ல என்பதையும் சொல்லியிருக்கேன். என் மனக்குமுறலின் வெளியீடுன்னுகூட இந்தப் படத்தைச் சொல்லலாம்."

"சிறுவயதிலேயே உங்கள் மனதில் உறுத்திக்கிட்டிருந்த 'தீம்'னு இதைச் சொல்லியிருக்கீங்க, இல்லையா?"

"ஆமா! பள்ளியில் படிக்கும்போதே என் மனதில் உருவான கரு இது. நான் மதுரைக்காரன். பள்ளியில் படித்தபோதும் சரி; பிறகு ஐ.டி.ஐ.யில் தொழிற்கல்வி முடித்துவிட்டு சிம்சனில் பணிபுரிந்தபோதுகூட சினிமா சினிமான்னுதான் மனசு அடிச்சுக்கும்."

"இரண்டே படங்களில் புகழ் உச்சியை அடைந்து விட்டீர்கள். இப்போது தேசிய கீதத்தில் அதை நிலை நிறுத்திக்கணுமேன்ற பொறுப்பும் பயமும் இருக்குதா?"

"நிச்சயமா. ஒருபடி அதிகத் தீவிரத்துடனேயே உழைச்சுக்கிட்டிருக்கேன்."

"இதை ஒரு விருது முயற்சின்னு பேசிக்கறாங்களே?"

"அப்படியெல்லாம் இல்லை! மக்கள் ஆதரவு கிடைத்தால் போதும். சமுதாயத்துக்காக சில நல்ல கருத்துக்களைப் படத்தில் வைக்கும்போது அதை மக்களும் ஏற்றுக் கொள்ளும்போதுதான் ஒரு இயக்குனருக்குத் திருப்தி ஏற்படும்."

"பாரதி கண்ணம்மா படத்தில் நீங்க



தேசபக்தி வியாபாரப் பொருளா?

சொல்ல வந்த சமுதாயக் கருத்துதான் என்ன? உங்க செண்ட்டிமெண்ட், படத்துக்கு வெற்றியைத் தந்திருக்கலாம். ஆனால் காதல் வெற்றியடையவில்லை என்ற சூழலில் காதலி இறந்து கொண்டிருக்கும் தீயில், காதலனும் விழுந்து இறப்பது ஆரோக்கியமானதா?''

''காதலுக்குத் தீர்வு சாவுதான் என்பதை நான் அந்தப் படத்தில் வலியுறுத்தவில்லை. அந்தப் படம் நடப்பது ஒரு சராசரி கிராமத்தில். ஜாதி, காதலை வெல்லவில்லை; அந்த இறப்புகளுக்குப் பிறகு ஜாதி மனப்பான்மையும் செத்துப் போகிறது. காதலுக்குத் தடையாக இருந்த விஜயகுமாரிடமும் மன மாற்றம் வருவதுதான் கதையின் முக்கிய அம்சம்.''

''வித்தியாசமான க்ளைமாக்ஸ் படத்தின் வெற்றிக்கு உதவும் என்ற எண்ணத்தில்தான் 'பொற்காலம்' படத்தில் தன் காதலி மீனாவைத் திருமணம் செய்து கொள்ளாமல் முரளி வேறொரு பெண்ணை மணப்பதாகக் காட்டினீர்களா?''

''காதலிக்காதவர்கள் மிகக் குறைவு. அதே சமயம் காதலில் ஜெயிப்பவர்களும் குறைவானவர்கள்தான். காதலைத் தியாகம் செய்துவிட்டு, கலக்கத்தோடு வாழ்பவர்கள்தான் அதிகம். சினிமாவில்தான் எல்லா காதலும் ஜெயிப்பதாகவும், திருமணத்தில் முடிவதாகவும் காட்டுவது வழக்கம். எனவே இதை மாற்றி, நான் முடிவை வைத்த போது அது யதார்த்தமானது என்பதால் மக்களால் அதைச் சுலபமாக ஏற்றுக் கொள்ள முடிந்தது.''

''உங்கள் வெற்றிக்குக் காரணம்னு எதைச் சொல்லுவீங்க?''

''காமெடி, சண்டைக்காட்சி இது போன்ற வழக்கமான விஷயங்கள் படத்தில் இருந்தே ஆகணும்னு நான் நினைப்பதில்லை. எதைச் சொல்கிறோம் என்பதில் தெளிவாக இருக்கிறேன். நான் மட்டுமில்லை; இப்போது என் போலவே வந்திருக்கும் நிறைய இளம் இயக்குனர்களிடம்கூட இந்தத் தெளிவு இருக்கிறது. எந்த காம்ப்ரமைஸும் இல்லாமல் படத்தை நிற்க வைக்கலாம்ன்ற ஆரோக்கியமான போக்கை சமீபத்தில் ஆரம்பித்து வைத்தவர் விக்ரமன்தான்.''

''நல்லதொரு சூழலில் சினிமாவில் நுழைந்ததும் ஒரு சாதகமான அம்சமா உங்களுக்கு இருந்தது இல்லையா?''

''சந்தேகமில்லாமல்! சுமார் இருபது வருடங்களுக்கு முன்பே இயக்குனர்களுக்கு அருமையான ஒரு சூழல் தமிழகத்தில் உருவானது. அழியாத கோலங்கள், உதிரிப் பூக்கள், பதினாறு வயதினிலே போன்ற படங்களும் அவற்றின் இயக்குனர்களும் மக்கள் மனத்தில் பதியத் தொடங்கிய காலம். ஆனால் 'பிரபல தயாரிப்பாளர்' ஒருவரின் இரண்டு மசாலாப் படங்கள் இவற்றைத் தொடர்ந்து பெரு வெற்றி பெற, மீண்டும் தமிழ் சினிமா குழியில் விழுந்தது. இப்போதுதான் மீண்டும் நிமிர்ந்து நிற்கத் தொடங்கியிருக்கிறது!''

''சிறுவயதில் நாடகங்களில் நீங்கள் நடித்ததாக அறிகிறோம். இயக்கிய படங்களிலும் தலைகாட்டியிருக்கிறார்கள். வேறு சில இயக்குனர்களைப் போல, வருங்காலத்தில் முழு நடிகன் ஆகிவிடும் எண்ணம் உங்களுக்கும் உண்டா?''

''நிச்சயம் இல்லை. நாடகத்தில் நடித்தாலும், இங்கு வந்தவுடனேயே அதை நிறுத்தி விட்டேன். சென்னையில் ஏது சார் நல்ல நாடகம்?''

''பிடித்த நடிகர் யார்?''

''சிவாஜி கணேசன். சின்ன வயதிலிருந்தே அவர் நடிப்பு மட்டும்தான் எனக்குப் பிடிக்கும். எந்தெந்தத் தவறுகளைச் செய்யக் கூடாது என்பதற்காக எல்லாவிதப் படங்களையும் பார்த்தாலும், சிவாஜியின் நடிப்பு எனக்கு மிகப் பிடிக்கும்.''

சந்திப்பு: **சுல்லா**
படம்: **ஸ்ரீஹரி**

செய்தி:
பள்ளிக்கூடப் பாடங்களில் சினிமாவை சேர்ப்பது பற்றிப் பரிசீலனை செய்வோம்.

— முதல்வர்



''பள்ளிக்கூடப் பாடத்தில் சினிமாவைச் சேர்த்த பிறகு நம்ம பொண்ணை கண்டிக்கவே முடியலீங்க.''


''ஏன்?''

''எதிர்வீட்டுப் பையனோட சினிமாவிற்குப் போயிருந்தியான்னு கேட்டா, 'ஆமா, கம்பைன் ஸ்டடி'ன்னு சொல்றா!''



''என்னடி, பையன் இந்த நோட்டுப் பூராவும் ரம்பா, சிம்ரன், மீனா படமெல்லாம் ஒட்டி வச்சிருக்கான்?''

''சும்மாயிருங்க! அது அவனோட ரிகார்ட் நோட் புக்.''



''என்னங்க பையன் பரீட்சைக்கு தயார் பண்ணிட்டிருக்கான்ல? இப்போபோய் எதுக்கு அவனை கடைக்குப் போய்ட்டு வரச் சொல்றீங்க?''

''ஆமாங்க! இப்போ இதுதான் ஸ்கூல் யூனிஃபார்ம்.''



நாஞ்சில் ரமேஷ்



"கரண்ட்தான் இருக்குதே. பையன் ஏன் லைட்டை அணைச்சுட்டு மெழுகுவர்த்தி வெளிச்சத்துல படிச்சிட்டிருக்கான்?"

"மணிரத்னம் பத்தின பாடமாம்!"

"படமே இல்லாம இருந்தாரே, அந்த டைரக்டர்! இப்போ என்ன ரொம்ப பிஸியாயிட்டார் போலிருக்கு!"

"ஆமா! ஸ்கூல் குழந்தைகளுக்கு ட்யூஷன் எடுக்கிறாராம்!"



ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ்
முன்னின்று நடத்தும்

அமரர் கல்கி நூற்றாண்டு விழா — கோவையில்!

தலைமை:

கிருஷ்ணராஜ் வானவராயர்,

முன்னிலை:

ஏ. நடராஜன்,
(சென்னை தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குநர்)

சிறப்புரை ஆற்றுவோர்:

சோ,
சுப்புடு,
பாலகுமாரன்,
ராஜேஷ்குமார்.

இடம்:
நானி கலையரங்கம், மணி மேனிலைப் பள்ளி, கோவை.

நாள்:
25.10.98 — ஞாயிறு
நேரம்: மாலை 6 மணி

அனைவரும் வருக!

எட்டு குதிரை ரேஸ்!

சினி ரசிகர்களுக்கு இந்த தீபாவளி அத்தனை ஜோராக இருக்கப் போவதில்லை. ஒரு ரஜினி உண்டா? ஒரு கமல் உண்டா? பாலசந்தர், பாரதிராஜா, மணிரத்னம், ஷங்கர், அகத்தியன்தான் உண்டா? அட, சிம்ரன்தான் உண்டா, அரவிந்தசாமி உண்டா என்று கே.பி. சுந்தராம்பாள் குரலில் அழுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

நமக்குக் கிடைத்த விவரங்களின்படி எட்டுப் படங்கள் வருகின்றன.

மண்வாசனை மூக்கைத் துளைக்கும் 'வீரம் வெளஞ்ச மண்ணு' (விஜய்காந்த்+கஸ்தூரி ராஜா). ஓரளவு எதிர்பார்க்கப்படும் சேரனின் 'தேசிய கீதம்' (முரளி+ புடைவை கட்டிய ரம்பா), பிழைத்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கும் 'என்னுயிர் நீதானே' (பிரபு+ தேவயானி) மற்றும் பொண்ணு வீட்டுக்காரன் (சத்யராஜ்+பி.வாசு) திறமையை நிரூபிக்கக் களமிறங்கியிருக்கும் புது இயக்குநர் ஜீவாவின் 'புதுமைப்பித்தன்' (பார்த்திபன் + காமெடி) மகளிரணியின் (அம்மா லக்ஷ்மா டைரக்டர் + மகள் ரிச்சா ஹீரோயின்), 'உயிரோடு உயிராக', சரத் குமாரின் 'சிம்மராசி', காலமெல்லாம் காதலை வாழ வைத்தவரின் 'உன்னுடன்' (அதே முரளி + அதே கௌசல்யா).


— குல்லூ








● ஹும்! இப்படியெல்லாம் நான் கஷ்டப்பட்டதே இல்லை! ட்ரெஸ்ஸை சொல்றேன்.



● ரீஸன்டா எந்த வளையல் கடை திறப்பு விழாவுக்குப் போயிருந்த?

● தூங்கிடாத! ரோஜா மார்க்கெட் ஏறிக்கிட்டே வருது, தெரியுமில்ல?





படு ரகசியமாகத் தமது அடுத்தப் பட ஆரம்பக் கட்ட வேலைகளில் கே.பி. இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. அவரது தயாரிப்பில் இளம் இயக்குநர்கள் இயக்கும் படங்கள் முடிந்ததும் இதைத் தொடங்கலாம் என்று இருக்கிறாராம். ஹீரோ, அநேகமாக சூர்யா. டைட்டில்? அது ஒரு மூன்றெழுத்து ராகம். (முதலிரண்டு எழுத்துகளும் வடமொழி இறக்குமதி.)

சொந்த நாட்டு சோகக் கதை!

மீராநாயர், ஹாலிவுட்டில் படமெடுத்துக் கொண்டிருக்கும் இந்தியப் பெண் டைரக்டர். சலாம் பாம்பேயிலிருந்து, காமசூத்ரா வரை இவரது டைரக்ஷனில் உருவான திரைப்படங்கள் பரபரப்பாகப் பேசப்பட்டவை.

"என் சொந்த நாடு" என்று இவர் லேட்டஸ்டாக ஒரு படம் எடுத்திருக்கிறார். அமெரிக்காவில் 80களிலேயே, எய்ட்ஸ் நோயாளிகளுக்காக மருத்துவசேவை புரிந்த டாக்டர் ஒருவரின் உண்மைக் கதை.


ஆபிரகாம் வர்கீஸ் என்கிற அந்த டாக்டர், தமது அனுபவங்களைப் புத்தகமாக எழுதியுள்ளார். அதைப் படமாக்கினால், மீராதான் டைரக்ட் செய்ய வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துக் கடிதம் எழுதினாராம். அந்தக் கடிதம் கண்ட மீராநாயர், மனம் நெகிழ்ந்து போய், அந்தக் கதையை சினிமாவாக்கும் பணியில் இறங்கியிருக்கிறார்.

இரண்டு மாதம் செலவழித்து, படத்தின் ஸ்கிரிப்டைத் தயாரித்த பின், மொத்தப் படப்பிடிப்பும் இருபத்தி மூன்று நாட்கள்தான்! அமெரிக்கக் கம்பெனியொன்று தயாரித்துள்ள இந்தப் படத்தில், நடித்த அனைவருமே ரொம்ப இன்வால்வ் ஆகி நடித்தார்களாம். காரணம், ஒவ்வொருவரும், மிக நெருக்கமான ஒருவரை எய்ட்சுக்கு பலி கொடுத்தவர்கள் என்பதால், அந்த உயிர்க்கொல்லியின் கொடூரத்தை உணர்ந்தவர்கள்!

சமீபத்தில் அமெரிக்க டெலிவிஷனில் இந்தப் படம் ஒளிபரப்பானபோது சுமார் ஒன்னரைக் கோடி பேர் பார்த்து ரசித்தார்கள். விரைவில் மும்பை, டில்லி, சென்னை நகரங்களில், இந்தத் திரைப்படத்தை சிறப்புக் காட்சியாகத் திரையிட்டு, அதன்மூலம் வசூலாகும் நிதியை எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பணிக்குத் தரும் எண்ணம் இருப்பதாகச் சொல்கிறார் மீரா.

— பாரதி







மும்பையிலிருந்து புறப்பட்ட நாங்கள் நால்வரும், (நான், என் கணவர், லலிதா - ராமச்சந்திரன் தம்பதியினர்) லுஃப்தான்சாவில் படம் பார்த்து, ம்யூமிக் கேட்டு, உண்டு, உறங்கி, (பாதிக்கு மேல் காலி! இரண்டு சீட்டுகளை இணைத்தால் குஷன் பெட் தயார்) ஃப்ராங்க்பர்ட்டை அடைந்த போது காலை ஒன்பது மணி!



அதுவே சின்ன நகரம் போன்ற பிரம்மாண்டம்! ஏர் போர்ட்டுக்குள்ளேயே ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்ல ட்ரைவரில்லாத ரயில்! சின்னச் சின்ன மஞ்சள்-நீலக் கார்களில் சில வி.ஐ.பி.க்கள் – வீ ஃபார் வியாதியஸ்தர்கள் + வயோதிகர்கள்! ஏராளமான அம்புக் குறிகளையும் அறிவிப்புப் பலகைகளையும் பின்தொடர்ந்து, ரயிலேறி, 18-ம் டெர்மினலை அடைந்து (அதுபாட்டுக்கு 30, 40 டெர்மினல்கள் உள்ளன) லண்டன் செல்ல வேண்டிய விமானத்தைப் பிடித்தோம்.

அப்போது தொடங்கி, தொடர்கதையாக எல்லாப் பயணங்களிலும் 'வெஜிடேரியன்ஸ்' என்று விட்டால், "சீஸ் ஸாண்ட்விச்" என்கிற பல்லைப் பதம் பார்க்கும், சமோசா போன்ற, தடிமனான ஒரே வஸ்துதான் சாப்பிடக் கிடைக்கும்! வேறு வழியில்லாமல், டொமாடோ, க்ரேப் (ஒரிஜினல்) பெப்ஸி, ஃபான்டா போன்ற பானங்களைக் குடித்துக் குடித்து இதை விழுங்கி வைத்தோம். தப்பித் தவறி எந்த விமானத்திலாவது ஒரு பிஸ்கட், சாக்லேட் என்று கொடுக்க வேண்டுமே! ஊஹூம்!

ஹீத்ரோவில் இறங்கியபோது, அதன் சுறுசுறுப்பும் கலகலப்பும் கவர்ந்தன. உலகின் மிக பிஸியான ஏர்போர்ட்டுகளில் ஒன்றான இதிலிருந்து, நிமிடத்துக்கொரு 'டேக் ஆஃப்'பும், 'லாண்டிங்'கும் அசத்தின!

எங்களுக்கு ஸவுத் கென்ஸிங்டனில் ஹோட்டல் புக் ஆகியிருந்ததால், அருகிலிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றோம். லக்கேஜுகளுடன் எஸ்கலேட்டரில் ஏறி இறங்கியபோதுதான் அந்தச் சிறிய விபத்து நிகழ்ந்தது! லலிதாவின் வலது பாதம் சற்றே மடங்கி, சுளுக்கு போன்ற ஒரு 'மடக்' – சுரீர் வலி – கையோடு கொண்டு சென்றிருந்த ஆயிண்ட்மெண்ட், ஸ்ப்ரே வகையறாக்களை அபிஷேகித்து, ஒரு வாறு வலியைச் சரிக்கட்டி ப்ளாட்பாரத்தை அடைந்தால் 'திக்'கென்றிருந்தது!

மும்பையில் முட்டி மோதும் ஜன சமுத்திரத்துக்குப் பழக்கப்பட்டுப் போன கண்களுக்கு, 'வெறிச்'சென்றிருந்த ப்ளாட்பாரங்கள் திகிலையே ஊட்டின!


ரயில்வே ஸ்டேஷன்கள் அசப்பில் மும்பை போலவே, டைமண்ட் வடிவ பெயர்ப் பலகைகளுடன், சதுரமான ஸைன் போர்டுகளுடனிருந்தன. ரயில்களில் வரைபடத்

ஹர ஹ

துடன் இறங்க வேண்டிய இடத்தைப் பற்றிய குறிப்புகள்; ஒலிபரப்புகள்; சிநேகமான பயணிகள்... வழி எல்லாம் ஒரே பச்சைப் பசேல்; தூரத்தில்... அபாயமற்ற தொலைவில் வீடுகள்; இங்கே லைனை ஒட்டியே குடிசைகளையும் மனிதர்களையும் கிலியுடன் பார்த்துவிட்டு, இப்படிப் பார்ப்பது வித்தியாசமான நிம்மதியைத் தந்தது. ஸவுத் கெனிங்ஸ்டனில் இறங்கி, வெளியே வந்தபோது, வானம் பன்னீர் தெளித்து எங்களுக்கு வரவேற்புரை கூறியது!

சிலீர் என்ற துளி உடல் மீது பட்டதும் தான், பளீரென்று நினைவில் வெட்டியது – குடையை மறந்து விட்டோமென்பது! அங்கே எப்போது வேண்டுமானாலும் மழை பெய்யலாம் என்ற பயமுறுத்தல், ஷாப்பிங்குக்குப் பிள்ளையார் சுழி போட வைத்தது!

அருகிலிருந்த கடையில் நுழைந்து, "மேட் இன் சைனா" என்ற வாசகம் கண்ணை உறுத்த, ஒரு சாதாரண கறுப்புக் குடையை எடுத்துப் பிரித்தபோது, அது 'பட்'டென்று உயிரை விட்டது. ஆங்கிலத்தில் நாங்கள் சமாதானம் சொல்ல, கடைக்காரர் (ஏஷியன் தான்) புரியாத மொழியில் பொரிந்து தள்ளினார். 'ஏழு பவுண்டு தண்டம்' என்ற எரிச்சலில், மீண்டும் மிக பவ்யமாக நாங்கள் விளக்க, அவர் நிறுத்தி நிதானமாய், ஒவ்வொரு வார்த்தையாய் "அதனாலென்ன... வேறு ஒன்று எடுத்துக் கொள்ளுங்களேன்" என்ற போதுதான், அவர் பேசியதும் ஆங்கிலம்தான் என்பது உறைத்தது!



வேறொன்றை ஏழு பவுண்டுக்கு (நானூற்று சொச்சம்) வாங்கி, ஒரு குடை கீழ் இருவராக நடக்க (யார் இரண்டு குடைக்கு தண்டமழுவது?) ஆரம்பித்தது தான் தாமதம்... கொஞ்சம் கூட "ரொமாண்டிஸிஸம்" இல்லாத கீழ் வானம், 'பட்'டென்று நின்று விட்டது! அப்போது மூடி வைத்ததுதான்! இந்தியா திரும்பும் வரை திறக்கவேயில்லை! (நீதி : உடையை மறந்தாலும் குடையை மறக்காதீர்!)

நாங்கள் செல்ல வேண்டிய ஹோட்டலின் பெயரை சொல்லி விசாரித்ததில், "இதோ... இப்படியே போய் முதல் திருப்பம்" என்பதான பதில், ஏதோ பொடி நடையாய்ப் போய் விடலாம் என்ற தெம்பைத் தந்தது. சூட்கேசுகளை இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்த பிறகுதான், 'இந்தா இருக்குது' என நம்மூரில் கிராமத்தார்கள் சொல்லி மைல் கணக்கில் நடக்க வைப்பார்களே... அது போன்ற விஷயம் என்பது புரிந்தது.

காலைக் கீழே வைக்கவே இடமில்லாமல், நடைபாதைகளை வியாபாரிகளுக்குத் தாரை வார்த்துவிட்ட மும்பையிலிருந்து (சென்னையும் தான்!) வந்து, இப்படிக் காலை வீசி பிரம்மாண்ட நடைபாதைகளில் நடை பயிலச் சொன்னால்

① ஐரோப்பா

ஜெயஸ்ரீராஜ்

எப்படி? கால்கள், அதுவும் லலிதாவின் களுக்குக் கால் ஒரேடியாக 'மக்கர்' செய்தது!

ரோட் கிராஸிங்கில் கால்கள், அதிர்ச்சியில் நகரவே மறுத்தன. மும்பையில், பெரிய கிராஸிங்குகளில், தபதபவென்று பெரிய கூட்டத்துடன் ஓடிக் கடப்பதற்குள், கூடவே துரத்தும் கார், டாக்ஸி, பஸ்களின் ஹாரன் ஒலி வெறிநாயாய் பயமுறுத்தும். இங்கே என்னடாவென்றால், நாம் எப்போது பெருஞ் சாலைகளைக் கடக்க விரும்பினாலும், ஒரு ஸ்விட்சைத் தட்டினால், எல்லா வாகனங்களும் நமக்கு வழிவிட்டு சாதுவாய் நிற்கின்றன. சின்ன கிராஸிங்குகளென்றால் நம்மைப் பார்த்தாலே போதும் - வண்டிகள் நமக்கு வி.ஐ.பி. ட்ரீட்மெண்ட் கொடுத்து, நாம் நிதானமாகக் கடக்கும்வரை பொறுமையாகக் காத்து நின்றால், நமக்கு அதிர்ச்சி ஏற்படாமல் என்ன செய்யும்?

இனித் தாங்காது என்ற நிலையில் "டாக்ஸி" என்றோம்! இங்கே மட்டும் இந்தியா போல் வலது புற ட்ரைவிங்! ஏனைய ஐரோப்பிய நாடுகள் முழுவதும் இடது பக்கம்தான் ட்ரைவர் ஸீட்! நாலு பேர் எதிரும் புதிருமாய் அமரக்கூடிய தாராள டாக்ஸி! டிப்டாப்பாக இருந்த ட்ரைவர் சல்யூட் அடித்து, லக்கேஜுகளை ஏற்றி, போக வேண்டிய இடத்தைக் கேட்டார். அதுவரை நீண்டு கொண்டிருந்த பாதை, டாக்ஸியில் அமர்ந்ததும் தடாலென்று முடிந்துவிட்டது. ஐந்து பவுண்டுகளை, ரூபாயாக மாற்றிப் பார்க்காமல் இதயத்தைக் கல்லாக்கி, ட்ரைவரிடம் கொடுத்து விட்டு, ஹோட்டலுக்குள் நுழைந்தோம்.

வரவேற்பறையில் ஒரு ஜெர்மானியக் குடும்பமும், கூட்டமாய் சில குமரிகளும் காத்திருந்தனர். பேச்சுக் கொடுத்ததில், அந்தப் பெண்கள், தாங்கள் வேலை செய்து ஓராண்டு காலமாக சேமித்த பணத்தை எடுத்துக் கொண்டு, ஜாலியாக லண்டனை சுற்றிப் பார்க்க வந்திருக்கும் பிரஞ்சுக் குமரிகள் என்பது தெரிந்தது. நம்மூரிலிருந்திருந்தால் இவர்கள் அந்தப் பணத்தை வரதட்சணையாகக் கொடுத்து ஒரு கணவனை வாங்கியிருப்பார்கள்.

ஜெர்மானியப் பெண், குடும்பத்துடன் வந்திருந்தாள்; விலைவாசி பற்றியும், ஜெர்மனியில் ஒவ்வொன்றும் அசாத்திய விலை விற்பது குறித்தும் பேசினாள். முதல் முறையாக லண்டன் வந்திருப்பதாகவும், பொதுவாகவே ஷாப்பிங்குக்கு ஐரோப்பா உகந்ததல்ல (அதற்கு அமெரிக்காதான் லாயக்காம்), 'ஸைட்ஸீயிங்'குக்குத்தான் சிறந்தது என்று முடித்து, எங்கள் கணவர்கள் மனத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்தாள்.

ஆனால் நைஸாக கவுண்டரிலிருந்த பெண்ணிடம் விசாரித்து, 'ஷாப்பிங்'குக்குப் பெயர் போன "ஆக்ஸ்ஃபர்ட் ஸ்ட்ரீட்டை" ஒரு கை பார்ப்பது என நானும் லலிதாவும் மனதுள் திட்டமிட்டுக் கொண்டோம்!

மறுநாள் காலை. "லண்டனை நீங்கள் சுற்றிப் பாருங்கள்; நாங்கள் டாக்டரை தேடிப் போகிறோம்" என்று லலிதா - ராமச்சந்திரன் ஜோடி சோக கீதமிசைத்தது. லலிதாவின் கால் புஸ்"புஸ்"வென்று வீங்கியும், முகம் சுண்டியுமிருந்தது. "சீச்சி... லண்டனாவது ஒன்றாவது? நாங்களும் உங்களுடனேயே வருகிறோம்" என்று 'தோஸ்தி'க்குக் கை கொடுத்தோம்.

மனசுக்குள் "லண்டன் சுற்றல் மட்டும் கான்சலா... அல்லது..." நினைத்தாலே வலித்தது; இந்தக் காலுடன் லலிதாவால் எப்படி நடக்க முடியும்?

கவுண்டர் பெண்மணி "செல்ஸி ஆஸ்பிடலுக்கு அழைத்துச் செல்லுங்கள்!" என்று டாக்ஸியைத் தருவித்தபோது, 'ஆக்ஸ்ஃபோர்டு ஸ்ட்ரீட்டு'க்கென ஒதுக்கியிருந்த பவுண்டுகளை பெருமூச்சுடன் எடுத்து பர்சில் அடைத்துக் கொண்டோம்.

பிரம்மாண்டமான அந்த மருத்துவமனையையும், தனித் தனியான பெரிய 'விங்'குகளையும் பார்த்த மாத்திரத்திலேயே, பவுண்டுகளுக்கு கோவிந்தா போட்டுவிட்டு, வரவேற்பில் மனவலியுடன் கால்வலியை விவரித்தோம்.

முதல் கட்ட பரிசோதனைக்குப் பின் 'காலில் க்ராக்' என்ற அறிவிப்புடன் உள்ளே அழைத்துச் செல்லப்பட்ட லலிதா, திரும்புவதற்கு ஒரு மணி நேரத்துக்கு மேலானதில், கழுத்துச் செயின், கை மோதிரம் முதலானவற்றையும் தயாராக வைத்துக் கொண்டோம்.

ஸாக்ஸ் போலிருந்த புதுவிதமான பிளாஸ்டருடனும், அழகான செருப்புடனும் (கையில் ஒரு ஃபான்ஸி தடியை வேறு தரப் பார்த்திருக்கிறார்கள்) லலிதா சிரமமில்லாமல் திரும்பிவர, நிம்மதிப் பெருமூச்சுடன் கவுண்டரில் பில் விவரத்தை விசாரித்தோம். அவர்கள் சொன்ன பதிலைக் கேட்டு, நாங்கள் நால்வரும் அதிர்ச்சியில் உறைந்து போனோம்!

(தொடரும்)

‘கலைமகள்’

தீபாவளி மலர் அன்பளிப்பு

நிரந்தர வருமானம் வரக்கூடிய பண்ணை நிலம் வாங்கிப் பலனடையும் திட்டம்.

ரூ. 10,000 மதிப்புள்ள பண்ணை நிலத்திற்குச் சொந்தக்காரராகுங்கள்

மேலும் அன்பளிப்பாக

☆ **கலைமகள் தீபாவளி மலர் மற்றும் கலைமகள் மாத இதழ்** தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.

☆ **இலக்கியப் பீடம்** காலாண்டிதழ் 5 ஆண்டுகளுக்கு அனுப்பப்படும்.

அன்னை ஆர்ச்சர்ட்ஸ் நிறுவனத்தாரின் பழப் பண்ணைத் திட்ட விபரங்கள்.

பண்ணை நிலம் (1316 சதுர அடி) நீங்கள் குறிப்பிடும் நபர் பெயரில் உடனடியாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படும்.

பண்ணை நிலத்தில் ஏற்றுமதித் தரம் வாய்ந்த உயர்தர மாமரக் கன்றுகள் உங்கள் சார்பில் நடப்பட்டு இலவசமாகப் பராமரிக்கப்படும்.

சிறந்த தோட்டக்கலை, விவசாய, பொருளாதார நிபுணர்கள் ஆலோசனைப்படி இத் திட்டம் இயங்கும்.

பயிர்கள் ஆயுள் காப்பீடு செய்யப்படும்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணை நிலம் மூலம் கணிசமான தொகை பலனாகப் பெற வழியுண்டு.

விவசாய வருமானத்திற்கு வருமான வரி கிடையாது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணை நிலம் தேவை இல்லை எனில் அன்றைய தேதி விலையில் மறு விற்பனை செய்ய அன்னை ஆர்ச்சர்ட்ஸ் உதவி செய்யும்.

பண்ணை நிலம் இலவசமாகப் பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நபரின் பெயர், தந்தை/கணவர் பெயர், வயது, முகவரி மற்றும்

தொடர்ந்து கலைமகள், இலக்கியப்பீடம் பிரதிகள் இலவசமாக அனுப்ப வேண்டிய பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ரூ. 10,000க்கான செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி

Annai Orchards Pvt. Ltd.,


C1, Bhagyam Palace, 12A, Puliyur First Lane, Trustpuram, Kodambakkam, Chennai - 600 024. Phone: 481 84 35.


தவணை முறைத்திட்டமும் உண்டு.

இந்தத் திட்டம் தீபாவளிக்குப் பிறகும் தொடரும்.

இந்த ஆண்டு கலைமகள் தீபாவளி மலரைப் பெற 15.10.98க்குள் விண்ணப்பிக்கவும்.







1998 அக்டோபர் 18
வெகுதான்ய ஐப்பசி 1
மலர் : 57
இதழ் : 11

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா - பாரதியார்.



ஜாதி மோதல்கள்; அறிக்கை பூசல்கள்!

ராமநாதபுரத்தில் மீண்டும் ஜாதிக் கலவரம்! மிருகத்தனமான அடிதடி, உயிர்ச் சேதம், பொருளாதார நஷ்டம்! ஜாதிப் பூசல்கள் போதாதென்று தமிழகத் தலைநகரில் அரசியல் தலைவர்களின் பொறுப்பற்ற அறிக்கைப் பூசல்கள்! நமது வேதனை இரட்டிப்பாகிறது.

தலித்களும் தேவர்களும் ராமநாதபுரத்தில் மோதிக் கொள்வது இது முதல் முறை அல்ல. எனவே, 'இதற்குக் கருணாநிதிதான் பொறுப்பு; அவர் பதவி விலக வேண்டும்' என ஜெயலலிதா கூறுவது அர்த்தமற்ற பேச்சு. அதே போல், 'என் ஆட்சியைக் கவிழ்க்க அ.தி.மு.க செய்யும் சதிதான் இந்தக் கலவரம்' என கருணாநிதி கூறுவதும் பொறுப்பற்ற பேச்சு.

ஜாதிக் கலவரங்களுக்குப் பின் மெய்யாகவே அரசியல் தூண்டுதல் இருந்திருக்கலாம். ஆனால், அதை அரைகுறையாக ஆராய்ந்து அரைவேக்காட்டுத்தனமாக அம்பலப்படுத்துவதால் நிலைமை மோசமாகுமே தவிர, நற்பயன் விளையாது.

அரசியல் தூண்டுதல் உள்ளிட்ட எக்காரணம் கொண்டும் ஜாதிக் கலவரங்கள் வெடிக்க விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அதையும்




மீறி கலவரங்கள் நிகழும்போது, காவல் துறையை முடுக்கி விடுவதுடன் தலைவர்களும் கட்சிபேதமின்றி கலவரம் நிகழும் இடங்களுக்கு நேரில் சென்று மக்களுக்குத் தைரிய மூட்ட வேண்டும். அதற்கு நேர் மாறாக, இப்படிப்பட்ட நேரத்தில் கட்சிக் கண்ணோட்டத் துடன் தலைவர்கள் அறிக்கைகள் விடுவது, கலவரத்தில் சம்பந்தப்பட்ட மக்களுக்கு மட்டுமின்றி, அனைத்துத் தரப்பினருக்குமே ஏமாற்றத்தை அளிக்கிறது.

'ராமநாதபுரம் தமிழகத்தின் பின் தங்கிய மாவட்டங்களுள் ஒன்று' என்பது வருடக் கணக்காகப் பேசப்பட்டு வரும் விஷயம். வறண்ட மாவட்டம் என்பதால் விவசாயத்துக்கும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கும் அங்கே வாய்ப்புக் குறைவு. தொழில் ரீதியாகவும் அம்மாவட்டம் பெரிய முன்னேற்றம் காணவில்லை. எனவே வறுமையும் வேலையின் மையும் அங்கு அதிகம். இந்தச் சூழ்நிலை, ஜாதிப் பூசல்களுக்குக் சாரம் அமைத்துத் தரக்கூடிய ஒன்று. வறுமையில் உழலும் எளியவர்கள் அரசியல் நோக்குடன் தூண்டப்படும் உணர்வுகளுக்கு பலியாகிறார்கள்; வீசப்படும் வலைகளுக்குள் சுலபத்தில் சிக்குகிறார்க்ள்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்று கூடி அடிக்கடி நிகழும் ஜாதிக் கலவரங்கள் குறித்து விவாதித்து, நல்ல முடிவுக்கு வரவேண்டும் என த.மா.கா. தலைவர் மூப்பனார் கூறி யுள்ளது ஏற்கப்பட வேண்டிய யோசனைதான்.

ஆனால், எப்போதும்போல் ஒரு கமிஷன் அமைத்து, அதன் ஆய்வறிக்கையை எதிர் பார்த்துக் கைகட்டிக் காத்திருப்பதோ, அறிக்கை வந்ததும் அதை உடைப்பில் போட்டு விட்டுப் பழைய பாதையில் தொடர்வதோ பயன் தராது.

பின்தங்கிய மாவட்டங்களை எவ்வாறு மேம்படுத்தி, வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, ம்க்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வது என்று உருப்படியான யோச னைகள் கூறப்பட வேண்டும். அந்த யோசனைகளைச் செயலாக்க காலக்கெடு நிர்ண யிக்கப்பட வேண்டும்.



ஆண்டுக்கு ஒரு முறை சமபந்தி போஜனங்கள் நடத்துவதும் ஆங்காங்கே சிறு தீவுகள் போல் சமத்துவபுரங்கள் நிறுவுவதும் இலட்சிய நோக்கில் சரிதான். ஆனால், ஏற்கெனவே ஜாதியுணர்வை வென்றவர்கள்தான் இவற்றில் கலந்து கொள்வார்கள். எனவே, இந்த முயற்சிகளால் நடைமுறை அபாயமான ஜாதியுணர்வை அடியோடு கெல்லி எறிய முடியாது.

மேல் சாதி – கீழ் சாதி என்ற உணர்வுடன் ஒருவரை ஒருவர் ஒடுக்கவும்; அதனை எதிர்க்கவும் பழிவாங்கவும் எண்ணும் போக்கு நீங்கி, அனைத்து மக்களும் சமத்துவ உணர்வுடன் மேன்மையுற என்ன செய்ய வேண்டும்?

மகாத்மா காந்தியின் வழி கை கொடுக்கும். ஜாதிபேதமற்ற சர்வமதக் கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டங்களை மாநிலம் முழுதும் நடத்தச் செய்து தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழலாம்.

'மதச்சார்பற்ற நாட்டில் அரசு ஆதரவுடன் பிரார்த்தனைக் கூட்டங்களா?' என்ற சந்தேகத்துக்கு அவசியமில்லை. மதச்சார்பின்மை என்பது எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்குவதுதானேயொழிய இறைவனையோ, இறை வழிபாட்டையோ மறுப்பது அல்ல.

ஆளுங்கட்சி, அதன் தலைவர்களின் கொள்கை எதுவாயினும், பெரும்பான்மை மக்கள் இறையுணர்வும் கடவுள் நம்பிக்கையும் கொண்டவர்கள். அவர்களுடைய உணர்வுகளை மதித்து, அவர்களை மேம்படுத்துவதை சமுதாயப் பணியாகக் கருத வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும், சிறிய, பெரிய நகரங்களிலும் ஊர்ப் பெரியவர்களுக்கு இந்தப் பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்த ஊக்குவிக்க வேண்டும்.

இறையுணர்வு, மனச்சாட்சியைத் தட்டியெழுப்பும்; நேர்மையையும் மனித நேயத்தையும் வளர்க்கும். இது விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்ளும் வரலாற்று உண்மை. ◉

சுமி சூப்பர் மார்க்கெட்

தீபாவளின்னா பட்டாசு. தீபாவளின்னா புது ட்ரெஸ். தீபாவளின்னா டீ.வி ப்ரோக்ராம்ஸ். தீபாவளின்னா பம்பர் பரிசு.

இந்த வருஷம் நிறைய தமிழர்கள் 'காரா'திபதி, 'தாயாதிபதி', 'பைக்'காதிபதி ஆகப் போறாங்க. ஆல் தி பெஸ்ட். (வண்டி குடுக்கறவங்க பெட்ரோலும் குடுத்தால் என்ன ஒரு சௌகர்யம்!)

யோசிச்சுப் பார்க்கறேன். ஸ்டேட் கவர்மென்ட் ஆபீஸ் ஒண்ணுல டெஸ்பாட்ச் கிளார்க் கோவிந்தசாமிக்கு (பிடிப்புகள் போக சம்பளம், . Say அஞ்சாயிரம்.) ஒரு ஹோண்டா சிடி விழுது. முதல்ல கோவிந்தசாமி கார் ஓட்டக் கத்துக்கணும். (சில ஆயிரங்களாவது செலவாகாது?) Then, அவர் காரை நிறுத்த ஒரு ஷெட் வேணும். திருவல்லிக்கேணி சந்துல எட்டடிக்கு எட்டடி இடத்துல குடியிருக்கறவர்னா பிரச்னை கொஞ்சம் பெரிசுதான். அதையும் மீறி சமாளிக்கறார்னு வெச்சுக்கங்க. காப்பி சாப்பிடறதை நிறுத்திட்டு பெட்ரோல் போட்டு, ஹாயா, ஹோண்டா சிடில ஆபீஸ் போய் தபால்களை ஃப்ராங்க் பண்ணி அனுப்பற ஜோலி பார்க்கறார். ஈவினிங் வண்டில மார்க்கெட் போயி, கால் கிலோ கொத்தவரங்காய் பேரம் பேசி வாங்கிட்டு வீட்டுக்குப் போறார். ஒய்ஃபுக்கு கார்ல போய் இறங்கி ஷாப்பிங் பண்ணணும்னு ஆசை இருக்காதா?

கொத்தவரங்காயை உள்ள வெச்சிட்டு, ரெண்டு பேரும் கார்ல ஏறி ஸ்பென்சர் ப்ளாஸா போறாங்க. (அந்தம்மா புளி டப்பால ரகசியமா சில நூறு சுருட்டி வெச்சிருக்காங்க.) ஆனவரைக்கும் வாங்கிட்டு, வீடு திரும்பி செலவுக் கணக்குப் பார்த்து சண்டை போட்டுக்கறாங்க.

இந்த சண்டை வேற வேற ரூட்ல விஸ்வரூபம் எடுத்து, டைவர்ஸ் வரைக்கும் போக அந்த ஹோண்டா சிடியை ஒரு சிம்பலா யூஸ் பண்ணி,



• ப்ரீதி: 'உயிரே'வில்

கதை எழுதலாம்.

'சே! அத்தனையும் கனவு!'ன்னு அமெச்சூர்த்தனமா கிளைமாக்ஸ் வெக்காம, சிம்பிளா ஒரு பக்கக் கதை ட்ரை பண்ணி எனக்கு அனுப்புங்க.

பிடிச்சிருந்தா, என் ரெண்டு பக்கங்கள்ல ஒண்ணைத் தியாகம் பண்ணி, சிறந்த கதையைப் பிரசுரிக்க ஏற்பாடு பண்றேன்.

சில பழைய க்ளாஸிக் நாவல்களையெல்லாம் வரிசையா படிச்சிட்டு வரேன். தமிழ்ல இந்த மாதிரியெல்லாம் சாதிச்சவங்க இருக்காங்கன்னு இன்றைய பெரும்பான்மை வாசகர்களுக்கு (தொடர் கதை விரும்பிகள்) யார் அறிமுகப்படுத்தறது? பல புஸ்தகங்களுக்கு இன்னிக்கு

ரீ-ப்ரிண்டே கிடையாது. 'சிறுகதைகள் விக்கறதில்லை; நாவல்னா தள்ளி விடலாம்'னு சொல்ற பப்ளிஷர்ஸ்கூட தொடர்கதைகளைத்தான் புஸ்தகமா போடறாங்க.

ஒரு வேள்வி மாதிரி சமீபத்துல நான் உட்கார்ந்து படிச்சு முடிச்ச நாவல்கள் இவை: பசித்த மானுடம் (கரிச்சான் குஞ்சு), கரைந்த நிழல்கள் (அசோகமித்திரன்), தீ (எஸ். பொன்னுதுரை), அம்மா வந்தாள் (தி. ஜானகிராமன்), நிலா நிழல் (சுஜாதா) ஒற்றன் (அசோகமித்திரன்).

இதுல பசித்த மானுடம், தீ, நிலா நிழல் மூணும் இன்னிக்குக் கிடைக்கறதில்லை. அசோகமித்திரனோடதெல்லாம் நர்மதாலேயும் ஜானகிராமனுடையது ஐந்திணைலயும் கிடைக்கிறது.

இன்னிக்குப் புதுசா தொடர்கதை, நாவல் எழுத ஆசைப்படறவங்க எல்லாம் கண்டிப்பா அம்மா வந்தாள், 'நிலா நிழல்' ரெண்டையும் ஒருதரம் படிக்கணும்னு சொல்லுவேன். 'ஸ்ட்ரக்சர்'னு சொல்லுவாங்க. தமிழ்ல வலுவான கட்டுமானத்தோட எழுதப்பட்ட நாவல்களுக்கு சிறந்த உதாரணம் இவை.

நல்ல கதை தேடி அலையற இளம் சினிமா டைரக்டர்கள், மாச நாவல் போதைலேருந்து வெளியே வந்து கொஞ்சம் கிளாஸிக்ஸ் பக்கம் கவனம் செலுத்த இது சரியான நேரம். கதையம்சம்தான் இன்னிக்கு போணியாகும்னு கோடம்பாக்கமே ஒத்துக்க ஆரம்பிச்சிருக்கு.

சினிமாக்காரர்கள் நல்ல நாவல்கள் தேடறது தெரிஞ்சாலே பல நல்ல பழைய புஸ்தகங்களுக்கு மறு உயிர் கிடைச்சுடும். யார் மணி கட்டப் போறாங்க?

மணி கட்டத் தயாரா?

ATN, ZEE, ஸோனி, எம்.டீ.வின்னு எல்லா இந்தி சானல்கள்லேயும் அடிக்கடி 'ஸோல்ஜர்'னு ஒரு படத்துலேருந்து ஒரு சுமாரான பாட்டைப் பார்க்கிறேன் + கேட்கிறேன். 'உயிரே' புகழ் ப்ரீத்திதான் ஸோல்ஜரோட லவ்வர்போல. ரொம்ப பொறாமையா இருக்கு. அந்தக் கன்னத்துல விழற (ரைட் சைட் மட்டும்) அழகான குழியைப் பார்த்து. ப்ரீத்தி மாதிரி அற்புதமா சிரிக்க இன்னிக்கு வேற யாராவது நடிகை இருக்க முடியுமான்னு தெரியலை. நடிப்புக்கூட நல்லாவே வருது. கொஞ்சம் எக்ஸர்சைஸ் பண்ணா ஹிந்தில அடுத்த ஹேமமாலினி ஆக நிறைய சான்ஸ். எக்ஸர்ஸைஸ் பண்ணாட்டா, தமிழ்ல வந்து, அடுத்த குஷ்பு ஆயிடலாம். ஒரே ஒரு ப்ராப்ளம். இங்க அந்தக் குழியை வேஸ்ட் பண்ணாம குலோப் ஜாமூன் பொறிக்கறாப்பல ஷாட்ஸ் வெச்சிருவாங்க.

- சுமி



மும்பை மசாலா

எலெக்ஷன் கச்சேரி

முலாயம் சிங் யாதவ் மெனக்கெட்டு மும்பை வந்து, பாகிஸ்தானுக்கு 2600 கோடியைத் தூக்கிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு போடு போட்டாரா? தூங்கிக் கொண்டிருந்த சிவசேனைக்காரர்களை உசுப்பிவிட, தாக்கரேவுக்கு 'பளிச்'சென்று விஷயம் கிடைத்துவிட்டது. தசரா பேரணியின்போது பழைய 'ஹிந்துத்வ' பல்லவியை ஜனுராகப் பாட ஆரம்பித்து விட்டார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், தாழ்த்தப்பட்டோருக்கு கல்விச் சலுகைகள் போன்ற அனுபல்லவிகள். மந்திரிமார்களின் வெளிநாட்டுப் பயணங்கள் அரசின் 100 கோடியை விழுங்கியிருக்கையில், "இங்கிலீஷ் தெரியாத அமைச்சர்களுக்கு இங்கிலாந்தும் அமெரிக்காவும் அழுவுதா?" என்ற புதிய சரணம் நன்றாகவே சூடு பிடித்திருக்கிறது. சென்ற லோக்சபைத் தேர்தலில், காங்கிரஸ், RPI - ஸமாஜ்வாதி கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தலித்துகளை வளைத்த கோபம் தணியாமல், அவ்வப்போது 'ஸமாஜ்வாதி ஸமாஜத்துக்கே வைரி' என்ற கோரஸை நடு நடுவே ஸ்பெஷல் எஃபெக்டுகளுடன் புகுத்தி, கச்சேரியை ஜமாய்த்தார். 2000 நெருங்குகையில், புதிய நூற்றாண்டை எதிர் கொள்ளும் ஆர்வம் இருக்கிறதோ இல்லையோ, புதிய தேர்தலை சமாளிக்கும் வேகம் பிறந்து விட்டது!

காவலருக்கே விலங்கா?

நீதிபதி ஏ.எஸ். அகுயர் இப்படி குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறாரே? போலீஸ் 'என்கௌண்டர்'களெல்லாம் கண்துடைப்பாமே? அபு சயாமா, சதா பாவ்லே, விஜய் பாண்டேல் ஆகிய கிரிமினல்களை காவல் துறை, 'என்கௌண்டரில்' தீர்த்துக் கட்டியதை ஒட்டி, மனித உரிமைக் கழகமும், இறந்தவர்கள் மேல் உரிமை உள்ள மனிதர்களும், கேஸ் மேல் கேஸ் போட்டு, நீதி மன்றத்தை உலுக்கியதன் பேரில், 'என்கொயரி' ஆரம்பித்தது. நீதிபதி தனது 223 பக்கத் தீர்ப்பில், போலீசார் தற்காப்புக்காகச் சுட்டார்கள் என்பதற்கு சாட்சியமே இல்லை என்று சொல்லி விட்டார். கமிஷனர் மென்டோன்கா தம் சிஷ்யர்களின் பக்கம் உறுதியாக நின்றாலும், இது போன்ற தீர்ப்புகள் போலீஸ் காம்ப்பில் சோர்வையும் அண்டர்வர்ல்டுக்கு ஒரு 'பூஸ்ட்'டையும் ஸாரி— காம்ப்ளான் சக்தியையுமே கொடுத்து விடுகிறதே! இதனால்தானே ஃபெரோஸ் கொங்கணி போன்ற காங்ஸ்டர்கள், காவல் துறைக்கு இன்னும் தண்ணி காட்டிக் கொண்டிருக்கிறார்கள்?

பிள்ளை பிடிக்கிறானா? படிக்கிறானா?



திடீரென்று கோரேகான், ஜோகேஷ்வரி போன்ற புறநகர்ப் பகுதிகளில் சில குழந்தைகள் காணாமல் போக, ஒரு எட்டு வயதுச் சிறுமியின் உடல் கற்பழிப்புக் காயங்களுடன் சாக்கடையிலிருந்து மீட்கப்பட்டதையடுத்து, 'பிள்ளை பிடிப்பவர்கள்' பீதி ஒரேயடியாகக் கலவரப்படுத்தியிருக்கிறது. யாரைப் பார்த்தாலும், இப்பகுதி மக்களுக்கு, பி.பி.யாகவே தெரிகின்றனர். நண்பனைத் தேடி வந்து விசாரித்துக் கொண்டிருந்த மூன்று அப்பாவி இளைஞர்களிலிருந்து, 'ரவுண்ட்ஸ'க்கு வந்த சில அலிகள் வரை, பலருக்கும் தர்ம அடிதான்! போலீசாருக்கு இவர்களை மீட்பதே பெரும்பாடாயிருக்கையில், பாடீல் என்பவர், தன் பிள்ளை ஸ்கூலுக்குப் போகும் வழியில், ஆட்டோவில் கடத்தப்பட்டு, நாலு மணி நேரம் கழித்து எப்படியோ தப்பி ஓடி வந்ததாகப் புகார் செய்திருக்கிறார். போலீசும் சிரமேற்கொண்டு கேஸை விசாரித்ததில் கிடைத்த தகவல் – பிள்ளை கொஞ்சம் படிப்

பில் 'வீக்'! அன்று பார்த்து, ஸ்கூலில் மாத்ஸ் எக்ஸாம் வேறு! சுற்று வட்டாரத்தில் கிட்நாப் பிங் வதந்திகள். அப்புறமென்ன? முன்பெல் லாம் பரீட்சையைத் தவிர்க்க குண்டு புரளி; இப்போது பிள்ளை பிடித்தல்!

டாண்டியா மேனியா

நவராத்திரி சமயத்தில் டாண்டியா (கோலாட்டம்) பித்து எந்த அளவு மும்பை வாசிகளின் தலைக்கேறுகிறது என்பதற்கு இரண்டு சாம்பிள்கள்:

பிரபல 'தல்வால்கர் ஃபிட்னஸ் சென்டர்" டாண்டியா ஏரோபிக்ஸை அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள். பளபளப்பான குஜராத்திய ஆடைகளையும், நகைகளையும் அணிந்த வாறே, கையில் கோலாட்டக் கழிகளை வைத்துக் கொண்டு பெண்கள் அணிவகுத்து நின்று உடற்பயிற்சிகளை செய்வது, வேடிக் கையான அபத்தம்!

இதோ, ஒரு சோகமய அபத்தம்: அந்தேரி யைச் சார்ந்த பாபுலால் படேல் (25), மனைவி நக்ஷா (20)வை, 'பொதுவிடங் களில் சென்று டாண்டியா



விளையாடாதே, ஈவ்டீஸிங் அதிக மிருக்கும்' என்று தடுத்திருக்கிறார். அவள் மறுத்து, சில நாட்கள் சென்று வர, வீட்டில் ஒரே சண்டை! இவன் அவளை, 'பிறந்த வீட்டிற் குப் போ' என்றிருக்கிறான். அவள் எரிச் சலில், மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு எறிந்து சாம்பலாகிவிட்டாள்!

புதிய முகம் பிடித்திருக்கிறதா?

'**ஆ**ஃப்டர்நூன்' தினசரி நடத்திய "Independent Thinkers Award" போட்டிக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு "போக்ரன் - அவசியம்தானா?" வந்திருந்த கலைக்கு வியல்கள் 3.50; தங்கத்தைத் தட்டிச் சென்றது, "முத்ரா கம்யூனிகேஷன்ஸ்"ஸைச் சார்ந்த ரமேஷ் ரபிந்திர நாத் (காபிரைட்டர்) சந் தோஷ் பதி (ஆர்டிஸ்ட்)யின் படைப்பான, "காந்தி" - மார்ஷல் உடையில்! 'இது நம் புதிய முகம்! பிடித்திருக்கிறதா?' என்ற கேள்வியுடன் அனுப்பப்பட்டிருந்தது. ஒரு கேள்விக்கு, இன்னொரு கேள்வியே பதிலாக அமைந்து விட்டது!

ஒரு கலைஞனின் ஆன்மா

மார்க்கெட்டில் "Cash crunch" அவ் வளவு மோசமா? தேசிய பார்வையிழந்தோர் கழகத்துக்காக "Sotheby" அண்மையில் ஹோட்டல் பிரசிடெண்டில் நடத்திய கலைக்களஞ்சிய ஏலத்தில், ஹர்ஷ் கோயங்கா, அவந்தி பிர்லா, நீனா பிள்ளை போன்ற பெருந்தலைகளிருந்தும், 12.75 மிலியன் பார்வையிழந்தோருக்கு தாராளமாக உதவும்படி ஷோபா டே குரல் கொடுத்தும்,

ஒரு கலைஞனின் தற்கொலை!

எதிர்பார்த்த அளவு (87 லட்சம்) விற் பனையில்லை (82தான்)! 21 லட்சங்களுக்கு பெயிண்டிங்குகளை வாங்கிக் குவித்த விஜய் மல்லையாவின் புண்ணியத்தில் இந்த அளவாவது எட்டியது! ரவிவர்மாவின் 'அஹல்யா' 13 லட்சங்களுக்குப் போயிற்று! மொத்தம் 69 பெயிண்டிங்குகள். மனசைத் தொட்டது, கிரிஷ் தஹி வாலேவின் "In memory of a pedestrian who made no mistake" படம்தான்! பெரிய சைஸ் ஸ்டாம்ப் போலிருந்த இந்தப் படம், எதிர்பார்த்ததைவிட (30,000) பல மடங்கு அதிகமாகப் (80,000) போயிற்று! ஆனால் பாவம் - இந்த நாளுக்கு ஏங்கிய கிரிஷ், பத்து நாட்கள் முன்தான் தற்கொலை செய்து கொண்டு விட்டார்! நிகழ்ச்சிக்கு இடப்பட்ட பெயர் "Windows to the soul". ●

— ஜெயஸ்ரீ ராஜ்

த.மா.கா. ஊர்வலம்

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.

? பிராமணர் அல்லாத ஆன்மீகவாதிகளை மட்டுமே போலிச் சாமியார்கள் என்று மீடியாவில் எழுதுவதாக 'நந்தன்' இதழில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதே?

! இப்படி விதண்டாவாதம் செய்வதைவிட பிராமணரும் அல்லாத, போலிகளும் அல்லாத ஆன்மீகவாதிகள் உண்டு என்பதை அங்கீகரித்து அவர்களைப் பற்றி ஆக்கபூர்வமாக எழுதியிருக்கலாம்... நந்தனும் மீடியாதானே!

● சின்னஞ்சிறு கோபு, மங்கைநல்லூர்.

? அணுகுண்டு வெடி, யானை வெடி போன்ற அதிக சப்தம் ஏற்படுத்தக் கூடிய வெடிகளைத் தடை செய்யக் கூடாதா?

! காதைச் செவிடாக்குகிற வெடிகளை அவசியம் தடை செய்யத்தான் வேண்டும். இல்லாவிடில், தீபாவளி ஒருவித வன்முறைப் பண்டிகையாகிவிடும்.

● போடி எஸ். சையதுமுகமது, பெரியகுளம்.

? ஊர்வலம் என்பதை இனி ஒருபோதும் த.மா.கா. நடத்தாது என மூப்பனார் அறிவித்திருப்பது பற்றி...?

! த.மா.கா.வின் தனித்துவம் தெரிகிறது. இதைக் காப்பாற்ற வேண்டியது தொண்டர்கள் பொறுப்பு.

● ஜெ. கண்ணன், சென்னை - 61.

? ஊழல் புகார் நிரூபிக்கப்பட்ட அரசியல்வாதிகளின் படங்களை நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் வைக்க, ஊழல் தடுப்புக் கண்காணிப்பு ஆணையர் முன்வருவாரா?

! அங்கே ஏற்கெனவே மரியாதைக்குரிய பெரியோர்களின் படங்கள் மாட்டப்பட்டுள்ளன. இவர்கள் படங்களையும் வைத்தால் முன்னவருக்கு மதிப்பில்லாமல் போய் விடுமே! காவல் நிலையங்களிலும் சி.பி.ஐ. அலுவலகங்களிலும் வேண்டுமானால் மாட்டலாம்!

● பி.ஆர். பார்த்தசாரதி, ஸ்ரீரங்கம் - 6.

? இனி சல்மான் ருஷ்டி நிம்மதியாக வாழலாம் அல்லவா?

! இல்லையே! தண்டனையை வாபஸ் பெற முடியாது என்று சொல்லி விட்டார்களே! அதை நிறைவேற்றுமாறு விடுத்த ஆணை மட்டுமே வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனவே ஆபத்து முழுதுமாக விலகவில்லை.

● காவிரி மணாளன், கோனாபட்டு. ❑

? நமது இந்தியச் சட்டங்களில் 1300 சட்டங்களைத் திருத்த வேண்டுமென்று சட்ட ஆலோசனைக் கமிஷன் கூறியிருக்கிறதாமே? அப்படியானால் அந்தச் சட்டங்களால் இதுவரை எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருப்பார்கள்..?


! அப்படிப் பலரும் பாதிக்கப்பட்டிருப்பார்கள்; அதனால் நாட்டின் முன்னேற்றமே பாதிக்கப்படும் என்பதற்காகத்தான் காலத்துக்கு ஒவ்வாத சட்டங்கள், விதிமுறைகளை நீக்க வேண்டும், மாற்ற வேண்டும் என்று சொல்வது. ஆனால் கமிஷனின் பரிந்துரைகள் எவ்வளவு தூரத்துக்கு நிறைவேற்றப்படும் என்பது எப்போதும்போல் கேள்விக்குறிதான்.

● ந. வந்தியக்குமாரன், சென்னை - 41.

? நீங்கள் கேட்டவை




• எங்கே நிம்மதி!



• 'சரித்திரம் பேசட்டும்...!



• தனித்துவம்



• பொருந்தாத இசை

பகுதியில் பெரும்பாலும் அரசியல் பற்றிய கேள்விகளுக்கே பதில் அளிக்கிறீர்களே! இந்தப் பகுதியே அதனால் சிடுமூஞ்சித்தன மாக இருக்கிறது.. கொஞ்சம் சிரிக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தக் கூடாதா?

! அரசியலைக் காட்டிலும் நல்ல ஜோக் நாட்டிலே இன்னிக்கு என்ன இருக்கு... சொல்லுங்க!

● **என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.**

? எல்லா சுயசரிதைகளும் உண்மையை மட்டுமே பிரதிபலிக்கின்றனவா?

! 'Almost all biographies are mostly fiction' என்று கருத்து கொண்டிருந்தார் ராஜாஜி. சில விதி விலக்குகள் உண்டு. 'சுய சரிதை எழுதக் கூடாதா?' என்று கேட்டபோது கூறினார்: "சுயசரிதை என்பது, நமது செயல்களை நாமே நியாயப்படுத்த எழுதியதாகி விடும். சரித்திரம் சொல்லட்டும், என் செயல்கள் சரியா? தப்பா? என்று..."

● **பி. கார்த்திகேயன், சென்னை - 15.**

? வந்தே மாதரம் பாடலை இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் ஊனப்படுத்தி விட்டதாக, பிரபல பின்னணிப் பாடகர் யேசுதாஸ் குற்றம் சாட்டியுள்ளாரே?

! டி.என். சேஷன் கூட இப்படி ஒரு கருத்தை வெளிப்படுத்திப் பேசியிருக்கிறார். முக்கியமான தேசியப் பாடல்களை, அவை பிரபலமாகியுள்ள மெட்டல்லாது வேறு மெட்டுக்களில் இஷ்டப்படி மாற்றித் தருவது சரியல்ல

நடத்தாதாமே?

என்பதுதான் என் கருத்தும். அதிலும் ரஹ்மான் கொடுத்திருக்கும் வேகமும் ஒலியமைப்பும் பாடலின் பொருளோடு துளியும் பொருந்தாதவை.

● **ஏ. முத்துலட்சுமி, மதுரை - 16.**

? 'அமெச்சூர் நாடகங்களை நாம் கெட்ட கனவாக மறந்துவிட வேண்டும். எதிர் காலத்தில் இந்த சபா நாடகங்கள் எதிர் நீச்சல் போட முடியாது' என்கிறாரே இந்திரா பார்த்தசாரதி?



• 'கெட்ட கனவு'...?



• உருப்படியாய் ஒரு உரி!

நீங்கள் கேட்டவை

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
காவிரி மணாளன்,
கோனாபட்டு - 622 503.

— தராசு

! எதிர்காலமென்ன, தற்காலமே பெரிய போராட்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் 'கெட்ட கனவு' என்ற சொற்கள் உறுத்தல். மறக்கக் கூடாத நல்ல கனவாக வேண்டுமானால் குறிப்பிடலாம்.

● **டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு.**

? மாநகராட்சி, குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப் போவதாக அரசாங்கம் கூறியிருக்கிறதே?

! அதனால்தான் பார்த்தாலே 'ஷாக்' அடிக்கிற அளவுக்குச் சென்னையில் எங்கு பார்த்தாலும் குப்பை மலைகள் குவிந்து கிடக்கின்றன போலும்!

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் - 1.**

? வி.ஐ.பிக்களுக்கு நினைவுப் பரிசு வழங்குவதை நிறுத்த வேண்டும் என ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் அறிவித்துள்ளாரே?

! அப்பாடி! நீண்ட நாட்களுக்குப் பிறகு உருப்படியாக ஒரு வாக்கியம் பேசியிருக்கிறார்.





• ஆற்றல்களின் சங்கமம்!

● **பா. வடிவேல், தேவனாங்குறிச்சி.**

? இன்றைய காலகட்டத்தில், சில கிராமங்களில் மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் பாரம்பரியக் கலையான வில்லுப் பாட்டை நேரில் ரசித்த அனுபவம் உண்டா?

! கலைவாணர், அதன் பிறகு சுப்பு ஆறுமுகம் ஆகியோரின் வில்லுப்பாட்டு கேட்டதுண்டு. இசையும், கவிதையுணர்வும், சமயோசிதமும், கதை சொல்லும் ஆற்றலும் பின்னிப் பிணைய அவர்கள் கதை சொல்வது எளிமையாய்த் தோன்றினாலும் பிரமிப்பூட்டும் காரியம். ◯

ஃப்ளாரிடாவில் இருக்கும் கிருஷ்ணசாமிக்கு இந்த வருடம் இசைவிழாவில், மியூசிக் அகடமியின் மூன்றாவது வரிசையில் உட்கார்ந்து பாலமுரளி பாட்டைக் கேட்க ஆசை.. பிளேன் பிடித்து சென்னை வந்து சேர்ந்த பிறகு டிக்கெட் கிடைக்காவிட்டால்...?

அஞ்சேல்! அஞ்சேல்! என்று கைகொடுக்கப் போகிறது இன்டர்நெட்! – கர்நாடக இசைக்கென்றே சத்யம் கம்ப்யூட்டர்ஸின் சத்யம் இன்ஃபோவே இந்த 'சைட்'!

பிரியர்கள் – தங்கள் அபிமான பாடகர்கள், சாஹித்ய கர்த்தாக்கள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்; எந்த ஊரில் யார் கச்சேரி என அறியலாம்; விமர்சனங்கள் படிக்கலாம்; பிடித்த பழம்பெரும் பாடகர்களின் குரலைக் கேட்கலாம்.

வெறியர்கள் : தங்கள் கருத்துக்களை வெளியிட்டு விவாதங்களைத் தொடங்கி வைக்கலாம்; குவிஸ் பகுதியில் புகுந்து விளையாடி, மதிப்பெண்களை அள்ளிக் கொண்டு கர்வப்படலாம்.

கலைஞர்கள் : சர்வதேச அளவில் தங்கள் 'தொழில்' எந்த அளவுக்கு கவனம் கவர்கிறது; ரசிகர்களின் எதிர்பார்ப்பு என்ன; எந்த முனைகளிலிருந்து போட்டி எதிர்பார்க்கலாம் என்று கணிக்கலாம்.

விரோதிகள்?! பிரபல கலைஞர்கள் பங்கேற்கப் போகும் (இன்டர்நெட்)




• தொடங்கி வைக்கிறார் லால்குடி

தொடங்கவிருக்கும் வெப் சைட் விலாசம் : http:lwww.carnatic music.com

கிச்சாமி இந்த இன்டர்நெட் விலாசத்தில் தமக்கு விருப்பமான மியூசிக் அகடமியின் மூன்றாவது வரிசைக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம்!

தவிர, கர்நாடக இசைப் பிரியர்கள், கலைஞர்கள், வெறியர்கள், ஏன்... அதன் விரோதிகளுக்குக் கூட சுவையான களமாக விளங்கும்



• குத்து விளக்கேற்றும் டி.கே.பி.



• ஹோம் பேஜ்

நேருக்கு நேர் அரட்டை நிகழ்ச்சிகளில் இசை தொடர்பாகவே இடைஞ்சலான கேள்விகள் கேட்டு ரகளை செய்யலாம்!

"சுருக்கமாகச் சொன்னால் இந்த வெப்-சைட் கர்நாடக இசைக்கான ஒரு பத்திரிகை - கம் - வானொலி நிலையம் - கம் - பிரத்யேக டீவி சானல் மாதிரி..." என்கின்றனர் சத்யம் நிறுவனத்தினர். (சத்யம் இது போன்ற இன்னும் பல நூதன சைட்களைத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது!)

"ஒரு முக்கியமான வித்தியாசம்... இந்த சைட்டுக்கு வருபவர்கள் வெறுமே படித்தும் பார்த்தும் கேட்டும் போகாமல் நேர்முகமாகப் பங்கேற்பதற்கு நிறைய வாய்ப்புகள் தருகிறோம்" என்று மேலும் விளக்கம் தருகிறார்கள்:

"சந்தை (market place) என்ற பிரிவில் இசைக் கருவிகள், இசைப் பதிவுகள், இசை தொடர்பான நூல்கள் வாங்க/விற்க/பரிமாறிக் கொள்ள விரும்புவோர் அறிவிப்புகள் தரலாம். 'பாத்ரூம் சிங்கர்ஸ்' என்ற பகுதி அமெச்சூர் பாடகர்களுக்கு. அவர்கள் தங்கள் குரலை இதில் பதிவு செய்து வைக்கலாம்..." (ஏ.ஆர் ரஹ்மானுக்கு, அடுத்த நித்யஸ்ரீ இன்டர்நெட்டில் அகப்பட்டால் ஆச்சர்யப்படுவதற்கில்லை!)

அடுத்த நித்யஸ்ரீ இன்டர்நெட்டில் அகப்படுவாரா?

"விட்டால் முழு நேரக் கச்சேரிகளைக் கூட இன்டர்நெட்டில் போட்டு விடுவீர்கள் போலிருக்கிறதே?" என்று நாம் விளையாட்டாகக் கேட்டால்...

"அப்படியொரு திட்டம் இருக்கிறது..." என்று விளையாடாமல் 'சத்தியம்' பேசுகிறார்கள்!

"நேரடி ஒலிபரப்பாகக் கச்சேரிகளை வழங்க முயன்று வருகிறோம்... ஒரு கச்சேரியை கலைஞர் மற்றும் சம்பந்தப்பட்ட சபாவின் அனுமதி பெற்று அப்படியே முழுமையாகத் தர முடியும்..."

புரட்சிகரமான இந்த முயற்சி மட்டும் வெற்றி பெற்றால்... விளைவுகள் என்னவாக இருக்கும்?

– இந்தக் கேள்விக்கும் இந்த வெப் சைட்டிலேயே பதில் இருக்கிறது: செம்மங்குடி அளித்துள்ள பிரத்யேக பேட்டியில் :

"பப்ளிசிடி அதிகமானால் கலை நீர்த்துப் போயிட வாய்ப்பு இருக்கு. ஒரு சிறந்த கலைஞன் சமரசம் செய்து கொள்ளாமலே பெருவாரியான ரசிகர்கள் ஆதரவைப் பெற முயற்சி செய்ய வேண்டும்... ஆறு பேருக்கு சமைக்கும்போது சாப்பாட்டின் தரத்துக்கு உத்தரவாதம் தரமுடியும். ஆனால் இரண்டாயிரம் பேருக்குச் சமைத்தால் என்னத்தைப் போட்டுச் சமைத்தோம் என்பதே புரியாது... எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்..."

இந்த எச்சரிக்கையை உலகளாவிய அளவில் எடுத்துச் சென்று வழங்கும் வல்லமையும் இன்டர்நெட்டுக்கு இருக்கிறதே!

— ஸ்ருதி கீர்த்தி



தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகும் 'சக்திமான்' தொடரில் நடித்து, வாண்டுகளின் பேரபிமானத்தைப் பெற்றிருக்கும் முகேஷ் கன்னாவை ஒரு தொகுதியில் நிறுத்தினால் போட்டியிடும் மற்ற வேட்பாளர்கள் எல்லாம் டெப்பாசிட்டைப் பறிகொடுக்க வேண்டியதுதான்!

முகேஷ் கன்னா, 'சக்திமான்' உடையணிந்து சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்துக்கு வந்தபோது, ஸ்டேடியமே திமிலோகப்பட்டது. அவருடன் போட்டோ எடுத்துக் கொள்ள, கைகொடுக்க, கிட்டே இருந்து பார்க்க என்று படிப்படியாய் விலகிப் போய், கடைசியில், மேடையிலிருந்து கையசைத்தாலே பெரிய விஷயம் என்னும் அளவுக்கு, கூட்டம் சொல்லிமாளவில்லை! ஒரு லட்சம் பேருக்குமேல் வந்ததாக, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் பெருமையுடன் சொன்னார்கள்.

ஸ்டேடியத்தில், இலவசமாய் விநியோகிக்கப்பட்ட ஸ்டிக்கரை வாங்கவும் கியூ; பத்து ரூபாய்க்கு காமிக்ஸ் புக்ஸ் வாங்கவும் கியூ; இன்னொருபுறம் மாறுவேடம் போட்ட குழந்தைகளின் கியூ. பாரதிதாசன் இருந்தால் எங்கெங்கு காணினும் கியூதானடா! என்று பாடியிருப்பார்!

மறுதினம் பிற்பகல் பிரஸ் மீட். தொடர்ந்து லஞ்ச் சாப்பிட்டபடியே பேசினார் முகேஷ் கன்னா. மகாபாரதத்தில் 'பீஷ்மர்' வேடத்தில் நடித்துப் பெரும் புகழ் பெற்ற முகேஷ், இன்னும் பிரம்மச்சாரி. வயதைக் கேட்டால், ''பெண்களிடம் வயதைக் கேட்கக் கூடாது; ஆண்களிடம் வயது, சம்பளம் இரண்டையுமே கேட்கக் கூடாது'' என்று சொல்லிச் சிரிக்கிறார். 'தான் நடிக்கும் கேரக்டரின் வயதுதான் நடிகனின் வயதும்' – சிரிப்பு தொடர்கிறது.

''பீஷ்மராக தாடி; அதன் பின் விஸ்வாமித்ரராக தாடி. தொடர்ந்து வந்த பல டி.வி. தொடர்களில் வயசான ரோல் என்பதால் தாடி! நான் சினிமாவிலும் ஷாருக்கான் முதல் எல்லாருக்கும் அப்பா என்பதால் தாடி. ஐயோ... தாடி ஒட்டி... தாடி ஒட்டி என் தாடைகள் பிய்ந்து போய் விடுமோ என்ற பயம் வந்து விட்டது! சக்திமான் தொடரில், முகத்தை மழுங்க வழித்துக் கொண்டு நடிப்பதில் ஆஹா... அப்படி ஒரு நிம்மதி... ஜாலி!'' என்கிறார் தன் மழு, மழு கன்னத்தைத் தடவியபடி.

''சூப்பர்மேன், ஸ்பைடர் மேன் என்று நம் நாட்டுக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கிற கேரக்டர் போல, ஏன் இந்திய பாரம்பரிய முறையில் கேரக்டர் ஒன்றை உருவாக்கக் கூடாது என்கிற எண்ணம் எனக்கு எட்டு வருடங்களுக்கு முன் வந்தது. அது போன்ற கேரக்டர் ஒன்றில் நடித்து, ஒரு திரைப்படம்

எடுக்கவே நான் ஐடியா வைத்திருந்தேன். ஆனால், இன்றுள்ள சூழ்நிலையில் சினிமாவை விட, டீ.வி. சீரியல் பெட்டர் என்பதால், 'சக்திமான்' டீ.வி தொடராய் எடுக்கப்படுகிறது. நாற்பது எபிசோட்கள் ஒளிபரப்பாகி விட்டன. இன்னும் 64 வாரங்கள் பாக்கி."

ஆரம்பித்த சில வாரங்களிலேயே 'சக்திமான்' தொடர், குழந்தைகள் மத்தியில் பிரமாதமான வரவேற்பைப் பெற்று விட்டது. இன்று, அம்மாக்கள் சிலர், "சக்திமான்! என் பையன் தினமும் பால் குடிக்க ரொம்ப அடம் பிடிக்கிறான். ஒழுங்காய் பால் குடிக்கும்படி அட்வைஸ் செய்யுங்கள் பிளீஸ்!" என்று கடிதம் எழுதும் அளவுக்கு அபிமானம் பெற்று விட்டார் சக்திமான்!

கங்காதர் என்கிற அப்பாவி, பத்திரிகை போட்டோ கிராபர்தான் அபயக்குரல் கேட்கிற போது, அதித சக்தி வந்து, 'சக்திமானாக' மாறுகிறார். சக்திமான் தோன்றுகிற போதும், மறைகிறபோதும், 'விஷ்ஷ்' என்று பம்பரமாய்ச் சுற்றுவார். அதைப் பார்த்துவிட்டு தாங்களும் சுற்றி, கீழே விழுந்து தலையில் அடிபட்டுக் கொண்ட சிறுவர்கள் ஏராளம் என்று பெற்றோர்களிடமிருந்தும், டாக்டர்களிடமிருந்தும் புகார் வரத் தொடங்கியதை யடுத்து "வேகமாய்ச் சக்திமான் மட்டுமே சுற்ற வேண்டும். நீங்கள் அதை முயற்சிக்கக் கூடாது" என்று தன் ரசிக மகாஜனங்களுக்கு அட்வைஸ் செய்ய ஆரம்பித்து விட்டார்

வந்தார் சக்திமான்!

சின்னத் திரையில்.

முகேஷ் கன்னா, கடந்த பொதுத் தேர்தலுக்குமுன் பி.ஜே.பி.யில் சேர்ந்து, அந்தக் கட்சிக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரம் செய்தார். பல ஊர்களிலும், அவர் கலந்து கொண்ட கூட்டங்களில், முதல் வரிசைகளில் சிறுவர்கள் மட்டுமே உட்கார்ந்திருந்ததில் அவருக்கே ஆச்சரியம். "இவர்களுக்கும் வாக்குரிமை கொடுத்து, ஆளுக்கு அரை வோட்டு என்றால் கூட, பி.ஜே.பி. ஆட்சியைப் பிடித்து விடுவது சுலபம்'' என்று கூட்டங்களில் பேசினாராம் முகேஷ்.

டெல்லித் தொகுதியொன்றின் சந்துகள் நிறைந்த பகுதியில் வீடுவீடாக வாக்கு சேகரிக்கச் சென்றபோது, ஒரு கட்டத்தில் வாண்டுகள், "சக்திமான்... சக்திமான்... சக்திமான்...!'' என்று உரக்கக் குரலெழுப்ப, பி.ஜே.பி. பிரமுகர்களுக்கு எதிர்பாராத இனிய அதிர்ச்சி!

"முகேஷ்! உங்களுக்கு சக்திமானைப் பிடிக்குமா? கங்காதரைப் பிடிக்குமா?" என்று கேட்டால், புனா திரைப்படக் கல்லூரியில் படித்தவரான முகேஷ் கன்னா, 'என் நடிப்புத் திறமைக்கு வேலை தரும் கங்காதர் பாத்திரம்தான்' என்கிறார்.

"இன்று இந்தியா உள்ள சூழ்நிலையில் அக்கிரமங்களை அழிக்க, நிஜமாகவே ஒரு சக்திமான் தேவை என்று நினைக்கிறீர்களா?"

"கட்டாயம். ஆனால், ஒரு சக்திமான் போதாது; ஓராயிரம் சக்திமான்களாவது உடனடியாய்த் தேவை!" ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**



தவறு! தவறு! தவறு!

✉ பெரும்பான்மையான அரசு என்பதால் கலைக்கக் கூடாது என்பது தவறான வாதம். தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு உபயோகமில்லாத அரசைக் கலைப்பதில் தவறில்லை. பெரும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவன், நல்லபடியாக உண்டு, களித்து வாழ்கிறான் என்பதாலேயே அவன் நோய்க்கு சிகிச்சை தேவையில்லை என்பதைப் போல் உள்ளது உங்கள் வாதம்.
தூத்துக்குடி – 2, கே. சுதர்ஷன்.

✉ ஒரு மெஜாரிட்டி அரசு தவறாக நடக்கும்பட்சத்தில், அடுத்தத் தேர்தல் வரை பொறுத்திருந்து, அதனால் பாதிக்கப்பட்ட மக்களே அந்த ஆட்சியினைத் தூக்கி எறியும்படி செய்ய வேண்டுமேயல்லாது, நடுவினிலே அந்த ஆட்சியைக் கலைப்பது, ஜனநாயக விரோதம் மட்டுமல்லாது, மக்களின் அனுதாபத்தை அக்கட்சிக்குப் பெற்றுத் தந்து விடும் என்பதை அழகாகத் தலையங்கத்தில் தெளிவுபடுத்தியுள்ளீர்கள்.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ ஏற்கெனவே பெண் முதல்வர் தமிழ் நாட்டை ஆட்டிப் படைத்தது போதாதா? நீங்கள் முதல்வர் ஆனால் என்று கல்லூரிப் பெண்களிடம் கருத்துக் கேட்டு வெளியிட்டு கதி கலங்கடிக்க(?) வேண்டுமா!
சென்னை–23, த. சத்தியநாராயணன்.

✉ தேரு விளையாட்டரங்கம் பற்றிய புகாருக்கு ஜெயலலிதாவைப் பாராட்டியிருப்பது மிகவும் தவறானது. ஜெயலலிதா ஆட்சியில் நடந்தது என்ன? எத்தனை விளையாட்டரங்கங்கள் வீணாக்கப்பட்டன. எங்கள் மாவட்டத்திலுள்ள மிகச் சிறந்த அண்ணா விளையாட்டரங்கு, முதல்வர் ஜெயலலிதாவுக்காக நடத்திய விழாவில் பாழானது. ஜெயலலிதா பண்போ, பக்குவமோ இல்லாத ஒரு அரசியல்வாதி. இதைப் புரியாமல் எழுதியதும், அவருடைய படத்தைப் போட்டதும் தவறு! தவறு! தவறு!
பாலூர், கே. முரளி.

✉ சினிமாவில் நடிக்கப் போகும் லட்சுமி சிவபார்வதி பற்றிய செய்தியை முதலில் வெளியிட்ட பெருமை கல்கியையே சாரும்.
திருமானூர், ஏ.ஆர். மார்ட்டின்.

✉ மாமியார் – மருமகள் என்பவர்கள் அம்மா மகள் போல பழக வேண்டும் என்பதற்கு நல்லதொரு இலக்கணமாகத் திகழ்கிறார்கள் திருமதி மதுராபாய் மகேஸ்வரியும் டாக்டர் அஞ்சலியும். பாராட்டுக்கள்.
திருச்சி–6, இ.மா. தமிழழகன்.

✉ திருமதி சுஜாதா அவர்கள் தம் கணவர் பிரபல எழுத்தாளர் ரங்கராஜன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அவருக்கு அம்மா அப்பாதான் முக்கியம். அதன்பிறகு கூடப் பிறந்தவர்கள். அப்புறம்தான் மனைவியும் மகள்களும்" என்று சொல்லி இருக்கிறார். இது நம் நாட்டின் இளைஞர்களுக்குச் சிறந்த அறிவுரை.
சென்னை–73, கே.வி. ராமன்.

✉ பாலியல் வன்முறைக்கு பலியாகி 25 வருடமாக ஒரு பெண் கோமா நிலையிலேயே இருக்கிறார் என்ற செய்தி அதிர்ச்சியையும் மிகுந்த வேதனையையும் அளிக்கிறது. அருணாவின் சோகத்தை வெளியிட்ட பிங்கி விரானிக்கு விருது கிடைக்கலாம்; ஆனால் அருணாவின் நிலை எங்கள் நெஞ்சில் ரணமாக இருக்கிறதே?
தூத்துக்குடி–1, ப. சுகுமார்.

✉ அமரர் பி.எஸ். வீரப்பாவின் 'வாள் போர்' திறமையை 'மின்னல்களின் மின்னல்' என்று 'தராசு' வர்ணித்தது சபாஷ்! சரியான வார்த்தை!
நீலாம்பூர், ஏ.எஸ். இராமசாமி.

✉ நாடகக் குழுவினருக்கு ஊர்மிளா நன்மையளிக்கும் விதத்தில் ஒரு நகைச்சுவைக் கதையை நளினமாகப் படைத்திருந்தார் பா. ராகவன். நடனத்தின் கைவண்ணம் 'இஸ்' தொடருக்குத் தனிச் சி(ரி)றப்பை அளித்தது!
நெய்வேலி, சு. ஸ்ரீகாந்த்.

✉ சத்தியசந்தனின் 'ஆகஸ்ட் – 15' கதையல்ல! ஒரு காவல் நிலையத்தின் அப்பட்டமான படப்பிடிப்புத்தான் அது!
ஊரப்பாக்கம், மன்னை நேசன்.

வட்டமேஜை

கல்கி 18.10.98



அது ஒரு டாகுமெண்டரிப் படம். தியேட்டரில் படம் போடுவதற்கு முன்னால் நமக்குக் கொட்டாவி வருவதற்கென்றே போட்டுக் காட்டுவார்களே, அந்த ரகமில்லை. டாகுமெண்டரி முடிந்ததும், இருக்கையை விட்டு எழுந்திருக்கிற யாரும் ஒரு சொட்டுக் கண்ணீராவது விடாமல் எழுந்து போய் விட முடியாது. படத்தின் பெயர்: "ஐ.என்.ஏ." (தி இண்டியன் நேஷனல் ஆர்மி).

நேதாஜியின் வாழ்க்கைக் குறிப்புகளை இடையிடையே காட்டிக் கொண்டு, நேதாஜியின் ஐ.என்.ஏ. எனப்படும் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய தியாகிகளின் பேட்டிகளுமாகப் படம் விரிகிறது.

ஐ.என்.ஏ.யைச் சேர்ந்த தியாகி ராமுத் தேவர் எழுதிய கடித வரியுடன் படம் முடிகிறது:

"அன்புள்ள அம்மா,

உனக்குக் கடிதம் எழுதாததற்காக என்னை மன்னித்துக் கொள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தால், நாளை 7.7.1944 வெள்ளிக்கிழமை, காலை 9 மணிக்குத் தூக்கிலிடப்பட இருக்கிறேன். இதில் எனக்கு வருத்தமோ கவலையோ இல்லை. ஏனென்றால், நான்

அசத்திய INA!

கடவுளுக்கு எதிராக எதுவும் செய்யவில்லை. என் இளைய சகோதரிகளுக்கு என் அன்பைத் தெரிவிக்கவும். இந்த உலகில் நான் அவர்களை திரும்பப் பார்க்கப் போவதில்லை. ஆனால், எதிர்கால உலகில் நிச்சயம் சந்திப்பேன்.

உன் அன்பு மகன்,
ராமுத் தேவர்,
6.7.1944



(ராமுத் தேவரின் தாய் கடைசிவரை அரசாங்கத்தின் பென்ஷன் கிடைக்காமல் இறந்து போனார். இன்னும் அவரின் பென்ஷனுக்கான விண்ணப்பம் அரசிடம் கிடப்பில்தான் கிடக்கிறது. ராமுத்தேவரின் தங்கை இன்றைக்கும்

• சொர்ணவேல்

உயிருடன் இருக்கிறார்.)

ஐ.என்.ஏ.வை இயக்கி, தயாரித்திருக்கும் இளைஞர் சொர்ண வேல், ஜீ.வி.ஐயரிடம் பணியாற்றியவர்.


'''ஐ.என்.ஏ' எடுக்கணும்னு எப்படி உங்களுக்குத் தோன்றியது?''

''ஐ.என்.ஏ பத்தி டாகுமெண்டரி எதுவும் வரலை. பி.பி.சி தயாரிச்ச எனிமி ஆப் தி எம்பையர் (Enemy of the Empire) மற்றும் நேதாஜி அண்ட் ப்ரீடம் ஆப் இந்தியா தவிர வேறு படம் எதுவும் இல்லை. இரண்டு படமும் ஐ.என்.ஏ பற்றிய படமில்லை. அதுவுமில்லாம ஐ.என்.ஏல 80 சதவீதம் தமிழர்கள்தான் பணியாற்றினாங்க. சுதந்தரப் பொன் விழாவை ஒட்டி 'ஐ.என்.ஏ'வை வெளியிடலாம்னு நெனைச்சேன். ஆனா தூர்தர்ஷன்ல என்கரேஜ் பண்ணலை. யாரும் நிதி குடுக்கத் தயாரா இல்லை. இப்போ ஐ.என்.ஏ படத்துக்கு, 'பெஸ்ட் டாகுமெண்டரி விருது' கிடைச்சிருக்கு. இப்ப டெல்லி தூர்தர்ஷன் ஐ.என்.ஏ.வை டெலிகாஸ்ட் பண்றதா சொல்லியிருக்கு. எப்பன்னுதான் தெரியலை.''

''இந்தப் படம் எடுக்க உந்துதலா இருந்தது எது?''

''என்னோட அப்பா பர்மா, சிலோன்லாம் போய்ட்டு வந்தவர். அவர் ஐ.என்.ஏ பற்றி நிறையச் சொல்வார். அப்புறம் பேராசிரியர் மா.சு. அண்ணாமலை அவர்கள் நேதாஜியைப் பற்றி எழுதின ஒரு புத்தகம் இதெல்லாம்தான் ஐ.என்.ஏ எடுக்க காரணமா இருந்துச்சு. அப்புறம் தியாகிகள் நல்லையா, ஜெபமணி, ராஜாமணி இவங்களைச் சந்திச்சப்புறம் ஐ.என்.ஏ எடுக்கற உறுதி அதிகமாயிடுச்சு. நேதாஜிகிட்ட பெர்சனல் கான்பிடன்ஷியல் செகரட்டிரியா பணியாற்றியவர் இ. பாஸ்கரன். அவர் சொன்னார்: இந்தப் படம் 8,9,10 படிக்கிற பசங்க மத்தியில போனாக்கூடப் போதும். பெரிய வெற்றிதான்னு. ஐ.என்.ஏ தியாகிகளுக்கு 1972 வரைக்கும் பென்ஷன் கூடக் கிடைக்கலை. இதெல்லாம் இந்தப்படம் உருவாகக் காரணமா இருந்துச்சு.'' ●

— கே. பாலு





அடையாறு திரைப்படக் கல்லூரியைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால், சென்னை பச்சையப்பன் கல்லூரியை வேறு எந்தக் கல்லூரியும் முந்திக் கொள்ள முடியாது! அந்த அளவுக்குப் பச்சையப்பன் கல்லூரியின் முந்நாள் மாணவர்கள் திரையுலகில் நுழைந்து கலக்கியிருக்கின்றனர்; கலக்கிக் கொண்டிருக்கின்றனர்!

பேரறிஞர் அண்ணா, முரசொலி மாறன் இருவரும் முழு நேர அரசியல்வாதிகள் என்றாலும், அவர்கள் கதை வசனத்தில் சூப்பர் ஹிட் ஆன சினிமாக்களை தமிழ் மக்களால் மறக்கவும் முடியுமா? (முரசொலி மாறனுக்கு, தமிழக அரசின் 'கலைமாமணி' விருதுகூட வழங்கப்பட்டுள்ளது)

டைரக்டர் ஏ.சி. திருலோகச்சந்தர்,

சமீபத்தில் சென்னை சன் பிளாசாவில் 'கதையும் திரையும்' என்றொரு பகிர்வரங்கம் நடந்தது. 'ஜோதி விநாயகம் நினைவு சிறு

கதையும்

கதைப் பரிசுத் திட்டம்' என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில் சினிமாவுக்குப் படையெடுக்கும் எழுத்தாளர்களுக்கு உபயோகமான சில விஷயங்களை விளக்கினார் சென்சார் அதிகாரியும், 'மோகமுள்' இயக்குநருமான ஞானராஜசேகரன்.

''பொதுவாகவே எழுத்தாளர்களுக்கு சினிமா மீது ஆர்வமும், அதனாலேயே ஒரு வெறுப்பும் உண்டு. எழுத்தாளர்களுக்கு சினிமாவை அதன் தன்மையோடு அறிமுகப்படுத்துவதற்காகவே இந்தப் பகிர்வரங்கம்'' என்றார், வரவேற்றுப் பேசிய எழுத்தாளர் எஸ். சங்கரநாராயணன்.

''இன்றைய தமிழ் சினிமா, கதைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறது.

பச்சையப்பன் திரைப்படக் கல்லூரி?

டைரக்டர் ஸ்ரீதரின் நெருங்கிய உறவினரான சி.வி. ராஜேந்திரன், வி.சி. குகநாதன் எல்லாம் பச்சையப்பனின் மாணவர்கள் தாம்!

ஒரே வருடம் (பி.யூ.சி) இங்கு படித்தாலும், தமிழ்த் திரையுலகில் பி.வாசுவின் பங்களிப்பு ஏராளம். அதேபோல பச்சையப்பன் கல்லூரியின், ஈவினிங் காலேஜில் எம்.ஏ. வரலாறு படித்தவர் டைரக்டர் வி. சேகர். அப்போது வரலாற்றுத் துறையின் மாணவர் தலைவரும் இவரே.

பி.எஸ்சி (பௌதீகம்) மாணவர் மட்டுமின்றி கல்லூரி கிரிக்கெட் அணியிலும் இடம் பெற்றிருந்தவர் தலைவாசல், அமராவதி போன்ற படங்களின் இயக்குனரான செல்வா.

பச்சையப்பன் கல்லூரியில் படித்த போதே, சினிமாவில் நுழைய வேண்டும் என்று ரொம்ப 'ஆசை'ப்பட்டவர் வசந்த் என்பது உங்களுக்குத் தெரியுமா? அல்லது சூரியன் போன்ற படங்களை இயக்கிய பவித்ரன், எம்.ஏ படித்ததும் பச்சையப்பனில்தான் என்பது தெரியுமா?

பச்சையப்பனில் படித்த நாட்களில், தமது கவிதைத் தொகுப்பான 'வைகறை மேகங்களை' எழுதி வெளியிட்டவர் வைரமுத்து. இவர் தமது இன்னொரு கவிதைத் தொகுப்பினை, பச்சையப்பன் கல்லூரிப் புல்வெளியின் பனித்துளிகளுக்குக் காணிக்கையாக்கினார் என்பது பலருக்குத் தெரியாத சேதி.

இசையமைப்பாளர் சிவாஜிராஜா, நடிகர்கள் சுமன், அருண்பாண்டியன், வி. கோபாலகிருஷ்ணன், ராபர்ட் (ராஜசேகரன்) ஆகியோரும்கூடப் பச்சையப்பாஸ் ஸ்டுடென்ட்ஸ்தான்! இன்னும் சிலர் பேர்கள் விடுபட்டிருக்கலாம். அதற்காக ஸ்டிரைக்கெல்லாம் பண்ண வேண்டாம்!

— கௌதம்

கோடம்பாக்கத்துக் கதை எடுபடவில்லை. சினிமா உலகம் எழுத்தாளர்களை நோக்கி வர ஆரம்பித்

திரையும்

திருக்கிறது. சினிமாவுக்கு ஏற்ற இலக்கிய வடிவம் குறு நாவல்தான். அகிராகுரோசேவா, பெர்க்மேன், சத்யஜித்ரே போன்றவர்கள் பெரும்பாலும் குறுநாவலைத்தான் சினிமாவுக்கு அடாப்ட் பண்ணியிருக்கிறார்கள். சிறுகதையின் நீட்சியான வடிவம்தான் குறுநாவல். நாவலைவிட குறுநாவல் வடிவமே சினிமாவுக்கு ஏற்றது" என்றார் ஞான ராஜசேகர்.

சினிமாவில் பயன்படும் ஒன்லைன் ஆர்டர், நாட், சினிமாடிக், மியூசிக், டைரக்ஷன், டயலாக், ஆக்டிங், டப்பிங், ஆர்ட் டைரக்ஷன், ஸ்பெஷல் எபெக்ட்ஸ் பற்றியெல்லாம் விரிவாகப் பேசினார்.

எழுத்தும் சினிமாவும் வெவ்



• ச. ஞானராஜசேகரன்

வேறானவையாக இருந்தாலும், ஒன்றுக்கொன்று தொடர்பிருக்கிறது. நல்ல எழுத்தாளர்கள் சினிமாவை முறையாகக் கற்றுக் கொண்டால், நல்ல சினிமாவைத் தர முடியும் என்கிற நம்பிக்கையை இந்தப் பகிர்வரங்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

— கே. பாலசுப்ரமணியன்

படம்: ஸ்ரீஹரி

பா. ராகவன்

இது ஓர் எழுத்தாளரைப் பற்றிய கதை. இந்த எழுத்தாளரை உங்களுக்கு ரொம்ப வருஷமாகத் தெரியும். குறைந்தது முப்பது, முப்பத்தைந்து வருஷங்களாகவாவது. இயற்கை எய்திவிட்ட அந்தக் காலத்து மணிக்கொடி, பிரசண்ட விகடன், சிவாஜி, சுதேசமித்திரன் தொடங்கி இந்தக் கல்கி, குமுதம், விகடன் வரை அவரை அவ்வப்போது பார்த்திருப்பீர்கள்.

ஒரு காலத்தில் அவர் எழுத்துலக சூப்பர் ஸ்டார். (அந்தக் காலத்து பாஷையில் ஜாம்பவான்.)

தமிழின் துரதிர்ஷ்டம், கொஞ்ச வருஷமாக அவருக்குப் பத்திரிகைகள் கட்டாய ஓய்வு கொடுத்துவிட்டன. சநாதனமான இலக்கிய இதழ்கள் அவர் எழுத்து 'ஸ்டேல்' ஆகிவிட்டதாக விமர்சித்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள, வாரப் பத்திரிகைகள் நடுக்கம் மிக்க அவர் கையெழுத்தைப் பொறுத்துக் கொண்டு படிக்கச் சமயமில்லாமல், அவர் ஸ்டாம்பு வைக்காவிட்டாலும் கர்மசிரத்தையாக அவர் கதைகளைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தன.

ஆனால், பாவம் செய்கிறோம் என்ற உறுத்தல் இருந்து கொண்டே இருப்பதால், தீபாவளி சமயத்தில் மட்டும் அவரிடம் கதை கேட்டுக் கடுதாசி போடுவார்கள்.

நமது எழுத்தாளர் பெருந்தன்மை மிக்கவர். ஈகோ போன்ற கெட்ட பழக்கங்கள் அவருக்கு எப்போதும் இருந்ததில்லை. இவ்வாறாக, இன்ஷூரன்ஸ் நோட்டீஸ் போல வருடாந்தரக் கடிதங்கள் வரும்போதெல்லாம் கதையை மீறி அவருக்குக் கருணை பீறிட்டு விடும்.

''போறான் போ. 'இஷ்யூ'வுக்கு ஒரு வெயிட் வேணும்னா கதறிண்டு என்கிட்டேதான் வரான்கள். முறுக்கிண்டு, 'அனுப்ப மாட்டேன்'னு அடம் பிடிக்க மனசு ஒப்



தீபாவளி மலர் எழுத்தாளர்

புத்துக்கலையே?'' என்பார் தம் மனைவியிடம்.

இந்த இடத்தில் அவரது மனைவியைப் பற்றி இரண்டு வரி சொல்லாவிட்டால் ஏழு ஜென்மத்துக்கும் சோறு கிடைக்காது.

நமது எழுத்தாளரைத் தமது பதினெட்டாவது வயதில் மணந்து கொண்டபின் அந்தப் பெண்மணி இக வாழ்க்கையின் அற்ப சந்தோஷங்கள் பலவற்றைத் தியாகம் செய்திருக்கிறார். சேர்ந்து ஒரு தரம் சொட்டும் தமிழ்ப்படத்துக்குப் போனதில்லை. கடற்கரையில் சோளக் கொண்டை சாப்பிட்டதில்லை. குடும்ப விசேஷங்கள், கோவில் குளம் என்று எதற்கும் உடன் அவர் வர மாட்டார். எங்காவது கிளம்பும் யோசனை அவரது திருமதிக்கு வரும் போதுதான் நமது எழுத்தாளருக்குக் கற்பனை ஊற்று பீறிட்டு, 'என்னை இறக்கு, இறக்கு' என்று இடுப்புக் குழந்தை போல அடம் பிடிக்கும்.



இதெல்லாம் கூடப் பிரமாதமில்லை. 'யோசிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டார் என்றால் குறைந்தது இரண்டு, இரண்டரை மணி நேரத்துக்கு அவர் ஒரு ஜடப் பொருளாகி விடுவார். வாயிலிருந்து லேசில் ஒரு வார்த்தை பிடுங்கி விட முடியாது. முக்கியமாக ஏதும் பேசினால் கூட, பதில் சொல்லிவிட மாட்டார். இது மாதிரித் தருணங்களில் பெரும்பாலும் அவர் இல்லத்தில் மூன்றாம் உலக யுத்தம் உருக் கொண்டு விடும்.

சுமார் பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் அவருக்கு சாகித்ய அகடமியோ என்னவோ, ஒரு விருது கொடுத்தபோது, வாரப் பத்திரிகைகளெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு அவர் மனைவியை பேட்டி காண முற்றுகை இட்டன. (இது மாதிரியான சந்தர்ப்பங்கள் தவறவிடப்படுவதே இல்லை.)

அப்போது அவர் சொன்ன ஒரு கருத்தை – அதன் உள்ளார்ந்த சோகத்தை உணராமல் – ஜோக்காகப் பிரகரித்திருந்தார்கள். வருஷங்கள் பல ஆகிவிட்டாலும் நமது எழுத்தாள

ரால் இன்னமும் மறக்க முடியாமல் இருக்கிற அந்த வரி இதுதான்:

"எழுதறதுக்கு அவருக்கு விருது குடுக்கறேன்; சரி. அவரை சகிச்சுக்கறதுக்கு எனக்கு யார் விருது குடுப்பா?"

மனச்சாட்சியோ என்னவோ உறுத்தி, அன்றிலிருந்து எழுத்தாளர் தம் மனைவியையும் கொஞ்சம் கவனிக்க ஆரம்பித்தபோது தான் தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு பக்கக் கதை என்னும் போதை வஸ்துவுக்கு அடிமையாகத் தொடங்கின.

தொடர்வதான நாட்களில் நமது எழுத்தாளர் உயிரை உருக்கி வடித்த அற்புதமான கதைகள் பல, நீளம் காரணமாக நிராகரிக்கப்பட்டன. பிறகு, நிராகரிக்கப்படுவதற்காகவே புதிது புதிதாகப் பல காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. முன் சொன்னது போல, தீபாவளி சமயங்களில் மட்டும் அவர் தேவைப்பட்டார். (குறைந்தது ஒரு ஃபாரம் நிரம்பும்.)

ஆனால் சூரியனின் சுடரை சல்லாத் துணிகள் தடுத்துவிடுமா என்ன? (அவரது பிரசித்தி பெற்ற உவமை இது.) வருஷத்துக்கு ஒரு கதை என்றாலும் அது அடுத்த தீபாவளி மலருக்கு முந்தைய தினம் வரை பேசப்படும் கதையாக எப்படியோ அமைந்து விடும்.

பொறுக்குமா, மகா பெரியவர்களுக்கு? மலரின் கனமே அவர் படைப்புத்தான் என்றிருந்த நிலைமையில் ஒருநாள் இடி விழுந்தது.

இலவச இடியாப்ப மாவு பாக்கெட். சவர பிளேடு. கொசு வர்த்திச் சுருள். மேலும் சுமார் ஒரு வார காலத்துக்கான மளிகை சாமான்களை இலவசமாகத் தரப் பிரபல நிறுவனங்கள் முன்வந்தபோது, மலர் விளம்பரங்களில் அவர் பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டு, பிரதான இடங்களை சானிடரி நாப்கின் நீங்கலான உபயோகப் பொருட்கள் பிடித்துக் கொண்டன.

"வெறும் வியாபாரிகள்" என்று ஆழ்மனத்திலிருந்து கசப்புச் சாறெடுத்து எல்லா பத்திரிகைகள் மீதும் நாலு துளி தெளித்துவிட்டு, எழுதுவதில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

கடிதம் அனுப்பிவிட்டுக் காத்திருந்து பார்த்த பத்திரிகைகள், நமது எழுத்தாளரின் கதை வராததால் அவ்விடங்களில் பிரபலங்கள் செய்த தீபாவளி பட்சணங்கள் போன்ற இலக்கியத் தரமான கட்டுரைகளைப் பிரசுரித்துவிட்டு, மறுக்காமல் இலவசப் பிரதி பட்டியலிலிருந்து அவர் பெயரை நீக்கிவிட்டன.

வேறு வழியில்லாமல் பத்திரிகைத் துறவறம் வாங்கிக் கொண்டு விட்ட நமது எழுத்தாளருக்கு, இவ்வாண்டு கடும் சோதனை வந்து சேர்ந்தது. சத்திய சோதனை என்று குறிப்பிட்டாலும் தவறில்லை; கோபித்துக் கொள்ள காந்தி உயிரோடு இல்லை.

மூன்று, நான்கு வருடங்களாக முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருந்தவரிடம், இவ்வாண்டு தீபாவளி மலருக்குக் கதை கேட்டு ஒரு பத்திரிகை அலுவலகத்திலிருந்து கடிதம் வந்திருந்தது.

அவரது இயல்பான பெருந்தன்மை, தவிர வயது காரணமாகப் பழைய கசப்புகள் மறந்திருக்க, உற்சாகமாக எழுத உட்கார்ந்தார்.

"சொறி பிடிச்சவன் விரலும், பேனா பிடிச்சவன் கையும்..." என்று ஏதோ உவமையுடன் சொல்ல வந்த அவரது மனைவி, சட்டென்று அடங்கி உள்ளே போய்விட்டாள். நமது எழுத்தாளர் ஓர் அக்கினிப் பார்வை பார்த்ததுதான் காரணம்.

அவரளவில் எழுத்து ஒரு தொழிலல்ல; பிரபலத்துக்கான கருவியல்ல; பொருளாதாரத் தேவையையும் ஒன்றும் பிரமாதமாக அது தீர்த்து வைக்கிறதில்லை. ஒரு கதைக்கு வருகிற சன்மானத்தில் இப்போதெல்லாம் இரண்டு அண்டர்வேர்கள் கூட வாங்க முடிகிறதில்லை. பின் எதற்காக எழுதுகிறார்?

'நான் சுவாசிக்காமல் இருக்கிறபோதுதான் எழுதாமல் இருப்பேன்' என்று முன்பு ஒரு தரம் ஒரு பேட்டியில் தான் கூறியதைப் பெருமையுடன் நினைவு கூர்ந்து கொண்டார்.

பிள்ளையார் சுழியைப் போட்டுவிட்டு, பத்திரிகை அலுவலகத்திலிருந்து வந்திருந்த கடிதத்தை எடுத்து இன்னொரு தரம் படித்துப் பார்த்தார்.

அன்புடையீர், வணக்கம். இவ்வருட தீபாவளி மலருக்குத் தங்களுடைய மேலான காதல்/சமூக/சரித்திர/கிரைம்/நகைச்சுவை/சோக/அரசியல் சிறுகதையை இன்னும் பத்து நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம் என்று பிரிண்ட் செய்யப்பட்டிருந்த காகிதத்தில் கலையை டிபார்ட்மென்ட் ஸ்டோராக்கி, இவருக்குக் காதல் பிரிவை ஒதுக்கி, மற்றவற்றைக் குறுக்காக அடித்திருந்

உலகின் பணக்கார நாடு என்ற பெருமையைப் பெறும் 'சவுதி அரேபியா'வில் ஒரு தியேட்டர் கூட இல்லை.
தகவல் : மலர் சூர்யா

தார்கள்.

உலகம் மாறுகிறது. ரசனைகள் மாறுகின்றன. கலை, இலக்கியம் மீதான மதிப்பீடுகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இது ரேஸ். மூச்சிறைத்து நின்று விட்டவனை யாரும் திரும்பிப் பார்க்கப்போவதில்லை. ஓடுபவன் கவனிக்கப்படுகிறான். வெற்றி பெறுபவனே போற்றப்படுகிறான்.

நல்லது. நமது எழுத்தாளர் ஒரு முடிவுக்கு வந்து, பேனாவைத் திறந்தார். நவீன மோஸ்தரில் முற்றிலும் மாறுபட்ட ஓர் அற்புதக் காதல் விருந்து.

அவர் எண்ணியதை விடவும் கதை மிகச் சிறப்பாகவே வந்திருப்பதாகத் தோன்றியது. கதையை அனுப்பக் கவரில் போட்டபோது, இந்தப் பத்திரிகைக்கா என்று மனம் கொஞ்சம் யோசித்தது. அந்தப் பத்திரிகையை அவருக்கு அவ்வளவாகப் பிடிக்காது. உள்ளே யாருக்கும் இலக்கியம் தெரியாது; லே-அவுட் சென்ஸ் கிடையாது என்று பல காரணங்கள் அதற்கு வைத்திருந்தார்.

ஆனாலும் வேறு வழியில்லை. இந்த வருடம் அவர்களுக்கு மட்டும்தான் தன் ஞாபகம் வந்திருக்கிறது. கீழ்த்தரமான வியாபார உத்திகளில் பல படிகள் தரமிறங்கி இருந்தாலும் தன்னை நினைவு கூர்ந்து அழைத்ததன் மூலம் அவர்கள் பிறரை விட உயர்ந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டார்.

கதையைத் தபாலில் சேர்த்துவிட்டு, தீபாவளி மலர் வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் இன்னார் எழுதுவது என்றெல்லாம் முன் குறிப்பு கொடுத்து



தமிழ் நடிகைகளில் முதன் முதலில் தேசிய விருது பெற்ற நடிகை லட்சுமி.

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற ஒரே தமிழ் நடிகை மனோரமா.

தமிழில் இலட்ச ரூபாய் வாங்கிய முதல் நடிகை கே.பி. சுந்தராம்பாள்.

தகவல் : மலர் சூர்யா

(கட்டம் கட்டி, அங்கே ஒரு கலர் ஸ்கிரீன் வைத்து) பிரசுரித்தால், புரட்டுபவர் கவனம் கவர சுலபமாயிருக்கும்; பழைய ரசிகர்கள் விழுந்தடித்துப் படிப்பார்களே என்றெல்லாம் சும்மா படுத்துக் கொண்டிருக்கும்போது நினைத்துப் பார்த்துக் கொண்டார்.

எழுத்துலகில் இது தனக்கொரு மறு பிரவேசமாக இருக்கும் என்று எண்ணியவர், அடுத்தடுத்தக் கதைகளுக்குத் தீவிரமாக பிளாட் போட்டுக் கொண்டிருந்த வேளையில் - தீபாவளியும் வந்து, கூரியர் தபாலில் அந்த மலரும் வந்தது.

டெலிபோன் டைரக்டரி சைஸில் ஆறு புத்தகங்கள்! தவிர, இளைஞர்களின் கனவுக் கன்னிகளான வடக்கத்திய நடிகைகளின் ஆளுயர ப்ளோ-அப்கள். இந்த வயசில் ஒட்டி வைப்பதெல்லாம் அடுக்காது என்று அவற்றை ஒதுக்கி விட்டு அவசரமாக அடுத்த பார்சலைப் பிரித்தார்.

இஞ்சி மரப்பா, தலைவலித் தைலம், பூசு மஞ்சள் தூள், கடலை மிட்டாய், காலாவதியான லாட்டரிச் சீட்டுகள் உள்ளிட்ட இலவசப் பொருட்கள். அவற்றையும் புறங்கையால் ஒதுக்கினார். (அவர் மனைவி ஆசையுடன் எடுத்துக் கொண்டார்.)

ஆவல் பொங்க ஒவ்வொரு புத்தகத்தையும் கொள்ளை போகிற வேகத்தில் புரட்டிக் கொண்டே வந்தார்.

கடவுளே! மேலோட்டமான புரட்டலிலேயே எத்தனை எழுத்துப் பிழைகள் கண்ணில் படுகின்றன? இதோ, இந்தப் படத்தின் பாஸிடிவைத் திருப்பி ஒட்டி பிரிண்ட் போட்டிருக்கிறார்கள். இளம் பெண்ணின் மேலாக்கு திரும்பியிருப்பதைக் கூடவா கவனித்திருக்க முடியாது? தயாரிப்பில் என்ன ஒரு அலட்சியம்?

அந்தக் கால சுதேசமித்திரன் மலர் பற்றி அவர் பேசத் தொடங்கிய போது, "இதெல்லாம் யார் படிக்கப் போறா? எல்லாம் பம்பர் பரிசுக்குத்தான்!" என்றாள் அவர் மனைவி.

சீரழிவின் சகல சாத்தியங்கள் பற்றியும் எண்ணி, கனத்த மனதுடன் மேலும் மேலும் புரட்டிக் கொண்டே வந்தவர், ஐந்தாவது புத்தகத்தின் இருநூற்றி எழுபத்தேழாவது பக்கத்தில் தம் கதையின் தலைப்பை ஒரு வழியாகக் கண்டு பிடித்தார்; அதிர்ந்தார்.

கதையெல்லாம் சரியாகத்தான் வந்திருந்தது. மேற்கொண்டு தொடர்ந்து எழுதலாம் என்ற எண்ணத்தை மறுபரிசிலனை செய்யும் விதமாக, அவர் பெயர்தான் அதில் விடுபட்டுப் போயிருந்தது. ●

பொன்னியின் செல்வன்



பூர்வ கதை

சோழர் பழங்குடியில் பிறந்த நாரீமணிகளில் மிகவும் புகழ்பெற்ற இளவரசி குந்தவை பெரிதும் மனக் கலக்கம் அடைந்திருந்தாள். அவளுடைய இளைய சகோதரன் அருள் மொழிவர்மன் இலங்கையிலும், மூத்த சகோதரன் ஆதித்த கரிகாலன் காஞ்சியிலும் இருந்தார்கள். அவளுடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி தஞ்சையில் நோய்ப்பட்டிருந்தார். இந்நிலைமையில் இந்த இராஜ குடும்பத்துக்கு விரோதமாக நடந்த ஒரு பெரிய சதியைப் பற்றிக் குந்தவை தெரிந்து கொண்டாள். சுந்தர சோழர் காலமானால் உடனே அவருடைய சிறிய தகப்பனாரின் மகன் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று பழுவேட்டரையர்கள் முதலான சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரகசியமாக முடிவுகட்டியிருந்தார்கள். இதை அறிந்து வந்து சொன்ன வந்தியத்தேவனை இலங்கை சென்று அருள்மொழிவர்மனைக் கூட்டி வருவதற்காகக் குந்தவை அனுப்பினாள்.

பின்னர் அவள் தஞ்சை சென்றாள். அங்கே தன் தந்தை உடல் நோய்ப்பட்டிருந்ததல்லாமல் பெரியதொரு மனநோயினாலும் பீடிக்கப்பட்டிருப்பதை அறிந்தாள். தந்தையின் இளம் பிராயத்தில் ஒரு வலைஞர்குல ஊமைப் பெண்ணை அவர் காதலித்ததாகவும், அப் பெண் கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து கடலில் விழுந்து இறந்ததாகவும், அவளுடைய ஆவி வடிவம் இப்போது நள்ளிர



கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி



வில் வந்து அவரைத் துன்புறுத்தி வந்த தாகவும் தெரிந்து கொண்டாள். இதன் காரணமாக மனம் நலிந்திருந்த சுந்தர சோழர், தமக்குப் பிறகு இராஜ்யத்தை மது ராந்தகனுக்கே கொடுத்து விட விரும்பினார். மதுராந்தகன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஆளத் தகுதியற்றவன் என்று குந்தவை கருதி னாள். சோழ சாம்ராஜ்யத்தை அந்தக் கதிக்கு உள்ளாகாமல் காப்பாற்றும் பொறுப்பு இப் போது தன் தலையில் சார்ந்திருப்பதாகவும் எண்ணினாள்.

சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரியான பெரிய பழுவேட்டரையர் தம் முதிய பிராயத்தில் நந்தினி என்னும் பெண்ணை மணந்திருந்தார். நந்தினியின் வாழ்க்கையில் மர்மங்கள் நிறைந்திருந்தன. இப்போதும் அவள் மந்திரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தாள். சுந்தரசோழரின் மன நோய்க்கு நந்தினி ஏதோ ஒருவகையில் காரணமாயிருக்கலாம் என்று குந்தவை சந் தேகித்தாள். அதைப் பற்றித் தெரிந்து கொள் ளும் நோக்கத்துடன் நந்தினியின் அரண் மனைக்குச் சென்றாள். அங்கே சம்புவரை யரின் மகன் கந்தமாறன் என்பவன் இருந் தான். முதுகில் குத்தப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்தவன், பழுவூர் அரண்மனை யில் நந்தினியின் மேற்பார்வையில் நடந்த சிகிச்சையினால் குணமடைந்து வந்தான். கந்தமாறன் தன்னுடைய நண்பனாகிய வந்தியத்தேவன்தான் தன்னை முதுகில் குத்தியிருக்க வேண்டுமென்று ஊகித்தான். அந்த ஊகத்தையே ஊர்ஜிதமாக்கிக் கொண்டு, நடந்ததுடன் நடவாத தையும் சேர்த்து ஒரு கற்பனைக் கதையைக் குந்தவையிடம் அவன் சொன்னான். அச்சமயம் ஒரு தாதி ஓடிவந்து, ''ஒற்றன் பிடிபட்டான்! வீதியில் கொண்டு வருகிறார்கள்!'' என்று கூறினாள்.

பழுவேட்டரையரின் ஆட்கள் பிடித்து வந்த ஆள், தான் சக்கர வர்த்திக்கு மூலிகை கொண்டு வர அனுப்பிய வைத்தியர் மகன் என் பதைப் பார்த்த குந்தவை, சின்னப் பழுவேட்டரையரைக் கடிந்து கொண்டாள்.

அந்த இளைஞனும் அவனுடன் புறப் பட்டு, இப்போது இலங்கை சென்று விட்ட வந்தியத்தேவனும் ஒற்றர்கள் என்று தமக்குத் தீர்மானமாகத் தெரியும் என்றார் சின்னப் பழுவேட்டரையர். குந்தவை விரும்பினால் வைத்தியர் மகனைச் சிறையிலிருந்து தனது பொறுப்பில் விடுவிக்கலாம் என்று கூறிப் பாதாளச் சிறையின் சாவியைக் கொடுத்து விட்டார்.

பாதாளச் சிறைக்குச் சென்ற குந்தவை, அங்கு சேந்தன் அமுதனைச் சந்தித்து, வந்தி யத்தேவன் படகு மூலம் இலங்கைக்குத் தப்பிச் சென்று விட்ட செய்தியைக் கேட் டறிந்து மகிழ்ச்சி கொண்டாள்.

இதனிடையே நந்தினி, ஒரு பெரும் சதித் திட்டம் தீட்டி, காஞ்சியிலுள்ள ஆதித்திய கரிகாலனுக்கு ஒரு நிருபம் எழுதினாள்.

அக்கடிதத்தில், 'சித்தியான தன்னை' கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஓர் அதி முக்கியக் காரணம் பொருட்டு சந்திக்க வர வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாள்.

அதைக் கந்தமாறனிடம் கொடுத்தனுப்பி ஆதித்த கரிகாலனிடம் சேர்ப்பிக்கத் திட் டம்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

அனலில் இட்ட மெழுகு

கிளி 'கிறீச்'சிட்ட சத்தமும், தாதிப் பெண் பயத்துடன் கூவிய சத்தமும் கலந்து வந்து நந்தினியையும் கந்தமாறனையும் திடுக்கிடச் செய்தன. கந்தமாறன் திரும்பிப் பார்த்துப் பழுவேட்டரையர் வருகிறார் என்று அறிந்ததும் கதிகலங்கிப் போனான். சற்று முன்னால் அவன் 'பழுவேட்டரையரை எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொன்னது அவர் காதில் விழுந்திருக்குமோ என்ற எண்ணம் உதயமாயிற்று. அதைவிடப் பீதிகரமான எண்ணம், நந்தினியையும் தன்னையும் பற்றி அவர் ஏதேனும் தவறாக எண்ணிக் கொள்வாரோ என்ற நினைவு, - அவனுக்குத் திகிலை உண்டாக்கிற்று. கிழப் பருவத்தில் கலியாணம் செய்து கொண்டவர்களின் போக்கே ஒரு தனி விதமாக இருக்குமல்லவா? ஆகையினாலேயே அவர் அவ்வளவு கோபமாக வந்து கொண்டிருக்க வேண்டும்! வந்து என்ன செய்யப் போகிறாரோ, தெரியவில்லை. எதற்கும் சித்தமாயிருக்க வேண்டியதுதான்.

இவ்வளவும் ஒரு நொடிப் பொழுதில் கந்தமாறன் மனத்தில் அலை எறிந்த சிந்தனைகள். ஆனால் அவனுக்கு அன்று ஒரு பெரிய அதிசயத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அவன் நினைத்ததற்கெல்லாம் மாறாக அந்த அதிசயம் நடந்தது. பழுவேட்டரையர் அருகில் நெருங்கியதும் நந்தினி முகமலர்ந்து அவரைத் தன் கரியவிழிகளால் பார்த்து, "நாதா! எங்கே தாங்கள் திரும்பி வருவதற்கு அதிக நாள் ஆகிவிடுமோ என்று பார்த்தேன். நல்லவேளையாக வந்து விட்டீர்கள்!" என்றாள். அவளுடைய முகத்தைப் பார்த்து, அந்தக் குரலையும் கேட்டதும் பழுவேட்டரையரின் கோபாவேசமெல்லாம் பறந்து விட்டது. அனலில் இட்ட மெழுகைப் போல் உருகிப் போனார். அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து, "ஆமாம்; போன காரியம் முடிந்து விட்டது; திரும்பி விட்டேன்" என்றார்.

பிறகு கந்தமாறனைப் பார்த்து, "இந்தப் பிள்ளை இங்கே என்ன செய்கிறான்? ஏதாவது காதற் கவிதை புனைந்து கொண்டு வந்து கொடுத்தானோ?" என்று கேட்டுவிட்டுத் தம்முடைய பரிகாசத்தைக் குறித்துத் தாமே சிரித்தார்.

கந்தமாறனுடைய முகம் சிவந்தது. ஆனால் நந்தினி பழுவேட்டரையரை விட அதிகமாகச் சிரித்துவிட்டு, "இவருக்குக் காதலும் தெரியாது; கவிதையும் தெரியாது. சண்டை போட்டுக் காயமடையத்தான் தெரியும். நல்லவேளையாகக் காயம் ஆறிவிட்டது. ஊருக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்!" என்றாள்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகளின் வீரத்தைத்தான் என்னவென்று சொல்வது? இருபத்து நாலு யுத்தகளங்களில் நான் அறுபத்து நாலு காயங்கள் அடைந்தவன். ஆனால் ஒரு தடவையாவது படுக்கையில் படுத்ததில்லை. இவனுக்குக் காயம் குணமாக ஒரு பட்சத்துக்கு மேலாகியிருக்கிறது. ஆனால் என் காயங்களெல்லாம் மார்பிலும் தோளிலும் தலையிலும் முகத்திலும் ஏற்பட்டவை. இந்தப் பிள்ளை முதுகிலே காயப்பட்டவன் அல்லவா? அதனால் இவ்வளவு நாள் ஆகிவிட்டது. நியாயந்தான்!" என்று கூறிப் பரிகாசச் சிரிப்புச் சிரித்தார்.

கந்தமாறன் கொதித்து எழுந்து, "ஐயா! தாங்கள் என் தந்தையின் ஸ்தானத்தில் உள்ளவர். அதனால் தங்களுடைய பரிகாசத்தைப் பொறுத்தேன்!" என்றான்.

"இல்லாவிட்டால், என்ன செய்திருப்

பாயடா?" என்று பழுவேட்டரையர் கேட்டுத் தம் உறையிலிருந்த கத்தியில் கையை வைத்தார்.

நந்தினி இச் சமயம் குறுக்கிட்டாள். "நாதா! இவருக்கு முதுகில் மட்டும் காயமில்லை, நெஞ்சிலும் காயம் பட்டிருக்கிறது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே! இவர் தம்முடைய சிநேகிதன் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் இம்மாதிரி முதுகில் குத்திப் போட்டு விட்டுப் போய் விட்டான் என்ற எண்ணம் இவர் நெஞ்சில் பெரிய புண்ணை உண்டாக்கியிருக்கிறது. முதுகில் காயம் ஆறியும் நெஞ்சில் புண் ஆறவில்லை. அந்தப் புண்ணில் கோல் இடுவது போல் நாம் பேசக் கூடாதுதானே? அன்றிரவு, இவர் காயம்பட்ட அன்றிரவு, என்ன நடந்தது என்று தங்களுக்குத் தெரியாதா, என்ன?" என்று சொல்லிக் கொண்டே நந்தினி பழுவேட்டரையரைப் பார்த்த பார்வையில் மறைபொருள் ஏதோ இருந்திருக்க வேண்டும்! பழுவேட்டரையரின் முகத்தோற்றம் உடனே மாறி விட்டது!

"ஆமாம்; நீ சொல்வது சரிதான்! பாவம், இவன் அறியாப் பிள்ளை. இவன் தந்தையோ என் பிராண சிநேகிதர். இவன் ஏதோ தெரியாத்தனமாகக் கூறியதை நான் பொருட்படுத்தக் கூடாது தான். அது கிடக்கட்டும். நந்தினி! ஒரு முக்கியமான விஷயம் சொல்வதற்காக இப்போது வந்தேன். அது இவனுக்கும் தெரிந்திருக்க வேண்டியதுதான். இலங்கை மாதோட்டத்தில் ஒருவனை ஒற்றன் என்று சந்தேகித்துப் பிடித்திருக்கிறார்களாம். அவனிடம் இளவரசன் அருள்மொழிவர்மனுக்கு ஓலை ஒன்றிருக்கிறதாம். அங்க அடையாளங்களிலிருந்து அவன் நம் கந்தமாறனுடைய அழகான சிநேகிதனாயிருக்கலாமென்று நினைக்கிறேன். அவன் பெரிய கைகாரனாய்த் தானிருக்க வேண்டும். நம் ஆட்களிடம் அகப்படாமல் தப்பி இலங்கைக்குச் சென்று விட்டான், பார்!" என்றார் பழுவேட்டரையர்.

நந்தினியின் முக பாவத்தில் அப்போது ஏற்பட்ட ஒருகண நேர மாறுதலை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

"அடே! தப்பிச் சென்று விட்டானா? இலங்கைக்கா போய் விட்டான்?" என்று கந்தமாறன் ஏமாற்றத்துடன் கூறினான்.

"நாதா! அவன் தப்பிச் சென்றது எனக்கு ஒன்றும் அதிசயமாய்த் தோன்றவில்லை. தங்கள் சகோதரர் இந்தக் கோட்டைக் காவலுக்குத் தகுதியற்றவர் என்றுதான் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேனே! அவர் அனுப்பிய ஆட்களும் அப்படித்தானே இருப்பார்கள்?" என்றாள் நந்தினி.

"முன்னெல்லாம் நீ அப்படிச் சொன்னபோது எனக்கு அது சரியாகப் படவில்லை. இப்போது எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் ஒரு விந்தையைக் கேள்! மாதோட்டத்தில் அகப்பட்ட ஒற்றனிடம் நமது பழுவூர் இலச்சினை ஒன்று இருந்ததாம். அது அவனிடம் எப்படிக் கிடைத்தது என்று அவன் சொல்லவில்லையாம்!..."

நந்தினி லேசாக ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, "இது என்ன வேடிக்கை? பனை இலச்சினை அவனிடம் எப்படிக் கிடைத்ததாம்? தங்கள் சகோதரர் இதற்கு என்ன சொல்கிறார்?" என்றாள்.

"அவனா? அவன் சொல்வதைக் கேட்டால் உனக்குச் சிரிப்பு வரும்! அந்தப் பனை இலச்சினை உன்னிடமிருந்துதான் அவனிடம் 'போயிருக்க வேண்டுமென்கிறான் காலாந்தகன்!" என்று சொல்லிவிட்டுப் பழுவேட்டரையர் இடிஇடியென்று சிரித்தார்.

அந்தச் சிரிப்பினால் லதா மண்டபமே குலுங்கியது போலிருந்தது. அரண்மனை நந்தவனத்து மரங்கள் எல்லாம் சிலிர்த்து நடுநடுங்கின.

நந்தினியும் அவருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டே, "என் மைத்துனர் இருக்கிறாரே, அவருக்கு இணையான புத்திக் கூர்மை படைத்தவர் இந்த ஈரேழு பதினாலு உலகத்திலும் கிடையாது!" என்றாள்.

"இன்னும் உன் மைத்துனன் என்ன சொல்கிறான் தெரியுமா? நல்ல வேடிக்கை! அதை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது! தஞ்சைக் கோட்டை வாசலில் நீ பல்லக்கில் வந்து கொண்டிருந்தபோது உன்னை அந்த இந்திரஜித்து சந்தித்துப் பேசினானாம். பிறகு இந்த அரண்மனைக்குள்ளும் அந்த மாயாவி வந்திருந்தானாம். ஆகையால் நீயே அவனிடம் பழுவூர் இலச்சினையைக் கொடுத்திருக்க வேணுமாம்! அப்படியில்லாவிட்டால், உன்னிடம் யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருகிறானே, அவன் மூலமாகப் போயிருக்க வேண்டுமாம்! தன்னுடைய முட்டாள்தனத்தை மறைப்பதற்காக அவன் இப்படியெல்லாம் கற்பனை செய்து உளறுகிறான்!" என்று கூறிப் பழுவேட்டரையர் தமது நீண்ட பற்கள் எல்லாம் தெரியும்படியாக மறுபடியும் ஹஹ்ஹஹ்ஹா என்று சிரித்தார்.

"என் மைத்துனருடைய அறிவுக்கூர்மையைப் பற்றி நான் சந்தேகித்தது ரொம்பத் தவறு. அவருடைய அறிவு உலக்கைக் கொழுந்துதான்! சந்தேகமில்லை! ஆனால் இதையெல்லாம் நீங்கள் கேட்டுக் கொண்டு சும்மா இருந்ததை நினைத்தால்தான் எனக்கு வியப்பாயிருக்கிறது!" என்றாள் நந்தினி. அவளுடைய முகபாவம் மறுபடியும் மாறி, அதில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தது. கண்களில் தீப்பொறி பறந்தது.

வீராதி வீரரும் போர்க்களத்தில் எத்தனையோ வேல் வீச்சுக்களை இறுமாந்து தாங்கியவருமான பெரிய பழுவேட்டரையர் நந்தினியின் சிறு கோபத்தைத் தாங்க முடியாமல் தடுமாறினார். அவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் திடீரென்று ஒரு தளர்ச்சி காணப்பட்டது.

"தேவி! நான் அதையெல்லாம் சும்மா கேட்டுக் கொண்டிருந்தேன் என்றா நினைக்கிறாய்? அவனுடைய கையினாலாகாத்தனத்தைப் பற்றி மிகக் கடுமையாகப் பேசி அவனை அழவைத்து விட்டேன். நீ பார்த்திருந்தால் அவன் பேரில் இரக்கம் அடைந்திருப்பாய்!" என்றார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கந்தமாறன் பாடு சங்கடமாகி விட்டது. நந்தினியிடம் அவனுக்குச் சிறிது பயமும் பழுவேட்டரையரிடம் இரக்கமும் அவமதிப்பும் ஏற்பட்டன. இந்தச் சதிபதிகளின் தாம்பத்ய விவகாரத்தில் சிக்கிக் கொள்ளாமல் அங்கிருந்து போய்விட விரும்பினான். தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "ஐயா!...." என்றான்.

நந்தினி குறுக்கிட்டு, "என் மைத்துனர் சாமர்த்தியத்தைப் பற்றிப் பேசுகையில் இவரை நாம் மறந்து விட்டோம். இவர் ஊருக்குப் போகிறேன் என்று சொல்கிறாரே, போகலாம் அல்லவா?" என்று கேட்டாள்.

"நன்றாய்ப் போகலாம். இத்தனை நாள் இங்கு இவன் தங்கியிருந்தது பற்றியே இவனுடைய தந்தை கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்!"

"இவரிடம் ஓலை ஒன்று கொடுத்து அனுப்ப விரும்புகிறேன். கொடுக்கலாம் அல்லவா?"

"ஓலையா? யாருக்கு?"

"காஞ்சியிலுள்ள இளவரசருக்கு!"

பழுவேட்டரையர் நந்தினியையும் கந்தமாறனையும் சந்தேகக் கண்ணால் பார்த்து, "இளவரசருக்கு ஓலையா? நீயா எழுதுகிறாய்? எதற்கு?" என்று கேட்டார்.

"இளையபிராட்டி தம்பிக்கு ஓலை எழுதி இவர் சிநேகிதரிடம் அனுப்பியிருக்கிறார். பழுவூர் இளையராணி அண்ணனுக்கு ஏன் ஓலை எழுதக் கூடாது? எழுதி இவரிடம் ஏன் அனுப்பக் கூடாது?" என்றாள் நந்தினி.

"இவன் சிநேகிதன் கொண்டு போன ஓலை இளையபிராட்டி குந்தவை எழுதிய ஓலையா? உனக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்தது?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"பின்னே எதற்காக என்னிடம் மந்திரவாதி அடிக்கடி வருகிறானாம்? அவன்

மந்திரத்தின் மூலமாகத் தெரிந்தது. என் மைத்துனர் ஆட்களின் இலட்சணம் தான் தெரிந்திருக்கிறதே! பழுவூர் பனை இலச்சினை அவனிடம் இருப்பதாகக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து சொன்னவர்கள் ஓலை குந்தவை அனுப்பியது என்று சொல்லவில்லை, பாருங்கள்!''

''இலச்சினையைப் பற்றியும் நம் ஆட்கள் சொல்லவில்லை. அன்பில் பிரம்மராயர் இராமேசுவரம் போய் விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். அவர் கொண்டு வந்த செய்தி....''

''அந்தப் பிராமணனாவது குந்தவை தேவியின் ஓலையைப் பற்றித் தங்களிடம் சொன்னாரா?''

''இல்லை!''

''நாதா! நான் தங்களுக்கு எச்சரித்ததை எண்ணிப் பாருங்கள். இந்த ராஜ்யத்தில் உள்ள அவ்வளவு பேரும் சேர்ந்து தங்களை வஞ்சிக்கப் பார்க்கிறார்கள் என்று நான் சொல்லவில்லையா? இது உண்மை என்பது இப்போதாவது தங்களுக்குத் தெரிகிறதா? மந்திரவாதி சொன்னதை மட்டும் நான் நம்பி விடவில்லை. கோடிக்கரையிலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வந்த வைத்தியர் மகனையும் அழைத்து வரச் செய்து விசாரித்தேன். அவனும் அதை உறுதிப்படுத்தினான். இளையபிராட்டி தன் தம்பிக்கு ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னான்!'' என்றாள் நந்தினி.

பழுவேட்டரையருக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருந்தது. கந்தமாறனை அவர் அருவருப்புடன் பார்த்தார். அந்தச் சிறுபிள்ளையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இதையெல்லாம் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை.

இதைக் குறிப்பினால் உணர்ந்த நந்தினி, ''நம்முடைய கதை இருக்கவே இருக்கிறது. இவருடைய பிரயாணம் ஏன் தாமதிக்க வேண்டும்?'' என்று கூறிவிட்டுக் கந்தமாறனைப் பார்த்து, ''ஐயா! காஞ்சி இளவரசரிடம் இந்த ஓலையை நேரே கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். கொடுத்து விட்டு, அவர் மறு ஓலை கொடுத்தால் சர்வஜாக்கிரதையாக அனுப்பி வைக்க வேண்டும். தங்களுடைய கடம்பூர் மாளிகைக்கு இளவரசரை அழைப்பதற்கு மறந்து விட வேண்டாம்!'' என்றாள்.

''என் தந்தையிடம் என்ன சொல்ல? இது பழுவூர் மன்னரின் விருப்பம் என்று சொல்லலாம் அல்லவா?'' என்று கந்தமாறன் சற்றுத் தயக்கத்துடன் கேட்டான்.

''தாராளமாய்ச் சொல்லலாம். என்னுடைய விருப்பந்தான் பழுவூர் மன்னரின் விருப்பமும். நாதா! நான் சொல்வது சரிதானே?'' என்றாள் நந்தினி.

''ஆமாம், ஆமாம்!'' என்று பழுவேட்டரையர் தலையை அசைத்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தலை கிறுகிறுத்தது. நந்தினியை எதிர்த்துப் பேசவும் அவரால் இயலவில்லை.

கந்தமாறன் சென்ற பிறகு நந்தினி பழுவேட்டரையர் மீது தன் காந்தக் கண்களைச் செலுத்தி, கொஞ்சும் கிளியின் குரலில், ''நாதா! என்னிடம் தங்களுடைய நம்பிக்கை குன்றி விட்டதாகத் தோன்றுகிறது. என் மைத்துனருடைய துர்ப்போதனை ஜெயித்து விட்டது போல் காண்கிறது!'' என்றாள்.

''ஒரு நாளுமில்லை நந்தினி! என் கையில் பிடித்த வேலிலும், அரையில் செருகிய வாளிலும் எனக்கு நம்பிக்கை குறைந்தாலும் உன்னிடம் நம்பிக்கை குறையாது. வீர சொர்க்கத்தில் நான் நம்பிக்கை இழந்தாலும் உன் வார்த்தையில் நம்பிக்கை இழக்க மாட்டேன்!'' என்றார்.

''இது உண்மையானால், அந்தச் சிறுபிள்ளையை வைத்துக் கொண்டு, என்னிடம் அவ்வளவு கேள்வி கேட்டீர்களே, ஏன்? எனக்கு அவமானமாய் இருந்தது!'' என்று நந்தினி கூறிய போது, அவள் கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.



பழுவேட்டரையர் துடிதுடித்துப் போனார். "வேண்டாம் என் கண்ணே! இப்படி என்னைத் தண்டிக்க வேண்டாம்!" என்று கூறி, நந்தினியின் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துச் சமாதானம் செய்தார்.

"ஆயினும் உன்னுடைய காரியங்கள் சில எனக்கு அர்த்தமாகவில்லை. என்ன, ஏது, எதற்காக? என்று கேட்க எனக்கு உரிமையில்லையா?" என்றார்.

"கேட்பதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு. சொல்வதற்கும் எனக்கு உரிமை உண்டு. யார் இல்லை என்றார்கள்? அந்நியர்கள் முன்னால் கேட்க வேண்டாம் என்றுதான் சொன்னேன். என்ன வேண்டுமோ இப்போது கேளுங்கள்!" என்றாள்.

"ஆதித்த கரிகாலனுக்கு நீ எதற்காக ஓலை கொடுத்து அனுப்புகிறாய்? கடம்பூர் மாளிகைக்கு எதற்காக அவனை அழைக்கச் சொல்லுகிறாய்? அவன்



அல்லவா நம்முடைய யோசனை நிறைவேறுவதற்கு முதல் விரோதி?'' என்றார் பழுவேட்டரையர்.

''இல்லை, இல்லை! ஆதித்த கரிகாலன் நம் முதல் விரோதி இல்லை. அந்தப் பழையாறைப் பெண் பாம்புதான் நம் முதல் விரோதி. அவளை எதற்காக நம் அரண்மனைக்கு நான் அழைத்தேன்? அந்தக் காரணத்துக்காகவேதான் ஆதித்த கரிகாலனை கடம்பூருக்கு அழைக்கச் சொல்கிறேன். நாதா! நான் அடிக்கடி சொல்லி வந்திருப்பதை இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இளைய பிராட்டி குந்தவை தன் மனத்திற்குள் ஏதோ ஒரு தனி யோசனை வைத்திருக்கிறாள் என்று சொல்லி வந்தேனல்லவா? அது என்னவென்று இப்போது கண்டு பிடித்து விட்டேன். மற்ற எல்லாரையும் விலக்கி விட்டு அவளுடைய இளைய சகோதரன் அருள்மொழிவர்மனை தஞ்சாவூர் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க அவள் தீர்மானித்திருக்கிறாள். அதற்காகவே அவள் இலங்கைக்குத் தூதனை அனுப்பியிருக்கிறாள். அதற்காகவே இப்போது தஞ்சைக்கு வந்திருக்கிறாள். அவளுடைய சூழ்ச்சிக்கு எதிர் சூழ்ச்சி செய்து அவளுடைய நோக்கம் நிறைவேறாமல் செய்ய வேண்டும். காஞ்சிக்கு நான் ஓலை அனுப்பியதன் காரணம் இப்போது தெரிகிறதல்லவா?'' என்று நந்தினி கேட்டு விட்டுப் பழுவேட்டரையரைப் பார்த்த பார்வை அவருடைய நெஞ்சை ஊடுருவி அவர் அறிவை நிலைகுலையச் செய்தது.

ஒன்றும் தெரியாவிட்டாலும், ''ஆம், தெரிகிறது!'' என்று குழறினார் அந்த வீரக் கிழவர்.

''நாதா! தாங்களும் தங்கள் முன்னோர்களும் புரிந்த அரும்பெரும் வீரச் செயல்களினாலேயே இன்று இந்தச் சோழ சாம்ராஜ்யம் இவ்வளவு பல்கிப் பரவியிருக்கிறது. இந்தத் தஞ்சைபுரியின் தங்கச் சிங்காதனத்தில் ஒரு நாளாவது தங்களை ஏற்றி வைத்துப் பார்க்கும் வரையில் இந்தப் பாவியின் கண்கள் இரவிலும் பகலிலும் தூங்கப் போவதில்லை! அதற்குள்ளே எந்தவிதத்திலாவது தங்களுக்கு என் பேரில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் தங்களது உடைவாளினால் என்னை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று விடுங்கள்!'' என்றாள் நந்தினி.

''என் கண்ணே! இத்தகைய கர்ண கடூரமான மொழிகளைச் சொல்லி என்னைச் சித்திரவதை செய்யாதே!'' என்றார் பெரிய பழுவேட்டரையர்.



இருபத்தைந்தாம் அத்தியாயம்

மாதோட்ட மாநகரம்

நமது கதாநாயகன் வந்தியத்தேவனை நாம் விட்டுப் பிரிந்து நெடுங்காலம் ஆகி விட்டது. தஞ்சையிலேயே அதிக நாள் தங்கி விட்டோம். சில நாள்தான் என்றாலும் நெடுங்காலமாகத் தோன்றுகிறது.

இந்த சில நாளைக்குள் வந்தியத்தேவன் ஈழத்துக் கடற்கரையோடு நடந்து சென்று பாலாவி நதிக்கரையில் இருந்த மாதோட்ட மாநகரை அடைந்திருந்தான்.

இராமேசுவரக் கடலுக்கு அப்புறத்தில் ஈழநாட்டுக் கடற்கரையில் இருந்த அம்மா நகரம் திருஞான சம்பந்தர் காலத்திலும் சுந்தர மூர்த்தியின் காலத்திலும் இருந்தது போலவே இப்போதும் பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகளினால் சூழப்பட்டுக் கண்ணுக்கு இனிய காட்சி அளித்தது. மாவும், பலாவும், தென்னையும், கமுகும், கதலியும், கரும்பும் அந்தக் கரையைச் சுற்றிலும் செழித்து வளர்ந்திருந்தன. அந்த மரங்களில் வானரங்கள் ஊஞ்சலாடின.; வரி வண்டுகள் பண்ணிசைத்தன; பைங்கிளிகள் மழலை பேசின.

அந்நகரின் கோட்டை மதில்களின் மேல் கடல் அலைகள் மோதிச் சலசல வென்று சத்தம் உண்டாக்கின.

மாதோட்ட நகரின் துறைமுகத்தில் பெரிய மரக்கலங்கள் முதல் சிறிய படகுகள் வரையில் நெருங்கி நின்றன. அவற்றிலிருந்து கரையில் இறக்கப்பட்ட பண்டங்கள் மலைமலையாகக் குவிந்து கிடந்தன.

இவையெல்லாம் சம்பந்தர் - சுந்தரர் காலத்தில் இருந்தது போலவே இருந்தாலும், வேறு சில மாறுதல்கள் காணப்பட்டன. மாதோட்ட நகரின் வீதிகளில் இப்போது கேதீசுவர ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களின் கூட்டத்தை அதிகம் காணவில்லை. பக்தர்கள் இறைவனைப் பாடிப் பரவசமடைந்த இடங்களிலெல்லாம் இப்போது போர் வீரர்கள் காணப்பட்டனர். கத்தியும் கேடயமும் வாளும் வேலும் கையில் கொண்ட வீரர்கள் அங்குமிங்கும் திரிந்தார்கள்.

சென்ற நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அந்த நகரம் ஒரு யுத்த கேந்திர ஸ்தலமாக விளங்கி வந்தது. தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துப் போருக்கு வந்த படைகள் பெரும்பாலும் அங்கேதான் இறங்கின. திரும்பிச் சென்ற படைகளும் அங்கேதான் கப்பல் ஏறின. நகரம் பல தடவை கைமாறி விட்டது. சில சமயம் இலங்கை மன்னர்களிடமும் சில சமயம் பாண்டிய அரசர்களிடமும் அது இருந்தது. பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

அத்தகைய யுத்த கேந்திர நகரத்தின் கோட்டை மதில் வாசலில் ஒருநாள் வந்தியத்தேவன் வந்து நின்றான். நகருக்குள் போக வேண்டும் என்றான். சோழ சேநாதிபதியைப் பார்க்க வேண்டும் என்றான். காவலர்கள் அவனை உள்ளே விட மறுத்தார்கள். அதன் பேரில், முன்னர் கடம்பூரில் கையாண்ட யுக்தியை இங்கும் அவன் கையாண்டான். காவலர்களைப் பலவந்தமாகத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தான். காவலர்கள் அவனைச் சிறைப்பிடித்துக் கோட்டைத் தலைவனிடம் கொண்டு போனார்கள். வந்தியத்தேவன் கோட்டைத் தலைவரிடம் இளவரசர் அருள்மொழிவர்மருக்கு முக்கியமான ஓலை கொண்டு வந்திருப்பதாகவும் அதைப் பற்றிச் சோழ சேநாதிபதியிடந்தான் விவரம் சொல்ல முடியும் என்றும் கூறினான். அவனைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். பொன்னியின் செல்வனுக்கு ஓர் ஓலையும் பழுவூர் பனை இலச்சினையும் அவனிடம் இருக்கக் கண்டார்கள்.

கொடும்பாளூர்ப் பெரிய வேளார் பூதி விக்கிரமகேசரி அச்சமயம் இலங்கைப் படையின் சேநாதிபதியாக இருந்தார். அவரிடம் போய்ச் சொன்னார்கள்.



"யமலோகத்துக்கு அனுப்பி விடுவேன்!" "ஒரே உதையில் உன் உயிர் போய் விடும்!" என்று இப்படியெல்லாம் அடுத்த அறையில் ஒருவன் இரைந்து கொண்டிருந்தான். யாரைப் பார்த்து இப்படி அவன் வீர வாதமிடுகிறான் என்று தெரியவில்லை. ஒரே குரல்தான் கேட்டதே தவிர, அதற்கு எதிர்க்குரல் கேட்கவில்லை. ஒருவேளை யாராவது பைத்தியம் பிடித்த போர் வீரனாயிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அப்படியென்றால், இரவெல்லாம் தூக்கமில்லாமல் செய்து விடுவானே? கொஞ்சம் தூங்கலாம் என்றால் அதற்கும் இடையூறு நேர்ந்து விட்டதே!...

பூதிவிக்கிரம கேசரி அப்போது முதன் மந்திரி அநிருத்தபிரமராயருடன் பேசிக் கொண்டிருந்தார். அவருடன் இராமேசுவரம் வரையில் போவதற்கு ஆயத்தமாக இருந்தார். ஆகையால் திரும்பி வந்து விசாரிப்பதாகவும் அதுவரையில் அந்த வீரனைக் காவலில் வைத்திருக்கும்படியும் சொல்லி விட்டுப் போனார்.

பிறகு வந்தியத்தேவனை அழைத்துப் போய் ஒரு பாழடைந்த மாளிகையில் ஓர் அறையில் தள்ளிப் பூட்டினார்கள். வாசலில் காவலும் போட்டார்கள்.

வந்தியத்தேவன் நீண்ட வழிப் பிரயாணத்தினால், களைப்படைந்திருந்தான். ஆகையால், தன்னைச் சிறைப்படுத்தியது குறித்து அவன் மகிழ்ந்தான். இரண்டொரு நாள் அலைச்சலின்றி ஓய்வு பெறலாம் அல்லவா?

முதல் நாள் அவனுக்கு அத்தகைய ஓய்வு கிடைத்தது. ஆனால் இரண்டாம் நாள் ஒரு தொல்லை ஏற்பட்டது.

அவன் இருந்த அறைக்கு அடுத்த அறையில் ஏதேதோ விசித்திரமான சத்தங்கள் கேட்கத் தொடங்கின. யாரோ ஒருவன் இன்னொருவனை அதட்டி மிரட்டினான். அவனுடைய வீரப் பேச்சுக்கள் பிரமாதமாயிருந்தன. "இந்தா!" "சீச்சீ!" "போ போ!" "கிட்ட வராதே!" "அருகில் வந்தாயோ கொன்று விடுவேன்!" "அடித்து நொறுக்கி விடுவேன்!" "ஜாக்கிரதை!" "உன் உயிர் உன்னுடையதல்ல!"

"சொன்னால் கேட்க மாட்டாயா? சும்மா போக மாட்டாயா! சரி, சரி! உன்னை என்ன செய்கிறேன், பார்!"

இந்த வார்த்தைகளுக்குப் பிறகு தொப்பென்று அவனுடைய அறையில் வந்து ஏதோ விழுந்தது. படுத்திருந்த வந்தியத்தேவன் தூக்கிவாரிப் போட்டு எழுந்தான். விழுந்தது என்னவென்று உற்றுப் பார்த்தான். உடனே அவனையறியாமல் சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்தான். ஏனெனில், அடுத்த அறையிலிருந்து அப்படி வேகமாக வந்து விழுந்தது ஒரு பூனை என்று தெரிந்தது!

"ஓஹோ! உனக்குச் சிரிக்க வேறே தெரியுமா? சிரி! சிரி! மறுபடியும் இங்கே மட்டும் வராதே!" என்று அந்தக் குரல் சொல்லியது.

யாரோ பைத்தியக்காரன் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் பூனையுடன் இவ்வளவு வாதமிடுவானா? அல்லது பூனை மனிதரைப் போல் சிரிக்கும் என்றுதான் எண்ணுவானா? ஆனால், அதிலும் ஓர் அதிசயம் என்னவென்றால், அப்படியெல்லாம் பேசிய குரல் அவனுக்குத் தெரிந்த குரலோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. எங்கேயோ, எப்போதோ கேட்ட குரலாகத் தோன்றியது. ஆனால் யாருடைய குரல்? எங்கே கேட்ட குரல்? - நினைத்து நினைத்துப் பார்த்ததும் ஞாபகம் வரவில்லை!

எப்படியாவது இருக்கட்டும். யாரா

வது இருக்கட்டும் என்று எண்ணி வந்தியத்தேவன் படுத்துக் கொண்டான். கண்ணை மூடித் தூங்கப் பார்த்தான். ஆனால் தூங்க முடியவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளங்கால்களில் ஏதோ வழவழவென்று தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அங்கே படுத்திருந்தது. அட கடவுளே! இதைக் கால்மாட்டில் வைத்துக் கொண்டு எப்படித் தூங்குவது? உதைத்துத் தள்ளினான். பூனை நகர்ந்து சென்றது. கண்ணை மூடினான். மறுபடி அவன் பக்கத்தில் கையில் ஏதோ மிருதுவாகத் தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அவன் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டு செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தது!

மறுபடியும் கையினால் பிடித்துத் தள்ளினான். பூனை தூரச் சென்றது. மீண்டும் கண்ணை மூடினான். தலைமாட்டில் வந்து பூனை படுத்துக் கொண்டு வாலினால் அவனுடைய நெற்றியைத் தடவத் தொடங்கியது.

வாளையும் வேலையும் அச்சமின்றித் தாங்கக்கூடிய அவ்வீரனுக்குப் பூனை தன் வாலினால் தடவும் அனுபவத்தைத் தாங்க முடியவில்லை. எழுந்து பூனையை அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கினான். அவனுடைய அறைக்கும் அடுத்த அறைக்கும் மத்தியில் இருந்த சுவரின் உச்சியில் கொஞ்சம் இடிந்து பொக்கை விழுந்திருந்தது. அதன் வழியாகப் பூனையைத் தூக்கி எறிந்தான்.

அடுத்த அறையில் சிறிது நேரம் ஒரே ரகளையாயிருந்தது. மனிதக் குரலின் கூப்பாட்டுடன் பூனையின் சுராமுரா சத்தமும் சேர்ந்து கொண்டது. சற்று நேரத்துக்குப் பிறகு, "போ! தொலை!" என்ற குரல் கேட்டது. பூனையின் மியாவ் மியாவ் சத்தம் கொஞ்ச தூரம் வரையில் சென்று மறைந்தது. பிறகு நிசப்தம் நிலவியது.

வந்தியத்தேவன் கண்ணயர்ந்தான். அரைத் தூக்க நிலையில் ஒரு கனவு கண்டான். மிக இன்பமான கனவு. இளைய பிராட்டி குந்தவை அவன் அருகில் வந்து உட்கார்ந்து அவன் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். ஆகா! பூனையின் வாலுக்கும் இளவரசியின் கைவிரலுக்கும் எத்தனை வித்தியாசம்?

சட்டென்று மறுபடி விழிப்பு வந்தது. கனவு கலைந்துவிட்டதே என்று வருத்தமாயிருந்தது.

அடுத்த அறையிலிருந்து யாரோ சுவரைத் தட்டினார்கள். அந்தப் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும்.

"யார் அங்கே? பூனையை எடுத்து எறிந்தது யார்?"

வந்தியத்தேவன் மறுமொழி சொல்லவில்லை; மௌனமாயிருந்தான். ஆ! இது என்ன, பூனை பிராண்டுவது போன்ற சத்தம் மறுபடியும்? இல்லை, இல்லை! யாரோ அப்புறத்தில் சுவரில் ஏறுவதற்கு முயல்கிறார்கள்!

வந்தியத்தேவன் எழுந்திருக்கவில்லை. படுத்தபடியே கவனமாய்க் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் முன்ஜாக்கிரதையாகக் கை மட்டும் கத்திப் பிடியில் இருந்தது.

சுவரின் உச்சியிலிருந்த பொக்கையில் முதலில் இரு கைகள் தெரிந்தன. பிறகு ஒரு முண்டாசு தெரிந்தது. முண்டாசுக் கடியில் ஒரு முகம் மேலே வந்து குனிந்து பார்த்தது.

ஆ! இவன் ஆழ்வார்க்கடியான் அல்லவா? தலைப்பாகை கட்டியிருப்பதால் தோற்றத்தில் சிறிது மாறியிருக்கிறான்! ஆனால் ஆழ்வார்க்கடியான் என்பதில் சந்தேகமில்லை.

இவன் எதற்காக, எப்படி இங்கே வந்தான்? நாம் இருப்பது தெரிந்துதான் வந்திருக்க வேண்டும்! உதவி செய்ய வந்திருக்கிறானா? அல்லது இடையூறு செய்ய வந்திருக்கிறானா?

வந்தியத்தேவன் எழுந்து உட்கார்ந்து, "ஓ வீர வைஷ்ணவரே! வருக! வருக! சிவபுண்ய ஸ்தலமாகிய திருக்கேதீசுவரத்துக்கு வருக! வருக!" என்றான்.

"தம்பி! நீதானா? நினைத்தேன்! வேறு யார் இவ்வளவு அழுக்குப் பிள்ளையாராகக் குரல் காட்டாமல் உட்கார்ந்திருக்க முடியும்?" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கொண்டு அறையில் குதித்தான்.

(தொடரும்)

பூம்பாவை

ஆட்டம்? பாட்டம்?

அமரர் கல்கி



பூம்பாவை" என்னும் தமிழ்ப் படம் எடுக்கிறார்கள் என்று தெரிந்ததும் எனக்கு ஒரே துக்கமாயிருந்தது. "பூம்பாவை" என்பது எத்தனை அழகான பெயர்? கதைதான், எவ்வளவு புனிதமான தமிழ்க்கதை? - அதை எப்படியெல்லாம் குட்டிச் சுவராக்கப் போகிறார்களோ, என்ன மாதிரியெல்லாம் விரஸப்படுத்துப் போகிறார்களோ என்று வருத்தமாயிருந்தது.

தமிழ்ப்படம் என்றாலே மனத்தில் திகிலுடனேதான் போக வேண்டியிருக்கிறதல்லவா? என்ன அவலட்சணம் அல்லது விரஸம் வந்துவிடப் போகிறதோ என்று ஒவ்வொரு நிமிஷமும் பயந்து நடுங்கிக் கொண்டே பார்க்க வேண்டியிருக்கிறதல்லவா?

பிரசித்தி பெற்ற கலாசாலை ஆசிரியர் ஒருவர் - பிரின்ஸ்பால் உத்தியோகம் பார்த்து விலகியவர் - ஒரு சமயம் என்னிடம் சொன்னார்:- "தமிழ்ப் படம் ஒன்றுக்குப் போயிருந்தேன். நீர் ஏதோ அசூயையின் பேரில் அதைப் பற்றிக் கேவலமாக எழுதியிருப்பதாகச் சிலர் சொன்னார்கள். அதன் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று எண்ணித்தான் போனேன். படம் ஆரம்பித்துச் சற்று நேரத்துக்கெல்லாம் இங்கு ஏன் வந்தோம் என்று இருந்தது. நாம் வந்திருப்பதை யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்று அவமானமாயிருந்தது. 'இண்டர்வல்' வெளிச்சம் போடுவதற்கு முன்னால் போய்விட வேண்டுமென்று தீர்மானித்து, கள்ளுக் கடைக்குப் போனவனைப் போல் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு கிளம்பினேன்!"

இம்மாதிரி அனுபவம் இன்னும் அநேகம் பேருக்குத் தமிழ்ப் படம் பார்க்கும்போது ஏற்பட்டிருக்கும். ஆனால், "பூம்பாவை படத்தில் அம்மாதிரி அவமானப்பட வேண்டியிராது என்று பலர் சொல்லக் கேட்டபோது எனக்கு மிகவும் உற்சாகமாயிருந்தது. முதலில் ஏற்பட்ட வருத்தத்தைப் போக்கிக் கொள்வதற்காகவாவது அந்தப் படத்தைப் பார்த்து

விட்டு வர வேண்டுமென்று எண்ணினேன்.

படத்தைப் பார்த்த பிறகு பொது ஜன அபிப்பிராயத்தில் என்னுடைய நம்பிக்கை மேலும் உறுதியாயிற்று.

◆ ◆ ◆



ஒரு விஷயம் நல்ல விஷயமா, அதைப் பொது ஜனங்கள் விரும்புகிறார்களா என்பதை அதைச் சுற்றிக் கூடும் கூட்டத்தைப் பார்த்து மட்டுமே நிர்ணயித்து விடக் கூடாது.

பட்டணத்துச் சாக்கடையில் ஒருவன் தவறி விழுந்து விட்டான் என்று வைத்துக் கொள்வோம். "அது என்ன கூத்து?" என்று பார்ப்பதற்காக அங்கே ஒரு கூட்டம் சேர்ந்து விடுவது சகஜம். சற்று நேரம் வேடிக்கை பார்ப்பதும் இயல்பு. இதனால் கூட்டத்திலுள்ளவர்கள் எல்லாரும் சாக்கடையில் விழ விரும்புகிறார்கள் என்று ஏற்படாது. நிற்கும் போது மூக்கைப் பிடித்துக் கொண்டு முகத்தைச் சுளுக்கிக் கொண்டுதான் நிற்பார்கள். போகும்போதும் அருவருப்புடனேதான் போவார்கள்.

விஷயம் தெரிந்து கொள்வதற்காகக் கூட்டம் கூடும் மனித இயல்பைப் பயன்படுத்திக் கொண்டு, சிலர் பணம் பண்ணிப் பார்க்கலாம்; அதில் வெற்றியும் அடைந்து விடலாம்.

ஆனால் அசங்கியமான விஷயங்களே நல்ல விஷயங்கள் என்றோ, அவற்றைப் பார்ப்பதற்கு ஜனங்கள் ஆசைப்படுகிறார்கள் என்றோ ஏற்பட்டு விடாது.

சாக்கடையில் விழுந்தவனை வேடிக்கை பார்க்க, அதிவிரைவில் பெருங் கூட்டம் கூடலாம்; ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் கூட்டம் கலைந்து விடும்.

பூந்தோட்டத்துக்குப் பெருங் கூட்டமாக ஜனங்கள் வராவிட்டாலும், வெகு காலம் வந்து கொண்டிருப்பார்கள். நீடித்த காலக் கணக்குப் பார்த்தால், பூந்தோட்டத்துக்கு வருகிறவர்கள் தான் அதிகமாயிருப்பார்கள்.

இதையெல்லாம், நாகரிகமடைந்த ஜன சமூகத்தை உத்தேசித்துத் தான் சொல்கிறேன்.

தமிழ் மக்கள் நாகரிகமடைந்தவர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

எனவே, "பூம்பாவை" என்னும் படத்தை எடுத்தவர்களுக்கு நான் பெரிதும் நன்றி கூறுகிறேன்.

அசங்கியமும் விரஸமும் இல்லாத தமிழ்ப் படத்தை யாராவது கொண்டு வந்தால் அதற்காகவே அவர்களுக்கு நன்றி செலுத்துதல் இந்த நாளில் அவசியமாய்ப் போயிருக்கிறதல்லவா?

◆ ◆ ◆

சைவம் தழைக்க வந்த ஞான சம்பந்தரின் புனித சரித்திரத்தில் ஒரு சம்பவம், பூம்பாவைக் கதை.

மயிலாப்பூரில் ஒரு செட்டியாரின் மகள் பூம்பாவை. சம்பந்தரின் தெய்விக வாழ்க்கையையும் பாடல்களையும் பற்றி அவள் அறிகிறாள். அவர் மீது காதல் கொள்கிறாள். அவரையே மணந்து கொள்ள உறுதி கொள்கிறாள். பாம்பு கடித்துச் சாகிறாள். அவளுடைய உடலை எரித்த பிறகு எலும்புகளை எடுத்துப் பானையில் போட்டு வைத்திருக்கிறார்கள். ஞானசம்பந்தர் திருமயிலைக்கு வந்தபோது, பானையிலிருந்த எலும்பு பூம்பாவையாக உயிர் பெற்று எழுகிறது. அவ்விதம் தம்மால் உயிர் கொடுக்கப் பெற்ற

பெண்ணை "மகளே!" என்று சம்பந்தர் அழைக்கிறார். பூம்பாவையின் காதல் கொண்ட நெஞ்சம் உடைந்து உருகு கிறது!

இந்தப் பக்தி ரஸமுள்ள கதையைக் கூடிய வரை நல்ல முறையில் படமாக்க முயன்றிருக்கிறார்கள். அம் முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

பால சம்பந்தராக நடித்திருக்கும் குழந்தைப் பிள்ளை இந்தப் படத்தில் முதல் ஸ்தானத்தைத் தட்டிக் கொண்டு போய் விடுகிறான். "பாலறுவாயர்" என்று பெயர் பெற்ற ஞானக் குழந்தையின் முகத்தில் உண்மையாகவே பால் வடி கிறது!

பெரிய சம்பந்தராக நடித்திருக்கும் ஸ்ரீ கே.ஆர். ராமசாமி சுமாராகப் பாடிப் பேசி நடித்திருக்கிறார். அவரைப் படத்தில் இன்னும் நன்றாய்ப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம்.

பூம்பாவையாக நடித்திருக்கும் குமாரி ஜீவரத்தினத்தின் பெயர் சில காலமாகப் பிரபலமாகியிருக்கிறது. "பூம்பாவை"யைப் பார்த்தபின், அவர் அடைந்திருக்கும் புக ழுக்கு உரியவர்தான் என்று தோன்றியது. முகத்திலே குறுகுறுப்பும் களையும், நடிப் பில் ஜீவனும் இருக்கின்றன. பேச்சும் பனிச்சென்று இருக்கிறது.

பூம்பாவையின் தந்தையாக நடித்திருக் கும் ஸ்ரீ சாரங்கபாணி, தாம் ஹாஸ்ய நடிகர் ஆகியிராவிட்டால், சோக ரஸ நடிகராகவும் சிறந்த பெயர் பெற்றிருக்கக் கூடுமென்று நிரூபித்திருக்கிறார்.

செட்டியாரின் இளைய மனைவியின் சகோதரனாக நடித்திருக்கும் ஸ்ரீராமச் சந்திரன், "சபாபதி"க்கு அடுத்தபடியாக இந்தப் படத்திலே வெளுத்து வாங்கி யிருக்கிறார்.

கதைக்குச் சம்பந்தமில்லாத 'காமிக்' ஒன்று இருக்கிறது. இதில் ஸ்ரீ என்.எஸ். கிருஷ்ணனும், ஸ்ரீமதி டி.ஏ. மதுரமும் நடித்திருக்கிறார்கள். ''பூம்பாவை''ப் படத்தின் தரத்துக்கேற்ப அவர்களும் தூய் மையான ஹாஸ்ய கட்டங்களில் உயர் தரமாக நடித்திருக்கிறார்கள்.

இந்தப் படத்திலே வரும் ஹாஸ்ய கட்டங்களில் எல்லாம் பூரணத் திருப்தி ஏற்படுகிறது. மற்ற இடங்களில் சுமாரான திருப்தி உண்டாகிறது.

ஒரு முக்கியமான இடத்தில் பெரும் ஏமாற்றம் அடைகிறோம். எலும்பு பெண் ணாகும் கட்டம் எவ்வளவோ நன்றாக, பார்ப்பவர்கள் மயிர்க்கூச்செரியும் படியாக, எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி இல்லை.

பானைக்குள்ளே எலும்புக் கூட்டைக் காட்டி அருவருப்பை உண்டு பண்ணி யிருக்கவேண்டியதில்லை.

சம்பந்தர், இச்சா சக்தி, கிரியா சக்திகளைப் பற்றிப் பேசும் கடைசிப் பிரசங்கம், அவருக்காவது அர்த்தமாகி யிருக்குமென்று நம்புகிறேன்!

மற்றப்படி, பூம்பாவை தமிழ்ப் படங் களுக்குள் ஒரு நல்ல படம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பார்க்கக் கூடிய விரஸமற்ற படம்.

இத்தகைய படத்தைக் கொண்டு வந்த தற்காக லியோ பிலிம்ஸ் கம்பெனிக் காரர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.



மறவேன்!



மறவேன்!

மறவேன் மறவேனென்று வேலின் மேலாணை யிட்ட
மன்னரும் மறப்பாரோ – நீல மயிலே

உருகி உருகி உள்ளம் அவரை நினைவதையும்
உயிரும் கரைவதையும் – அறியாரோ மயிலே?

அன்பர் வரவு நோக்கி இங்கு நான் காத்திருக்க
அன்ன நடை பயில்வாயோ– வன்ன மயிலே!

பெம்மான் உன் மேலே வரும் பெருமிதம் தலைக்கேறி
பாதையை மறந்தாயோ – பேதை மயிலே!

வன்மம் மனதில் கொண்டு வஞ்சம் தீர்க்க நினைத்து
வழியில் உறங்கினாயோ – வாழி நீ மயிலே!

தன்னிகரில்லாதவன் தனயர் பால் மையல் கொண்ட
மங்கை மீதிரங்காயோ – தங்க மயிலே!


சொன்னாலும் நீ அறியாய் சொந்த அறிவுமில்லாய்
உன்னை நெந்தாவதென்ன? வன்கண் மயிலே!

மன்னும் கரிபரிகள் புவியில் பல இருக்க
உன்னை ஊர்தியாய்க் கொண்டார் – தன்னையே நோக வேணும்.

(சிவகாமியின் சபதம்)

அமரர் கல்கி

வாழ்க்கை சாதம்; காதல் ஊறுகாய்!



1


2



3


4

"நீங்கள் ஓர் எழுத்தாளரானால்?" என்று கரூர் அரசுக் கல்லூரி மாணவர்களிடம் கேட்டோம். ஆத்மார்த்தமான சமூக அக்கறையுடன் பேசியது நிறைவாக இருந்தது!


5


6


7


8


9


10

1. ரஜினிகாந்த் (பி.எஸ்ஸி)

அரசியல்வாதிகளின் ஊழலை 'சட்டயராக' எழுதி மக்களிடம் அவர்களைத் தோலுரித்துக் காமிப்பேன்.

2. என். ஷோபனா (தமிழ் இலக்கியம்)

மக்களின் அறியாமை நீங்க, கல்வியின் முக்கியத்துவம் பற்றியே என் எழுத்துக்கள் பேசும்.

3. ஆர். சிவகுமார் (புவியியல், இரண்டாம் ஆண்டு)

மற்ற மொழி நூல்களைத் தமிழிலும் அறிமுகப்படுத்தும் எழுத்தாளனாக நானிருப்பேன்.

4. ச. கிருத்திகா (தமிழ் இலக்கியம், மூன்றாம் ஆண்டு)

இப்போது வருகிற நாவல்களும், சிறுகதைகளும் வாசகர்களைச் சலனப்படுத்துகிறது. நான் அப்படிப்பட்ட எழுத்தாளராக நிச்சயம் இருக்க மாட்டேன்!

5. சுரேந்தர் (கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு)

இந்தியாவின் மிகப் பெரும் இரண்டு சிக்கல்களான பொருளாதாரம், வேலை இல்லாத் திண்டாட்டம் பற்றியே அதிகம் எழுதுவேன்!

6. சி. ஹெலன் எஸ்தர் ராணி (கெமிஸ்ட்ரி, மூன்றாம் ஆண்டு)

இளைஞர்கள் ஒழுக்கமான, சிறப்பான வாழ்க்கையை வாழ உற்சாகப்படுத்தும் விதமாக எழுதுவேன்.

7. என். கார்த்திகேயன் (பி.ஏ. ஆங்கில இலக்கியம்)

மனிதனை மனிதன் மதிக்கணும்ங்கிறதுக்காகக் கட்டுரைகள் எழுதுவேன். ஆன்மீகம் எழுதுவதைவிட ஆன்மீகப் போர்வை போர்த்திக் கொண்டிருக்கும் போலிச் சாமியார்களை மக்களுக்குத் தோலுரித்துக் காட்ட வேண்டும்!

8. எம். சிவசங்கர் (பி.ஏ ஆங்கில இலக்கியம்)

நடிகையின் கதை போல அடுத்தவர் மனம் புண்பட ஒருபோதும் எழுத மாட்டேன்.

9. ஆர். சியாமளாதேவி (கம்ப்யூட்டர் சயின்ஸ், மூன்றாம் ஆண்டு)

ஜாதி சண்டைகளும் வன்முறை வெறியாட்டங்களும் அதிகமாயிடுச்சு. இந்த மாதிரி சூழ்நிலையில் அமைதியை நிலை நாட்ட என்ன வழியோ அதை எழுதணும்.


10. கா. நாச்சிமுத்து (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி)

'ஜாதிகள் இல்லையடி பாப்பா!' என்று சொல்லித் தரும் ஆசிரியரே குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது 'என்ன ஜாதி?' என்று கேட்டு விட்டுத்தான் பள்ளியில்


11


12



13



14


15


16


17


18


19


20

சேர்க்கிறார். எனவே நான் எழுதப் போகும் கதைகளில் ஜாதிகளை ஒழிக்க என்னென்ன வழிகள் உள்ளன என்பதை ஆராய்ந்து எழுதுவேன்.

11. சந்திரசேகர் (பி.ஏ, வரலாறு, மூன்றாம் ஆண்டு)

எனக்கு என்னோட தாய்நாடுதான் முக்கியம். அதற்கு ஊறு விளைவிப்பவர்களுக்கு எதிராக எழுதிக் கொண்டே இருப்பேன்.

12. பி. நிர்மலா (புவியியல், மூன்றாம் ஆண்டு)

நான் எழுத்தாளராக இருந்தால் இந்த சமுதாயம் முன்னேற எழுதுவேனே தவிர நான் மட்டும் முன்னேற எழுத மாட்டேன்.

13. டி. லதா (பி.எஸ்ஸி புவியியல்)

சில பகுதிகளைத் தவிர தமிழகத்தின் பல இடங்களில் பெண்கள் நசுக்கப்படுகிறார்கள், பெண் கல்வி மறுக்கப் படுகிறது. என் யதார்த்தமான எழுத்து பெண்ணுரிமை, பெண் கல்வி பற்றி நிறையப் பேசும்!

14. எஸ்.ஸ்ரீ. ராஜேஷ் (பி.ஏ, ஆங்கில இலக்கியம்)

என் கதையில் என் கருத்துக்களுக்கு முக்கிய இடம் கொடுக்காமல் மக்களுக்குத் தேவையானதைத்தான் சொல்வேன்.

15. பி. புவனேஸ்வரி (பி.எஸ்ஸி கம்ப்யூட்டர்):

பெண்கள் முன்னேற்றத்திற்கு நிறையப் பேர் எழுதிட்டாலும் பரவாயில்லை... பாதி தூரம்தான் வந்துருக்கோம். பெண்களின் மேல் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு எழுதுவேன்.

16. ஆர். பிரபு (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, மூன்றாம் ஆண்டு)

இப்ப இருக்கற எழுத்தாளர்களைப் பார்த்தாலே வெறுப்பு வருது. எப்ப பார்த்தாலும் காதல், காதல், காதல்! இதைவிட்டா எழுத வேற சப்ஜெக்டே இல்லையா?! அவங்க காதலை மட்டுமே எழுதுவதால் காதல் மட்டும்தான் வாழ்க்கைன்னு முக்கால்வாசிப் பேர் நினைக்கிறாங்க. இதை மாத்தணும். வாழ்க்கை சாதம் மாதிரி; காதல் ஊறுகாய் மாதிரி! நான் எழுதினா வாழ்க்கையைப் பத்தித்தான் எழுதுவேன். அங்கங்கே ஊறுகாயைத் தொடுவேன்!

17. ராஜலக்ஷ்மி (பி.எஸ்ஸி புவியியல்)

சினிமாவைத் தாக்கித்தான் முதல்ல எழுதுவேன். வசூல் மட்டும்தான் இன்றைய தயாரிப்பாளர்களின், டைரக்டர்களின் குறிக்கோளாக இருக்கிறது. சினிமாவில் வன்முறையும், கற்பழிப்புகளும் அதிகமாகி விட்டது. ஒரு நல்ல கருத்தை மக்களுக்குச் சொல்லணும்ங்கிற அக்கறை யாருக்குமில்லை. இதையெல்லாம் சுட்டிக் காட்டவே எழுத்தாளராக விரும்புறேன்!

18. ஜே. முருகராஜ் (கம்ப்யூட்டர் சயின்ஸ், மூன்றாம் ஆண்டு)


ஒரு கமர்ஷியல் ரைட்டராதான் நான் இருக்க ஆசைப்படுறேன்!


19. ஆர். கோவிந்தசாமி (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, மூன்றாம் ஆண்டு)


அரசியல் வியாபாரம் பண்றவங்களோட அக்கிரமங்களை எல்லாம் என் ஒவ்வொரு எழுத்தும் வெளிச்சம் போட்டுக் காட்டும்.


20. எஸ். கவிதா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு)

என் முதல் நாவலே குழந்தைத்



21



22



23


24

தொழிலாளர்களின் நிலை பற்றித்தான் இருக்கும்.



25


26


27

21. எஸ். சிவக்குமார் (கெமிஸ்ட்ரி, இரண்டாம் ஆண்டு)


சமூகத்தில் நிகழும் அவலச் சம்பவங்களை அப்படியே கதையாக்குவேன்.


28


29

22. டி. ராமலிங்கம் (பி.ஏ. வரலாறு, மூன்றாம் ஆண்டு)

எளிய நடையில் எழுதுவேன். சொல்ல வர்றதைத் தெளிவாச் சொல்லுவேன்— அவ்வளவுதான்!


30

23. ந. ராஜ்குமார் (பி.காம், இரண்டாம் ஆண்டு)

பணத்திற்காக இல்லாமல், என் ஒவ்வொரு எழுத்தும் புழுதி மனிதர்களின் புண்ணான வாழ்க்கைக்கு மருந்தாக அமையும்!

24. வீ. கனகராஜ் (பி.காம், இரண்டாம் ஆண்டு)

மக்களின் நல்ல உணர்வுகளைத் தூண்டும்படி எழுதுவேன். சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறுவேன்.

25. பி. விஜய்சங்கர் (பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ்)

"எழுத்தாளர்களை மூணு வகையாக பிரிக்கலாம். ஒருத்தர் பணத்துக்காக எழுதறவரு. இன்னொருத்தர் புகழுக்காக எழுதுபவர். நாட்டு மக்களுக்காக எழுதுபவரை மூணாவதா வச்சுக்கலாம்!. மூணாவது வகையிலதாங்க நான் வருவேன்.

26. கே. பாஸ்கரன் (பி.எஸ்ஸி பிஸிக்ஸ், மூன்றாம் ஆண்டு)

நமது கலாசாரத்தின் வேர்கள் கிராமங்களில்தான் புதைந்திருக்கிறது. அந்த கிராமங்கள்தான் என் கதைகளின் நாயகர்கள்!

27. எஸ். மோகன்ராஜ் (பி.எஸ்ஸி பிஸிக்ஸ், மூன்றாம் ஆண்டு)

விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக எழுதுவதே என் நோக்கம்.

28. எஸ். ரேவதி (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி மூன்றாம் ஆண்டு)

சமுதாயத்திலும், சினிமாவிலும் பெண்களை இழிவுபடுத்துவதற்கு அளவே இல்லாமல் போய்விட்டது. எந்த ஒரு பெண்ணும் குடும்பத்தோடு டீ.வி கூடப் பார்க்க முடியாத அளவுக்கு கேவலப்படுத்திக் காட்டுறாங்க. என் எழுத்து மூலம் இதையெல்லாம் சுட்டிக் காட்டணும்னு நினைக்கிறேன்!

29. கே. வாசுகி (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி)

ரொம்ப நன்றிங்க. ஏன் நன்றி சொல்றேன்னா உண்மையிலேயே எழுத்தாளர் ஆகணும்கறது என்னுடைய குறிக்கோள். எடுத்துரைக்கவும், சுட்டிக்காட்டி, அறிவுறுத்தவும் நிறைய உண்டு. அவற்றையெல்லாம் பொழுதுபோக்கு அம்சத்துடன், பாமரனுக்கும் புரியும் வகையில் எழுதத்தான் நான் ஆசைப்படுகிறேன்.

30. கே. ஜெகதீசன் (பி.எஸ்ஸி, இயற்பியல் மூன்றாம் ஆண்டு)

நான் ஓர் எழுத்தாளரானால் முதலில், மக்களின் குறைகளை அரசியல்வாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கு உள்ள குறைகளை மக்களுக்கும் எடுத்துக் கூறும் ஒரு பாலமாக இருக்கவே விரும்புகிறேன்! ஒரு பக்கத்தில் உள்ள குறைகள் இன்னொரு பக்கம் இருப்பவர்களுக்குத் தெரியாமலேயே போவதால்தான் குழப்பம் வருகிறது. அக் குழப்பம் நீக்க என் எழுத்து உதவும்.

படங்கள், பேட்டி: **ஞானசேகர்**

12

"இருஷங்கர். மிஸ்டர் சோமசேகர் உங்களை ஆனந்த் 'சோமு'ன்னு கூப்பிடறது ஒரு முக்கியமான, வலுவான சாட்சியம். அதை நீங்க ஏன் மறைச்சு வெச்சிங்கன்னு தெரியணும். உங்களுக்குத் தெரியுமில்லை, ஆனந்த் இறக்கறதுக்கு முன்னாடி சொன்ன கடைசி வார்த்தை 'சோமு'ங்கறது."

"தெரியும்."

"நாங்க அதை வச்சுகிட்டு அவர் கலீக் டாக்டர் சோமசுந்தரத்தை துருவித் துருவி கேட்டுக்கிட்டு, அரஸ்ட் பண்ற வரைக்கும் போய்ட்டம்ங்கறதும் தெரியுமில்லை?"

"தெரியும்."

"தெரிஞ்சும் அதைப்பற்றி ஒண்ணுமே தெரியாதது போல் நடந்துகிட்டதுதான் வியப்பா இருக்குது."

"என்ன பண்ணிருக்கணும்ங்கறீங்க?"

"போலீஸ்கிட்ட இந்த ஒரு விஷயத்தை யாவது வந்து சொல்லி- உங்க அலிபையை..."

"பாருங்க ஸார், எனக்கு ஆனந்த் இறந்ததும் அவரை யார் கொன்னதுங்கறதும் இரண்டாம் பட்சமான விஷயங்கள்தான். எனக்கு முக்கியம் பாரதி. பாரதி கணவன் இறந்த அதிர்ச்சிகரமான திருப்பத்திலிருந்து – மறுபடி பழைய மன நிலைக்கு அவளைக் கொண்டு வரணும். அதுதான் முக்கியமா எனக்குப்பட்டது. என்னைப் போய் நீங்க சந்தேகிச்சிங்கன்னா அதைவிட அபத்தம் இருக்க முடியாது. நானா வாலண்டரியா பண்ணி 'ஆனந்த் என்னை சோமுன்னு கூப்பிடுவார்'ன்னு உண்மைய முன் வந்து சொல்லத் தோன்றலை. ஸாரி இப்ப என்ன?"

"நீங்க கொலை நடந்த அன்று பெங்களூர்லதானே இருந்தீங்க?"

"ஆமாங்க."

"அப்ப பாரதி எங்க இருந்தாங்க?"

"மெட்ராஸ்ல அவ தந்தை கூட."

"பாரதி உங்க முறைப் பெண்தானே?"

"ஓஹோ இப்படி ஒரு கோணம் இருக்குதோ?"

சோமசேகர் புன்னகைத்தான். தனக்குள் சிரித்துக் கொண்டான். "அதாவது 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டுபோய்ட்டான்'ங்கற கோணம். உண்மையை சொல்லப் போனா அதுதான் ஸார் நடந்தது. நான் பாரதியை கல்யாணம் செய்துக்க விரும்பினது என்னவோ உண்மை. அவ என் அக்கா பெண். இந்த மாதிரி கஸின்ஸ் மேரேஜ் பண்ணிகிட்டதால 'கன்சாங்வினிட்டி'யினால எங்க பேமிலில ரெண்டு உதாரணம். குழந்தைகள் டௌன்ஸ் சிண்ரோமோட பிறந்திருக்கு. அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இருக்கா தெரியலை. இருந்தாலும் பாரதியோட அப்பா, எங்க அத்திம்பேர், 'சேகர்' பாரதியை உனக்கு குடுக்கத்தான் விருப்பம். உன்னைவிட என் பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைக்கமாட்டான். ஆனா உங்கக்கா பயப்படறா" என்றார்.

"பாரதி என்ன சொல்றான்னேன்."

"'நீயே கேட்டுக்க' என்றார். நல்ல மனுசர். இந்த அதீத சோகத்தில எத்தனை பலமா இருக்கார் தெரியுமா அவனுக்கு?

"பாரதியும் பயப்பட்டா. ரத்தத்தில





ஆர் எச் டைப் வேற பொருந்தலை. பிறந்த உடனே ரத்தம் கொடுக்க வேண்டியிருக்கும் குழந்தைக்குன்னாங்க. அதனால் அந்த ஆசையை நடைமுறைக் காரணங்களால ஒதுக்கி வெச்சுட்டு அவ கூட நண்பனா பழகினேன். அது ஆனந்துக்கு முழுவதும் தெரியும். சின்ன வயசில செக்ஸ் அது இது எல்லாம் கிடையாது. ரொம்ப ஆரோக்கியமான சினேகிதம். ஒருத்தரை ஒருத்தர் கலாட்டா பண்ணுவோம். கிண்டல் பண்ணுவோம். கிரிக்கெட் விளையாடுவோம். பிக்னிக் போவோம். பாரதிக்கு ஆனந்த் பொருத்தம் தானான்னு எனக்கு சந்தேகம் இருந்தது. அதை கல்யாணம் ஆன ஒரு வருஷம் கழித்துக் கேட்டேன். 'பாரதி நீ சந்தோஷமா இருக்கியான்னு. 'இல்லை'ன்னு சொன்னா. அதுக்கு உன்னால என்ன பண்ண முடியும்னு சிரித்து கொண்டே கேட்டா!"

"அவர் ஆராய்ச்சில பிசியா இருந்தாலும் ஆனந்த் நல்ல கணவனாகத்தான் எங்களுக்கெல்லாம் தெரிஞ்சார். பாரதி கர்ப்பமா இருக்கான்னு தெரிஞ்சதும் எங்களுக்கெல்லாம் சந்தோஷமா இருந்தது."

ப்ரபாகர்ராவ் குறுக்கிடாமல் கேட்டு விட்டு அவன் கையைக் குலுக்கினார்.

"உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சா?"

"இல்லை. இனிமே ஆகலாம். பொண்ணு பார்த்து வச்சிருக்கேன் பாரதியை!"

ராவ் புறப்பட்டார்.

சங்கர் கேள்வி பதிலைத் தொடர்ந்தார்.

"நீங்கள் சம்பவ தினத்தன்று எங்கிருந்தீர்கள்."

"பெங்களூரில்தான்" என்றான் சேகர். காலை பல் துலக்கியதிலிருந்து மாலை என்ன செய்தேன் என்று சொல்ல வேண்டுமா?"

"ஆம். கேலியில்லாமல்."

"சேச்சே. போலிசுக்கு முழுவதும் ஒத்துழைப்பதே என் நோக்கம். காலை எழுந்ததும் நான் கபன் பார்க்கில் வாக் போவதுண்டு. லைப்ரரியை ஒரு சுற்று சுற்றுவிட்டு ஹைகோர்ட் கட்டடம் வரை ஓடி விதான் சௌதாவை..."

"நாங்கள் பெங்களூர் வரைபடம் கேட்கவில்லை. கொலை நடந்த அன்று உங்கள் நடவடிக்கைகள் அனைத்துக்கும் சாட்சியங்கள் இருக்கின்றனவா?"

சுஜாதா

"அனைத்துக்கும் என்றால் நான் டாய்லெட் போனதற்குக் கூடவா?"

ஷங்கர் அவரை முறைத்துப் பார்த்து "நீங்கள் எங்கள் பொறுமையை சோதிக்கிறீர்கள். உங்களை கேள்வி கேட்பதற்கு வேறு முறைகள் இருக்கின்றன. அதில் கொஞ்சம் வேதனை அதிகம்."

சோமசேகர் கண்களில் முதன் முறையாக பய ரேகை தெரிந்தது. "மன்னியுங்கள். நான் தப்பாக ஏதாவது பேசியிருந்தால்.."

"டாய்லெட் பற்றிய ஜோக் எல்லாம் வேண்டாம் புரிகிறதா?"

"புரிகிறது."

"என்ன வேலை செய்கிறீர்கள்?"

"அட்விஸ்டாவில் காப்பி ரைட்டர். அன்று காலையிலிருந்து மாலை வரை ஆபீஸில்தான் இருந்தேன்."

"ஆபீஸ் நேரம் காலை பத்திலிருந்து ஒன்று. இரண்டிலிருந்து மாலை ஏழு வரை."

"விடுமுறை?"

"ஞாயிறு."

"உங்கள் ஆபீஸ் தனி ஆபீஸா, கேபினா."

"கேபின்."

"எதிர் கேபினில் யார்?"

தலைப்புப் பஞ்சத்தில் திணறுகிறது தமிழ் சினிமா. பூங்கதவு, செம்மீனே, விண்மீனே, கண்மணியே, காதல்



சகாப்தங்கள் முடிந்து, கதாநாயகனின் பெயரையே தலைப்பாக்குகிற கல்சரை ரஜினி கொண்டு வந்தார். மணி ரத்னம் ஊர் பெயரை டைட்டிலாக்க, பம்பாயைத் தொடர்ந்து 'கல்கத்தா', 'ராஜஸ்தான்' என்கிற டைட்டில்களில் படங்கள் வருகின்றன.

ஸ்டில்லில் சரத் மெய்மறப்பது ராஜஸ்தானில். போக்ரான் சமாசாரம்தான் கதையாம். (போக்ரானில் எழுந்துள்ள சக்தி ஆலயத்தின் முன்னே வேப்பிலை டான்ஸ் உண்டா என்று தெரியலை!)

"சரஸ்வதி நாகராஜ். கிராஃபிக் ஆர்ட்டிஸ்ட்."

"ஆபீஸ் போன் நம்பர் என்ன."

"ஏன்?"

"ஆபீஸ் போன் நம்பர் என்ன?"

"365789"

சொல்லும்போதே சுழற்றினார்.

"மே ஐ டாக் டு மிஸ் சரஸ்வதி நாகராஜ்."

"அவளுக்கு ஞாபகம் இருக்குமோ இல்லையோ" என்று நகத்தைக் கடிக்க ஆரம்பித்தான் சேகர். ஷங்கர் அவனையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மிஸ் சரஸ்வதி என் பெயர் ஷங்கர். நான் சைன்டிஸ்ட் ஆனந்தின் கொலை வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கிறேன். இது சம்பந்தமாக உங்கள் ஆபிசில் எதிர் இருக்கையில் உட்கார்ந்திருக்கும் சோமசேகர்..."

"சோமு இன்னிக்கு ஆபீஸ் வரலியே."

"அவர் எனக்கு எதிரே இருக்கார்."

"அரஸ்ட் பண்ணியிருக்கீங்களா."

"இல்லை."

"எதுக்காக என்னைக் கூப்டிங்க."

"சம்பவம் நடந்த தினம் அவர் ஆபீஸ்ல இருந்தாரான்னு தெரிஞ்சுக்கறதுக்கு. நீங்க இங்க வர முடியுமா? இல்லை நாங்க அங்க வர்றம்!"

போனை வைத்த சங்கரின் முகத்தை ஆவலுடன் பார்த்தான் சேகர். "என்ன சொல்றா?"

"அவளுக்கு உங்களைப் பிடிக்காதா? குரலிலேயே விரோதம் தெரியுதே... மேலும் நீங்க இருந்தா சாட்சி சொல்ல மாட்டேன் கிறா?"

"கோபம் ஸார். ஆபிஸ்ல ஒரு பிரச்னை. ஒரு பெரிய அக்கவுண்ட் இவ பண்ண மிஸ்டேக்னால கெட்டுப் போச்சு. அதனால அவளை டிபார்ட்மெண்ட் மாத்திட்டேன். அந்த வெறுப்பினால அவ என் மேல புகார் கூடச் சொல்லலாம். சந்தேகம் வரும்படியா சாட்சி சொல்லலாம்."

"பயப்படாதீங்க. அதையும் நாங்க கவனிச்சு இன்னொரு சாட்சியையும் விசாரிப்போம். உங்க கம்பெனில கம்ப்யூட்டர் பயன்படுத்துவாங்களா?"

"எல்லாத்திலயும் கம்ப்யூட்டர்தான்."

"நீங்க போகலாம். பெங்களூரை விட்டு வெளிய போறதா இருந்தா இந்த நம்பர்ல

எனக்கு தகவல் கொடுத்துட்டு க்ளியரன்ஸ் வாங்கிட்டு போறது உங்களது பத்திரத்துக்கு உத்தரவாதம்.''

"நான் பெங்களூரை விட்டு எங்கேயும் போக மாட்டேன். க்ளைண்டை சந்திக்க 28ம் தேதி பம்பாய் போகணும்."

"அதுக்குள்ள இந்த விவகாரம் முடிஞ்சுரும்'' என்றார் ஷங்கர்.

அதே சமயத்தில் ப்ரபாகர் ராவுக்கு ரியாஸ் என்பவரிடமிருந்து போன் வந்தது.

என் பெயர் ரியாஸ் அகமத். சி.பி.ஐ.யின் பெங்களூர் பிரிவில் எஸ்.பி. ஒரு முறை நாம் ஸி.ஆர்.பி.எஃப். பட்டமளிப்பு விழாவில் சந்தித்துள்ளோம்."

"சந்தித்திருக்கலாம். அதைச் சொல்லவா போன் செய்கிறீர்கள்."

"இல்லை! டாக்டர் ஆனந்தின் கொலை வழக்கை உங்களிடமிருந்து பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு எனக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது. உங்களுக்கும் வந்திருக்குமே.''

"இல்லை."

டெலக்ஸ் ரூமில் விசாரித்துப் பார்கலாம். நிச்சயம் வந்திருக்க வேண்டும். இன்னும் ஒரு மணி நேரத்தில் கேஸ் காகிதங்களை தங்கள் மேசைக்கு வரவழைத்தால் அதைப் பார்வையிட நான் அங்கு வருவேன்."

"லுக் ரியாஸ். எனக்கு என் மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தால்தான் என்னால் செயல்பட இயலும். எங்கள் ஐ.ஜி. டூரில் இருக்கிறார்."

"நான் என் மேலிடத்துக்குச் சொல்லி உள்துறை அமைச்சரை உங்களுடன் பேசச் சொல்லட்டுமா?''

''தேவையில்லை'' என்று போனை வைத்த ப்ரபாகர் ராவின் கோபம் பல்கிப் பெருகியது. யார் இந்த ரியாஸ். ஒரு சின்ன எஸ்.பி. என்னை ஆணையிடுவதாவது! மீண்டும் போனை எடுக்கும் முன் அவர் போன் அடித்தது.

"ஏன் சார்! கேஸை சி.பி.ஐ.கிட்ட கொடு என்றால் கொடுப்பதுதானே! எதற்க்க தகராறு பண்ணுகிறாய். உன்னால் தான் முடியவில்லை. விதான் சபையில் என்னை கிழிக்கிறார்கள். நீ வேற! குடுத்துருய்யா" என்று பேசினார் அமைச்சர்.

"எஸ் ஸார், எஸ் ஸார் உடனே ஸார்!"

"தொல்லை விட்டது பார். நாம் கை கழுவி விடலாம் பார்."

''என்ன இருந்தாலும்... கர்னாடகா



''சிக்கன பட்ஜெட்டுல படம் எடுக்கலாம்! அதுக்காக இவர்தான் கேமிராமேன்; இந்த கேமராலதான் படம் எடுக்கணும்னா எப்படி?''

– குல்லு

போலிசின் கௌரவம் என்ன ஆவறது...''

''அதைக் கொண்டு போய் அல்சூர் ஏரியில் போடு. என்ன, உன்னை நம் ஊருக்கு மாத்திரவா?''

''வேண்டாம் ஸார்!''

''பையன் பொண்ணு எல்லாம் படிக்குதில்ல! சொன்னபடி கேளுப்பா!''

மந்திரி போனை வைத்தபின் முகம் தக்காளிச் சிவப்பாகி, அழைப்பு மணியை துன்புறுத்தி சங்கரை அழைத்து, சங்கர் டாக்டர் ஆனந்தின் கேஸ் காகிதங்களுடன் வந்தார்.

''சார் செக்ரடேரியட்டிலிருந்து போன் வந்தது. யாரோ ரியாஸ்னு.''

''எல்லாம் தெரியும். பேப்பர்ஸ் எல்லாம் இருக்குதில்ல?''

''இருக்குது.''

''அவன் தலைமேல போடு இதை!''

''யாரு.''

''ரியாஸ்!''

''இன்னொரு விஷயம்... ரியாஸுக்கு உதவி செய்ய என்னைக் கேட்டிருக்கார்.''

''முடியாது.''

''சரி அப்படியே சொல்லிடறேன்.''

''உன்னை எப்படித் தெரியும்?''

''ஐ.பி.எஸ். ஒரே பாட்ச்.''

(தொடரும்)



விவேக் வாழ்க்கையில் படிப்படியாகத்தான் முன்னேறினான். எலெக்ட்ரிகல் எஞ்ஜினியரிங்கில் டிப்ளமோ முடித்து, அப்புறம் பார்ட்-டைம் கோர்ஸில் பி.ஈ முடித்து, பார்த்துக் கொண்டிருந்த மின்சாரவாரிய அசிஸ்டண்ட் எஞ்ஜினியர் வேலையே போதும் என்று ஒரு வட்டத்துக்குள் வாழ்ந்து கொண்டிருந்தவனை, சிங்கப்பூர் வா என்று வர வழைத்தது அவன் நண்பன் சுந்தரம்தான்.

சிறிது தயக்கத்திற்குப் பிறகு, இரண்டு வருட விடுப்பு எடுத்துக் கொண்டு விவேக் சிங்கப்பூர் வந்து சேர்ந்தான். ஏகப்பட்ட பிரயாசைகளுக்கு அப்புறம் ஒரு சுமாரான அமெரிக்க நிறுவனத்தில் வேலை கிடைத்தது. சிங்கப்பூர் சம்பாத்தியம் மூலம் வாழ்க்கையில் நிறைய விஷயங்களைச் சுலபமாகச் சமாளிக்க முடிந்தது. நல்ல இடத்தில் இரண்டு தங்கைகளுக்கும் கல்யாணத்தை நடத்தி முடித்த நேரம், பி.ஆர். என்ற சிங்கப்பூர் நிரந்தரவாசி உரிமையும் கிடைத்தது.

அடுத்த முறை ஊருக்குச் சென்ற பொழுது, நண்பர்கள் பலர் வேண்டாம் என்று தடுத்தும் தன்னுடைய மின்சார வாரிய எஞ்ஜினியர் வேலையை ராஜினாமா செய்தான். ஊரில் வேலையின்றி எத்தனையோ பேர் வருடக் கணக்கில் காத்துக் கொண்டிருக்க, சிங்கப்பூரில் கை நிறைய சம்பாதிக்கும் நேரம், அரசாங்க வேலையைத் தக்கவைத்துக் கொள்ள வருஷ விடுப்பு எடுத்துக் கொண்டு சும்மா வேலையில் ஒட்டிக் கொண்டிருப்பது அநியாயம் என்பது அவன் எண்ணம்.

அப்புறம் கோகிலாவை மணந்து, அகல்யாவையும் பெற்றெடுத்து, மூன்று அறை வீடு ஒன்றையும் வாங்கினான். பொறுப்புகள் அதிகம் இருந்ததால் நிறைய கடன் வாங்கியதில் பொருளாதார நிலை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வராமல் இருந்தாலும் வாழ்க்கை ஒரு மாதிரி சீராகத்தான் போய்க் கொண்டிருந்தது – ஸ்திரமான வேலை என்ற ஒன்று கையில் இருந்தவரை!

பக்கத்து நாடுகளில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் சிங்கப்பூரும் சிக்கிக் கொண்டதால் எல்லா கம்பெனிகளுமே 20-40% சதவிகிதம் வரை ஆட்குறைப்பு செய்தால் மட்டுமே சமாளிக்க முடியும் என்ற நிலைமையில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இன்று காலைவரை விவேக் தனக்கும் அந்த மாதிரி ஒரு அவல நிலை வரும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. அமெரிக்க நிறுவனம். தப்பி விடலாம் என்றுதான் நினைத்திருந்தான். மாலை மூன்று மணிக்கு எல்லோரையும் திடீ

போட்டிக்கதை – 7

ரென்று அழைத்து ஒரு மாத சம்பளத்துடன் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார்கள்.

"இனி என்னங்க பண்ணுறது?" என்றாள் கோகிலா கவலையுடன்.

"ஒரு மாசத்துக்குள்ளே வேலை வாங்கிடலாம் கோகி... நம்பிக்கை இருக்கு." விவேக் அவள் தலையை வருடியபடி தொடர்ந்தான். "நிரந்தரவாசியா இருக்கிறதால தப்பிச்சோம். எம்ப்ளாய்ண்மெண்ட் பாஸ் ஹோல்டரா இருந்தா போன வாரம் நாராயணனுக்கு ஏற்பட்ட மாதிரி நாளைக்கே எல்லோரும் பொட்டி படுக்கையோட ஊருப்பக்கம் போய்ச் சேர்ற மாதிரி ஆகியிருக்கும்."

"ஒரு மாசத்திலே வேலை கிடைச்சிடுமா?"

"பார்க்கலாம்! ஜி.எம்.பில சொல்லியிருக்கேன். நாளைக்கு காலையிலே பாலா வரச் சொல்லியிருக்கார். ஒரு மாசத்திலே எப்படியாவது ஏதோ ஒரு வேலை கிடைச்சிடும். ஆனா... அதுவரை வண்டி ஓடணுமே..."

உறவுகள்

"நான் நானூறு வெள்ளி சேர்த்து வச்சிருக்கேன். அதை வச்சு சமாளிக்க முடியுதான்னு பார்ப்போம். நாங்க வேணா ஊருக்குப் போகவா?"

"ஊருக்கா?" என்று விவேக் சிரித்தான். "டிக்கெட்டுக்குக் காசுக்கு எங்க போறது!"

இரவு ஒன்பது மணிக்கு சுந்தரம் வீட்டுக்கு வந்திருந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான்.

"கவலைப்படாதே விவேக். ஸ்ரீதர்கிட்டே விஷயத்தைச் சொல்லியிருக்கேன். ஜுராங்க் ஷிப்யார்ட்ல ஏதாவது முடியுமான்னு பார்க்கிறேன்னு சொல்லியிருக்காரு. நீ எதுக்கும் கவலைப்படாதே... சமாளிச்சிடலாம்."

"எனக்கு நம்பிக்கையில்லை சுந்தரம். கோகிலாகிட்டே எப்படியும் ஈஸியா வேலை கிடைச்சிடும்னு ஆறுதல் சொல்லி வைச்சிருக்கேன். இப்போ சிங்கப்பூர் இருக்கிற நிலையிலே இரண்டாயிரம் வெள்ளிக்கு வேலை கிடைச்சாலே பெரிய விஷயம்!"

"எவ்வளவு கொடுத்தாங்க?"

"ம்ஹூம். இன்கம்டாக்ஸுக்குன்னு ஒரு மாச சம்பளத்தையும் பிடிச்சுக்கிட்டு வெறும் முன்னூறு டாலர்தான் கையிலே கொடுத்தாங்க."

சுந்தரம் பாண்ட் பாக்கெட்டில் இருந்து செக் ஒன்றை எடுத்து விவேக்கிடம் நீட்டினான்.

"இந்தா விவேக்! சிட்டிபேங்க் ரெடி கிரெடிட் செக். இரண்டாயிரம் டாலர்! அவ்வளவுதான் என்னால முடிஞ்சது. ஆல்ரெடி உனக்குன்னு நாலாயிரம் எடுத்தாச்சு."

விவேக் செக்கை சுந்தரத்திடமிருந்து வாங்கிக் கொண்டான்.

"ரொம்ப தாங்க்ஸ் சுந்தரம். நீ மட்டும் இல்லேன்னா... என்னால... நினைச்சுப் பார்க்கவே பயமா இருக்கு சுந்தரம்."

"இந்த நேரத்திலே உன்னைக் காயப்படுத்துறேனேன்னு கோவிச்சுக்காதே விவேக்... ஊருக்கு பணம் அனுப்பற விஷயத்திலே நீ பண்ணுறது உனக்கே நல்லா இருக்கான்னு யோசிச்சுப் பார்த்தாயா?"

"சொல்லு."

"நாம ரெண்டு பேருமே எஞ்ஜினியர்கள்தான். சம்பளத்திலேயும் ஒண்ணும் பெரிய வித்தியாசம் இல்லே. ஆனா... நீ இப்போ எவ்வளவு கடன்ல மூழ்கி இருக்கே தெரியுமே?"

விவேக் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தான். சுந்தரம் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்தது.

"மாசம் நாலாயிரம் வெள்ளி சம்பாதிக்க என்ன புண்ணியம்? நீயும் சிங்கப்பூர் வந்து அஞ்சு வருஷம் ஆகப் போகுது. ஏதாவது சேமிச்சு வச்சுருக்கியா... இந்த மாதிரி திடீர்னு ஏதாவது ஒண்ணு நடக்கும்போது எப்படிச் சமாளிக்கிறதுன்னு என்னிக்காவது யோசிச்சிருக்கியா விவேக்?"

"என்ன பண்ணச் சொல்றே சுந்தரம்... கமிட்மெண்ட்ஸ்! உனக்குத் தெரியாததா?"

"என்னடா பெரிய கமிட்மெண்ட்ஸ்? எல்லாம் நீயா விலை கொடுத்து வாங்கிக்கிறது. பேங்க்ல கடன் கொடுக்கிறான்ங்கிறதுக்காக யாரு காசு கேட்டாலும் உடனே கடன் வாங்கிக் கொடுத்திர்றதா? போன மாசம் பெரியப்பா பையனுக்கு பிஸினஸ் ஆரம்பிக்க வேணும்னு கேட்டவுடனே ஒரு லட்சம்

ரவிகாந்தன்

அமெக்ஸ்ல லோன் எடுத்து அனுப்பியிருக்கே. இது தேவையா? உன் கையிலே பணம் இருக்கும்போது மற்றவங்களுக்குக் கொடுத்தா தான்டா அது உதவி. கடன் வாங்கிக் கொடுக்கிறதுக்குப் பேரு உதவி இல்லை."

"புரியுது சுந்தரம்... ஆனா..."

"ஓகே! இனிமேலாவது கமிட்மெண்ட்ஸ்"னு உன்னையே ஏமாத்திக்காதே... நான் கிளம்பறேன்."

"தேங்க்ஸ் சுந்தரம்."

இனிமேல் எக்காரணத்தைக் கொண்டும் ஊருக்கு தேவைக்கு அதிகமாக பணம் அனுப்பக் கூடாது என்ற தெளிவான முடிவுக்கு வந்திருந்தான்.

பதினோரு மணிக்கு விவேக் ஓரளவு தெளிவாகி, தூங்கலாம் என்று படுத்தபோது தான் சென்னையிலிருந்து போன் வந்தது. அப்பாதான் பேசினார்.

"விவேக்! அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ஆஸ்பத்திரிலே சேர்த்திருக்கு." எதிர்முனையில் பதட்டமின்றி அப்பா பேசினார்.

"என்னாச்சப்பா?" என்றான் விவேக் அதிர்ச்சியுடன்.

வேலை போன அதிர்ச்சியிலிருந்தே இன்னும் மீள முடியவில்லை. அதற்குள்... அம்மாவிற்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது என்று மனசு அடித்துக் கொண்டிருந்தது.

"மைல்ட் ஹார்ட் அட்டாக்!"

"என்னது? ஹார்ட் அட்டாக்கா?"

"ஆமாப்பா!"

"அம்மா எப்படி இருக்காங்க?"

"இப்போ ஓக்கே! பயப்படறதுக்கு ஒண்ணுமில்லேன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. இங்கே விஜயால அட்மிட் பண்ணியிருக்கோம்."

செலவு எக்கச்சக்கமாக ஆகுமே என்ற கவலை வேறு தொற்றிக் கொண்டது.

"இந்த மாசம் பணம் அனுப்பும்போது பத்தாயிரம் கூட அனுப்பு. நான் ஆஸ்பத்திரிக்கு போயிக்கிட்டிருக்கேன்" என்றவர் அதற்குமேல் பேசாமல் வைத்து விட்டார்.

பணம்!

அவன் முகத்தில் தோன்றிய மாற்றங்களை நன்கு உணர்ந்தவளாக, "என்ன சொன்னாங்க மாமா?" என்றாள் கோகிலா.

அப்பா பேசியதை அப்படியே சொன்னான்.

"ஒண்ணும் விரிவா சொல்லலை... பாவம் அம்மா... தனியா ரொம்ப சிரமப்படுவாங்க."

"ரொம்ப செலவாகுமே?"

"அதான் உடனே பணம் அனுப்பச் சொல்லியிருக்கார்."

சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. பிறகு, ஏதோ முடிவுக்கு வந்தவளாக கோகிலா, "நான் சொல்றதைக் கேட்கறீங்களா?" என்றாள்.

"சொல்லு."

"நான் வேணா உடனே ஊருக்குப் போயிட்டு வரவா... இந்த நேரத்திலே நான் கூட இருந்தா அத்தைக்கு துணையா இருக்கும்..."

"உடனே எப்படி போறது கோகி?" என்றான் யோசனையுடன். "அதுவும் நாம இப்ப இருக்கிற நிலையிலே..."

"ஊருக்குப் போறதுதான் பெட்டர்ங்க." என்றாள் தீர்மானமாக. "என்னதான் ஆஸ்பத்திரியில பார்த்துக்கிட்டாலும் நாம கூட இருந்தா அதுவே அத்தைக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கும்."

"நீ சொல்ற பாயிண்ட் ஓக்கேதான். பணத்துக்கு எங்கே போறது?"

"சுந்தரம் கொடுத்த செக் இருக்கே?"

"அந்தப் பணம் எல்லாம் அப்படியே இந்த மாத இன்ஸ்டால்மெண்ட் கட்டத் தான் சரியா இருக்கும்."

"என்னோட நகைகளை அடகு வச்சு கொஞ்சம் புரட்டலாம். எனக்கென்னவோ உடனே ஊருக்குப் போறதுதான் நல்லதுன்னு தோணுதுங்க."

மறுநாள் காலையில் எழுந்தபோது விவேக் மிகத் தெளிவாக இருந்தான்.

அன்று இரவே ஏதாவது ஒரு ஏர்லைன்ஸில் கோகிலாவையும் குழந்தையையும் சென்னைக்கு அனுப்பிவிடுவது என்ற முடிவுக்கு வந்திருந்தான்.

காலை ஒன்பது மணிக்கு சென்னைக்கு போன் செய்தபோது அப்பா அவசரமாக எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தார்.

"இப்ப அம்மாவுக்கு எப்படி இருக்குப்பா?"

"இப்ப நல்லா பேசறா... ரெண்டு நாள் பெட் ரெஸ்டுக்கு அப்புறம் டிச்சார்ஜ் பண்ணிடலாம்னு ராத்திரி டாக்டர் சொன்னார். நீ ஒண்ணும் கவலைப் படாதே... பணத்துக்கு நான் இங்கே சமாளிச் சுக்கிறேன்... ராத்திரி சொன்னதை மறந்திறாதே... பத்தாயிரம் சேர்த்து இன்னிக்கே அனுப்பிடு! சரியா?"

தனக்கு வேலை போன விஷயத்தைச் சொல்லலாமா என்று ஒரு கணம் யோசித்தான். வேண்டாம்! எதற்கு அவர்களுக்கும் தேவையற்ற டென்ஷனை உண்டு பண்ணிக் கொண்டு என்று முடிவு செய்து கொண்டு தொடர்ந்தான்.

"அப்பா! நான் இன்னிக்கு ராத்திரி ஃப்ளைட்ல கோகிலாவையும் அகல்யாவையும் ஊருக்கு அனுப்பலாம்னு இருக்கேன் – அம்மாவைக் கவனிக்கக்க."

"கோகிலாவை ஏன்டா இப்பொழுது அனுப்பி வைக்கிறே... செலவுதானே... இங்கே நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

"இப்போ கோகிலா இருந்தா அம்மாவுக்கு ரொம்பத் துணையா இருக்கும்."

அப்பா ஒன்றும் பதில் சொல்லாமல் தொலைபேசியை வைத்து விட்டார்.

சுந்தரத்துக்கும் போன் செய்து விஷயத்தைச் சொன்னான்.

பிறகு டிராவல் ஏஜென்ஸிக்குப் போன் செய்து அன்று இரவு சென்னை செல்ல டிக்கெட் புக் செய்தான். பிறகு, வேலை தேடி அலைந்து விட்டு, மதியம் வீட்டுக்குப் போன் பண்ணினான். கோகிலா ஊருக்குக் கிளம்பத்



"நீங்க சற்றும் எதிர்பார்க்காத பரிசு தரோம்னு விளம்பரத்தைப் பார்த்து தீபாவளி மலர் வாங்கினேன்."

"என்ன கொடுத்தாங்க?"

"ஒரு உருண்டை தீபாவளி லேகியம்...!"

– சி.வி. ஸ்ரீதர்

தயாராகிக் கொண்டிருந் தாள். அப்பா சோனி விஸிடி வாங்கி வரச் சொல்லி அதன் மாடல் நம்பர் கொடுத்திருந் தார். காசில்லாத இந்த நேரத்தில் விடியோ சிடி ரொம்ப அவசியம்!

அடகுக் கடையில் நகைகளை வைத்ததில் ஆயிரத்து நானூறு வெள்ளி கிடைத்தது.

மாலை நான்கு மணிக்கு துவாஸில் இருந்த ஒரு சீன நிறுவனத்திற்கு நேர்முகத் தேர்வுக்கு சென்றுவிட்டு டிராவல் ஏஜெண்டிடம் செல்லும் வழியில் கோகிலாவுக்கு மறுபடியும் போன் பண்ணினான்.

"நான் ஆர்சர்ட் ரோடு போய் டிக்கெட் கலெக்ட் பண்ணிக்கிட்டு முஸ்தபாவுல சில சாமான்கள் வாங்கிக்கிட்டு வந்திர்றேன்."

அவள் சுவராஸ்யமின்றி இருந்தாள்.

"என்னாச்சு கோகி? ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"மாமா போன் பண்ணினார்."

"என்னவாம்? வேற ஏதாவது லிஸ்ட் கொடுத்தாரா?"

"உங்களை உடனே போன் பண்ணச் சொன்னாங்க."

"ஏன் கோகி...?" என்றான் விவேக். கைகள் நடுங்கின. "அம்மாவுக்கு ஏதாவது?"

"டிக்கெட் வாங்கிறதுக்கு முன்னாடி மெட்ராஸுக்கு போன் பண்ணிடுங்க..."

உடனே விவேக் சென்னைக்கு போன் பண்ணினான். முருகா! அம்மாவுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது.

அப்பாதான் எடுத்தார்.

"அம்மாவுக்கு இப்ப எப்படி இருக்கு?"

"பரவாயில்லை."

"எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சிட்டேன். டிக்கெட் வாங்கத்தான் போயிக்கிட்டிருக்கேன். ராத்திரி சிங்கப்பூர் ஏர்லைன்ஸிலே கோகிலாவையும் குழந்தையையும் அனுப்பி வச்சிர்றேன். வேற ஏதாவது வாங்கிக் கொடுத்து விடவா..."

"அதுக்காகத்தான் போன் பண்ணினேன்."

"என்ன வேணும்?"

"இல்லே... இப்போ எதுக்கு கோகிலாவை அனுப்பிக்கிட்டு... செலவுதானே..."

"அதையே சொல்லிக்கிட்டிருக்காதீங்கப்பா... அம்மாவுக்கு இப்போ ஆதரவா பார்த்துக்க கோகிலாதான் சரி!"

"அதெல்லாம் நாங்க இங்கே பார்த்து சமாளிச்சுக்கிறோம்."

"அப்போ கோகிலாவை அனுப்ப வேண்டாம்ங்கிறீங்களா?"

"ஆமா!"

விவேக் ஒன்றும் சொல்லாமல் இருந்தான். அப்பாமேல் கோபமாக வந்தது.

"அதுக்குப் பதிலா அந்த டிக்கெட் பணத்தை உடனே அனுப்பி வை!"

"வாட்?" என்று விவேக் கத்தினான்.

"அமைஞ்சிக்கரை சிவானந்தம் சாரோட பையன் சாரதி ராத்திரி ஏர்- இண்டியாவிலே வர்றாராம். டிக்கெட்டை கான்சல் பண்ணிட்டு, நீ நேரா ஏர்போர்ட்டுக்குப் போயி காசை அவர்கிட்டே கொடுத்துடு. விடியோ சிடியை மறந்திராதே... மூவாயிரம் வெள்ளி ரொம்ப அர்ஜெண்டா தேவைப்படுது. மாருதி ஒண்ணு நல்ல விலைக்கு வருது. வாங்கணும்." ●

குறிப்பு : சிங்கப்பூர் டாலரை தமிழில் 'வெள்ளி' என்று அழைப்பது வழக்கம். ஒரு சிங்கப்பூர் டாலர் என்பது சுமார் 25 ரூபாய்க்குச் சமம்.

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

நதிகளை தேசிய மயமாக்கக் கோரியும், தென்னக நதிகளை இணைக்கக் கோரியும் முதல் பாதயாத்திரையை 1991-ல் துவங்கி னோம். நீண்ட பயணம். கன்னியாகுமரி யிலிருந்து ஆரம்பம். அனுபவமில்லாத கால்கள். இயக்க இளைஞர்கள், "நீங்கள் தினந்தோறும் கொஞ்சம் நடந்து பழகுவது நல்லது" என்று சொன்னார்கள். ஆனால் எங்கே நடக்க நேரம்? நடந்து விடலாம் என்ற நம்பிக்கை! நல்ல வெயில் காலம்.

ஒவ்வொரு நாளும் வெயிலுக்கு முன் கூட்டுப் பிரார்த்தனை செய்து விட்டுக் கிளம்புவோம். சுமார் பன்னிரண்டு கிலோ மீட்டர் நடப்பது; பின் சுமார் 11 மணி அளவில் காலை உணவு; ஓய்வெடுத்துக் கொண்டு மதிய உணவுக்குப் பின் சுமார் நாலு மணிக்கு மீண்டும் 12 கிலோமீட்டர் பயணம். இரவு 7-8 மணிக்கு முடியும். துணையாக ஒரு ஜீப், ஒரு வேன், வேஷ்டி துணிமணிகளைக் கொண்ட அனைவரது பெட்டிகளையும் சுமந்து கொண்டு; மைக் பொருத்தப்பட்டு.

எங்கே கிராமங்களைக் கண்டாலும், எங்கே மக்களைக் கண்டாலும் ஜீப்பில் என்னை ஏற்றி விடுவார்கள்; நதி நீர் பற்றிய பிரசாரம். முன்னதாகவே தங்குமிடங்கள், உணவு மற்றவை எல்லாம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன.

முதல் நாள், முதல் 13 கிலோமீட்டரை நடந்து முடிப்பதற்குள் இன்னும் எவ்வளவு தூரம், எவ்வளவு தூரம்? என்று கேட்கும் படியான நிலை!

சிலப்பதிகாரத்தில் இரவோடிரவாகக் கோவலன், கண்ணகியை அழைத்துக் கொண்டு பூம்புகாரிலிருந்து மதுரையை நோக்கி நடப்பார். பாவம், கண்ணகி வீட்டை விட்டு வெளியே அதிகம் நடந்தறி யாத பெரிய இடத்துப் பெண். சுமார் 10 மைல் நடந்தவுடன் மதுரை வந்துவிட்டதா என்று கேட்கிறாளாம். அந்தக் கதைதான் நம் விஷயமும்!

"இன்னும் கொஞ்ச தூரம்தான்" என்பார் கள். எங்கே தங்குவோம் இரவில்? சில சமயம் பள்ளிக்கூடங்களின் வெளிப்புற வராண்டா, பஞ்சாயத்து போர்டு கட்டடம், ஊர் எல்லைப்புறத்தில் உள்ள காளியம்மன் கோயில், பல மதியங்களில் தென்னந் தோப்புகள். பலசமயம் அறிமுகமில்லாத அன்பர்களின் வீட்டில், குடிசைகளில், கயிற்றுக்கட்டிலில், தரையில்.

பாதயாத்திரை துவங்கிய மூன்று நாட் களில் என் இடது பாதத்தின் முன் பகுதியில் பெரிய கொப்பளம். தளதளவென்று தண்ணீர் கட்டிக் கொண்டு, பஞ்சு வைத்து துணியை அதன் மீது சுற்றிக் கொண்டு, காலை இழுத்துக் கொண்டு நடக்க வேண் டியதுதான்!



எங்கு கூட்டம் போட்டுப் பேசி முடிக் கிறோமோ அங்கே "அப்பாடா!" என்று திரும்பிப் பார்த்தால், அங்கே ஒரு நர்சிங் ஹோம், அல்லது டாக்டர் வீட்டுப் பலகை தொங்கும். உள்ளே போவேன். டாக்டர் அன்புடன் கவனிப்பார்; சொல்வார்: "கொப் பளத்தைக் குத்திவிட்டு நீரை வடித்து விடு கிறேன். எல்லாம் சரியாகிப் போய் விடும். ஆனால் இரண்டு நாள் இங்கே மருத்துவ மனையில் தங்கி ரெஸ்ட் எடுத்துக் கொண்டால் சரியாய்ப் போய்விடும்" என் பார்.

பாதயாத்திரையில் 'ரெஸ்டா?' அதெல் லாம் நடவாத காரியம். நான் நடக்காமல்

அவர்களை மட்டும் நடக்கச் சொல்வதா? ஊஹூம்!

''சும்மா மருந்து போட்டுக் கட்டி விடுங்கள். பார்த்துக் கொள்றேன்'' என்று சொல்லிவிட்டு நடந்து போக வேண்டியது தான். கொப்பளத்தில் இருந்து தண்ணீரை உள்ளேயே உறிஞ்சிக் காய வைக்கும் மாத்திரைகளை ஒரு டாக்டர் கொடுத்தார்.



பாதை எங்கும் பரவச மக்கள்!

நான்கு நாளில் காய்ந்து போயிற்று. தோல் உறிந்தது. பார்த்தால் மிக மிருதுவான ரோஸ் கலரில் புதிய தோல்! சிறு கல் கூடப் பட முடியாது; அப்படி வலிக்கும்!

பொட்டல் வெளிகளிலே நடந்தோம். கிராமங்களில் வயல்களின் குறுக்கே நடந்தோம்.

இந்தக் களைப்பை எல்லாம் எது போக்கியது? எங்கள் இளைஞர்கள். எங்கள் பொதுக் காரியதரிசி சத்திய நாராயணன். இதை திட்டமிட்டு ஏற்பாடு செய்தவர்; வயதில் இளைஞர். தன்னம்பிக்கை மிக்கவர். அனைவருக்குமே இது பயிற்சிக்கூடமாக இருந்தது.

பொதுமக்களின் வரவேற்பு அதிசயிக்கத் தக்க வகையில் இருந்தது. டீக்கடையில் கூட்டம் இருக்கிறதென்றால் நடைப் பயணத்தை நிறுத்தி கூட்டம் போடுவோம். பஸ் ஸ்டாண்டில் மக்கள் நிற்கிறார்கள் என்றால் அங்கே பிரசாரம். கடைத்தெருவில் பேசும்போது அன்புடன் சோடா கொண்டு வருவார்கள்; 'டீ' கொண்டு வருவார்கள்.

கடையநல்லூர், விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், ராஜபாளையம், திருச்சி, மயிலாடுதுறை, சென்னை என்று எங்களுக்குக் கிடைத்த வரவேற்பில் திளைத்துப்போய்விட்டோம். எந்த ஊரில் கூட்டம் போட்டுக் கிளம்புகிறோமோ அந்த ஊர்க்காரர்கள் அடுத்த ஊர்வரை எங்களுடன் வருவார்கள்!

ஓரிடத்தில் ஓர் இளம் தாய், அப்போதுதான் நடக்கக் கற்றுக் கொண்ட தன் குழந்தையிடம் ஒரு இரண்டு ரூபாய் நோட்டைக் கையில் கொடுத்து தெருவில் நடந்து கொண்டிருந்த எங்களிடம் அனுப்பினார். அந்தக் குழந்தை கைகளில் நோட்டைப் பிடித்துக் கொண்டு எங்களை நோக்கி வந்தபோது கண் கலங்கியது. மனம் சிலிர்த்தது.

மற்றோரிடம். கடைத்தெரு; பேசி முடித்தவுடன் உடல் 'தாட்டிகை'யான ஒரு பெரிய பெண்மணி, அரையணா காசு அளவுக்கு நெற்றியிலே குங்குமம். அள்ளி முடித்த தலை. தெருவில் கடை விரித்து மிட்டாய் விற்றுக் கொண்டிருந்தார். எலுமிச்சை வில்லை மிட்டாய் கொண்ட ஒரு பெரிய பொட்டலத்தைத் தூக்கி வந்து என்னிடம் கொடுத்தார். அவர் கண்களில் வாழ்த்துக்கள். என் கண்களில் நீர்! அந்தப் பெண்மணிக்கு நான் – நாங்கள் என்ன செய்து விட்டோம்!



வேறொன்றுமில்லை. யோகா மையத்தின் உள்ளே செல்லும் எந்தவொரு வாகனத்துக்கும் என்ட்ரன்ஸ் ஃபீஸ் 20 ரூபாயாம்!

''விழாவுக்கு வந்திருந்த கூட்டம் இவ்வளவுதான் என்று சொல்லி மாளாது! எழுத்தாளர் (சுபா)சுரேஷ், சுப்ரபாரதி மணியன், கவிஞர் முத்துதயா போன்றோரையும் விழாவில் காண முடிந்தது. முத்தையா இந்த வருடம் 'ஜக்கி'யைப் போற்றி ஒரு புத்தகமே வெளியிட்டிருந்தார். (சுபா)சுரேஷ் வருடா வரு



• பரவச நிலையில் பெண்கள்

கோவை பூண்டி பக்கம் யானைகளின் அட்டகாசமே அதிகம் இருக்கும் அந்த அத்துவானக் காட்டில் – அர்த்த ராத்திரி வேளையில், ஆயிரக்கணக்கில் மனிதத் தலைகள்! எண்ணிறைந்த டாட்டா சுமோக்கள், அம்பாஸிடர், ஃபியட், பென்ஸ் வண்டிகள்... கிடைத்த சந்துகள், மரங்களின் இண்டு இடுக்குகளிலெல்லாம் கார்கள்... டூ வீலர்கள். என்ன விஷயம்...?

சர்ச்சைக்குள்ளான ஈசா யோகா மையம் 'ஜக்கி வாசுதேவ்' நடத்திய ஈசா திருவிழா!

''என்ன சார் ஃபோர்வீலருக்கு 20 ரூபா சரி... டூ வீலருக்கும் அதுவே கொடுன்னா எப்படி...?'' முகப்பிலேயே தம் மனைவி குழந்தைகளுடன் TVS 50 சகிதம் ஈசா மைய சீடருடன் வாதிட்டுக் கொண்டிருந்தார் ஒருவர்.

செட்டிநாடு வழியாக நடந்தோம்; கோனாப்பட்டு என்று நினைக்கிறேன். இரண்டு பக்கமும் பெரிய, பெரிய வீடுகள். பணக்கார வீடுகள். வாசலில் பெண்கள் – தாய்மார்கள் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டு நின்றார்கள். நாங்கள் திரும்பிக் கும்பிட்டு விட்டால் ஈடாகி விடுமா?

பல இடங்களில் பல துறவிகள் எங்களுடன் நடந்தார்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பார்கள்; அதாவது புனிதத்தலமாக கோயில் இருக்கும் ஊர், அந்த ஊர்த் திருக்குளம், அந்த கோயிலில் உள்ள ஆண்டவர் என்று தரிசித்து வருவார்களாம், தீட்சை பெற்றுக் கொண்ட துறவிகள். அப்படித்தான் புனிதமான மக்களை, தன்னலம் மீறிய மக்களை, அன்பால் தொடப்பட்ட மக்களைக் கண்டோம்; அவர்கள் வாழும் ஊரில் நடந்தோம்; அவர்கள் ஊரில் ஓடும் ஆற்றில் குளித்தோம். பலர் வீட்டில் – முகம் தெரியாதவர்களின் வீட்டில் உண்டோம், உபசரிக்கப்பட்டோம்.

சென்னைக்கு வந்தபோது வரிசையாக வரும் கூட்டம் ஆயிரத்திற்கு மேல் போயிற்று. பிரமிப்பை ஏற்படுத்தியது.

கிண்டி அருகில் வரும்போது எதிர்சாரியில் ஒரு மத்திய அமைச்சர் காரில் கிண்டி சாலை வழியே விமான நிலையத்திற்குச் செல்கிறாராம். நாங்கள் சென்னை நோக்கிச் செல்கிறோம். அவர் சென்னையிலிருந்து செல்கிறார். இடையே சாலையைப் பிரிக்கும் இரும்புத் தடுப்புக் கம்பிகள். காவல்துறையினர் எங்களை நிறுத்தினார்கள், நாங்கள் வேறு சாலை வழியாக – மத்திய அமைச்சருக்காகப் போக வேண்டுமென்று நிர்ப்பந்தித்தார்கள். இதை எல்லாம் முன்னே சென்ற எங்கள் இளைஞர்களே சமாளித்தார்கள். அது



• ஜக்கி

பேராட்டம்... பேயாட்டம்...!

டம் வருவது வழக்கமாம்! சுப்ரபாரதி இந்த வருடம் மட்டுமே எட்டிப் பார்த்திருக்கிறார். 'ஏதாவது மர்ம முடிச்சுகள் அவிழுமா...?' என்ற நோக்கில்தான்.

சுப்ரபாரதி மணியன் போலவே, நிறைய பேர் இந்த வருடம்தான் முதன்முறையாக வருவதாகக் கூறினார்கள். ஏனென்று கேட்டபோது ஜீப்பில் வந்த சில இளைஞர்கள் சொன்ன பதில்: ''அடிக்கடி பத்திரிகையில் இந்த சாமியார் பத்தி என்னென்னவோ எழுதினாங்களே... இப்பப் போனாத்தானே என்ன ஏதுன்னு வசதியாப் பார்க்க முடியும்...?''

''நம் கல்லூரி நாட்களில் நடத்தும் கலை விழா போலத்தான்... பரத நாட்டியம்... படுகா நடனம்... மேற்கத்திய நடனங்கள்... பாடல்கள் அடங்கின ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி; அவ்வளவே...'' என்று ஜக்கியின் சீடர்கள் கூறினாலும் பணக்கார யுவதிகளுக்கும், கனவான்களுக்குமான 'சூப்பர் **Entertainment'** என்பதை நாம் காண முடிந்தது. 'பாப் மியூஸிக் – லைட் மியூஸிக்' போட்டவுடன் அவர்கள் ஆடின ஆட்டம்... பக்கத்தில் இருக்கும் பிள்ளையை மறந்து, அருகில் நிற்கும் கணவனை மறந்து பேராட்டம், பேயாட்டம்... நம்ம ஊர் மாகாளியாத்தா கோயிலில் சாமி வந்து ஆடும் கிராமத்துப் பெண்கள் போல் இங்கே நவ நாகரீகப் பெண்கள்!

ஈசா விழாவின் 'ஹை லைட்', பாலமுரளி கிருஷ்ணாவின் இசைக் கச்சேரி. அவரின் இசை கானத்தில் கரைந்து போனவர்கள் ஏராளம்!

கச்சேரி முடிந்ததும் மேடைக்குக் கீழே சரமாரியாய்க் கூட்டம் முண்டியடித்தது. வரிசையாய் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கும் பெண்கள்... 'ஜக்கிவாசுதேவ் வந்து விட்டாரோ...?' என்றுதான் அனைவரும் அத்திசை நோக்கினர். வந்தது சாட்சாத் பாலமுரளி கிருஷ்ணாவேதான்... விழுந்து நமஸ்கரிப்பவரை ஆசிர்வதித்ததும் அவரே! 'அடேயப்பா... ஜக்கிக்குப் போட்டியா இவரே வந்து விட்டாரோ...?' பக்கத்தில் ஒரு குரல்.

கடைசி வரை கச்சேரிக்கு 'ஜக்கி' வரவேயில்லை. என்ன காரணம்...?

''காலையிலிருந்து இங்கேயே உட்கார்ந்திருந்தார்... பார்க்கலியா சார்...?''

நமக்கேது ஞானக்கண்?

கட்டுரை, படங்கள்:
கேயெஸ்வி

முடியாதென்றபோது, எங்களை சாலை ஓரத்தில் போட்டிருந்த நடைபாதையில் நடக்க வேண்டும் என்றார்கள். அலைமோதுகின்ற கூட்டம். எனவே அதுவும் நடக்கவில்லை!

ஆனால் ஆச்சரியம். கிண்டியிலே எங்களைக் கெடுபிடி செய்த காவல்துறை, சைதாப்பேட்டையில் அத்தனை பேருக்கும் எலுமிச்சம் பழச்சாறு கொடுத்து எங்களை உற்சாகப்படுத்தினார்கள் – சிரித்த முகத்துடன் வரவேற்றார்கள்.

நல்லது வரும்; நிலைமை நாளை மாறும், என்ற சந்தோஷமே எனக்கு ஏற்பட்டது. இப்படிப்பட்ட மாற்றத்தைப் பார்த்தபோது – நன்றி கூறினோம்; நடந்தோம்.

களைப்புத் தீர மதியம் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் தங்கினோம். முதல்நாள்தான் செல்வி ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றிருந்தார். நதிநீர் இணைப்பு பற்றிய மகஜரை எடுத்துக் கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றோம். எங்களைச் சந்தித்தார்; உபசரித்தார்.

"இதற்காகவா இவ்வளவு தூரம் நடந்தீர்கள்? டாக்டர் எம்.ஜி.ஆர் இரண்டாண்டுகளுக்கு முன்பே இதுபற்றி டெல்லியில் மகஜர் கொடுத்திருக்கிறாரே!" என்றார்.

அன்று மாலை ஏழு மணிக்கு மயிலாப்பூர் மாங்கொல்லையில் பெரிய கூட்டத்திற்கு மேடை போட்டிருந்தோம். நானும், நண்பர் குமரி அனந்தனும், மேடையில் அமர்ந்திருந்தோம். எதிரே பெரிய கூட்டம்!

திடீரென்று மழை பொழிய ஆரம்பித்தது. மேடையின் உள்ளே, கட்டியிருந்தத் துணியின் வழியே என் தலையிலும், குமரி அனந்தன் தலையிலும் மழை பொழிந்தது; அபிஷேகம் செய்தது என்றே சொல்ல வேண்டும்!

"மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்'' என்ற சிலப்பதிகார வரிகள்தான் எனக்குள் ஒலித்துக் கொண்டிருந்தன.

(தொடரும்)

நடக்குமென்பார், நடக்கும்!

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

பாதியில நிக்கற காரியங்களெல்லாம் இந்த வாரம் பூர்த்தியாயிடும். மத்தவங்களோட ஆதரவுக்குப் பஞ்சமிருக்காது. வீடு, மனை, நிலம்னு ஆதாயம் கிடைக்கும். குரு பலம் கூடி வர்றதால சிந்தனைத் தெளிவும் தன்னம்பிக்கையும் வரும். இளைஞர்களுக்கு பஜ்ஜி - சொஜ்ஜி சாப்பிடற யோகம் அமோகம். இளைஞிகளாயிருந்தா பலபேரை நமஸ்கரிக்க வேண்டியிருக்கும். பொதுவா பண நடமாட்டத்துக்குப் பஞ்சமிருக்காது. உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன் சான்ஸ் இருக்கு. கொள்கையோட இருக்கற அரசியல்வாதிகளுக்கு வரவேற்பு கூடும்.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

சன் டீவி பாஷைல சொன்னா இந்த வாரம் பெண்கள் வாரம். நகை, நட்டுன்னு நிறைய வாங்கித் தள்ளுவாங்க. நிர்வாகத்துறைல இருக்கறவங்களோட சாமர்த்தியம் வெளிப்படும். அதால புரமோஷன் மாதிரியான சான்ஸுங்க தேடி வரும். அதுக்காக ஆண்களுக்கு ஒண்ணுமே இல்லேன்னு சொல்லிட முடியாது. பண விஷயம் சுமார்தான். கூடவே எதிர்பாராத செலவுகளும் வந்து சேரும்.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்க காட்டுல இந்த வாரம் மழைதான் போங்க. உங்களோட திட்டங்களெல்லாம் சுலபமா நிறைவேறும். மனசுல ஒரு உற்சாகம், துணிச்சல் எல்லாம் தானா வந்து உக்காந்துக்கும். பண விஷயம் தாராளமா இருக்கும். சிலருக்கு வருமானம் அப்படியே டபுள் ஆகும். புது முயற்சிகளில் ஈடுபடற சந்தர்ப்பம் கூடிவரும். இதுவரைக்கும் எத்தனையோ ஜாதகங்கள் ஒத்து வராம இருந்திருந்தாலும் இந்த வாரம் ஏதாவது ஒண்ணு பளிச்சினு பொருந்தி வரும்.

சிம்மராசிக்காரரான சிம்ரனுக்கு கல்யாண யோகம் வந்திருக்குதாம்!

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

சின்னச் சின்னத் தொல்லைகள், காரியத் தடைகள், தாமதங்கள் எல்லாம் தவிர்க்க முடியாத விருந்தாளிகள் உங்களுக்கு. பணப் புழக்கமும் சுமார்தான். புது முயற்சி வேண்டாம். உயிருக்குயிரான பிரண்டா இருந்தாக் கூட ஜாக்கிரதையாப் பேசுங்க. இல்லேன்னா வீண் பிரச்னைங்கள்ல மாட்டிக்க வேண்டியிருக்கும். புது ஆளுன்னா கேட்கவே வேண்டாம். சுருக்கமாச் சொன்னா இந்த வாரம் உங்களுக்குக் குடும்பத்துல அமைதியை நிலைநாட்டறதே பெரும்பாடா இருக்கும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க பேச்சுல ஒரு வசீகரம் கூடும். அப்புற




மென்ன, கவர்ச்சியாப் பேசினா வோட்டு வாங்கியே ஜெயிக்கலாம்கிற நெலைல, மத்தவங்களோட ஒத்துழைப்பைப் பெறுவதா கஷ்டம்! பொருளாதார விஷயத்துல நல்ல முன்னேற்றம் இருக்கும். கல்யாணமாகாதவங்களுக்கும் கல்யாணம், ஆணவங்களுக்குக் குவாகுவா, அதுவும் உள்ளவங்களுக்குக் காது குத்தும் விசேஷமாவது வீட்டுல நடந்தே தீரும்.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

எதுவும் நெனச்சபடி நடக்காது. கடும் உழைப்பும் அலைச்சலும் இருக்குமேயொழிய, தடங்கலைத் தவிர்க்க முடியாது. அப்புறம் உங்க மனசு குழப்பத்துலதான தவிக்கும். இந்தக் குழப்பத்தோட பஸ் ஏறுனீங்கன்னா, பாக்கெட்டை எவனாவது பிளேடு போட்டு ஜோப்படி செய்வான். போதும் போதாதற்குச் சிலருக்குப் பிள்ளைங்களால கூட பிரச்னைகள் வரும்னா பார்த்துக்கங்களேன்! இந்த நிலைல கொடுக்கல், வாங்கலெல்லாம் தேவைதானா?



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

எடுத்த காரியங்கள் எதுவானாலும் அதில் திறமையோட செயல்பட்டு ஜெயிச்சுக்காட்டுவீங்க. இழுத்தடிச்சுக்கிட்டேயிருந்த கடன் பாக்கியெல்லாம் இந்த வாரம் வந்து சேர்ந்திடும். வருவாயும் அதிகரிக்கும். ஸ்பெகுலேஷன், ஷேர் எல்லாமே ஆதாயமா இருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கறதுக்கான சூழ்நிலை உருவாகும். வெளி நாட்டுலேர்ந்து நல்ல சேதி வந்து சேரும். எதிரிகள் இருந்தா சுப்சிப்னு ஆயிடுவாங்க.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க மனசுல தன்னம்பிக்கையும் துணிச்சலும் அமோகமா வரும். சிலர் செயற்கரிய செயல்களைச் செஞ்சு பாராட்டு மழைல நனை வீங்க. வீடு, மனை, நிலம், வாகனம் மூலம் ஆதாயம் கிடைக்கும். அல்லது ஏதாவதொண்ணை வாங்குவீங்க. வெளிநாட்டுத் தொடர்பால உற்சாகமும் லாபமும் கிடைக்கும். புது ஒப்பந்தங்கள் ஏற்பட்டு, அதாலும் லாபம் வரும். பணப் புழக்கத்துல பிரச்னை இருக்கும். திடீர்ப் பண வரவு இருக்கும்னாலும் திடீர்ச் செலவுகளும் வரத்தான் செய்யும்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

ராசிநாதன் குரு உங்களுக்கு அனுகூலமா இல்லாததால எல்லாமே சாதாரணமாத்தாங்க இருக்கும். எதுவும் நீங்க நினைச்சபடி நடக்காது. பண விஷயத்துல சரிவு இருக்கும். கொடுக்கல் - வாங்கல் விஷயத்துல ரொம்ப ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். புது திட்டங்கள் ஏதும் இப்ப வேணாம். உஷாரா செயல்பட்டால் மட்டுமே பிரச்னைகளைச் சமாளிக்க முடியும்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

குருவும் சூரியனும் உங்கள் பிரச்னைகளைக் குறைச்சு நல்ல காரியங்களுக்கு அஸ்திவாரம் போடுவாங்க. குடும்பத்தில் ஏதும் மனக் கசப்புகள் இருந்தாலும் அதெல்லாம் நீங்கி சுமுக நிலை ஏற்படும். பெரியவங்க ஆசியால நல்ல பலன்கள் ஏற்படும். இருந்தாலும் சனி இருக்கானே! அவன் உங்களை ரொம்பவே அலைய விடுவான். அதால உடம்புக்கு ஏதாவது வந்தாலும் வரலாம். தொலை தூரப் பயணம் வேண்டாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்கள் திறமை வீண் போகாத வாரம் இது. மதிப்பும் அந்தஸ்தும் உயரும். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். வெளிநாட்டுலேர்ந்து உற்சாகமான செய்தியும் அதனால ஆதாயமும் கிடைக்கும். பொருளாதாரமும் சீராவே இருக்கும். பெண்கள் துணி மணிகள், நகை என்று வாங்குகிற சான்ஸ் நிறையவே இருக்கிறது. இருந்தாலும் கொடுக்கல் - வாங்கலில் எச்சரிக்கை அவசியம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

கிரக சஞ்சாரமெல்லாம் உங்களுக்கு இந்த வாரம் பளிச்சினு இல்லாம பண்ணுதுங்க. உடல் நலத்துலேர்ந்து, செய்யற தொழில் வரைக்கும் எல்லாத்துலேயும் எச்சரிக்கையா இருக்க வேண்டியது அவசியம். புதுத் தொழில்களுக்கான நேரம் இதுவல்ல. பழைய தொழிலை விஸ்தரிப்பதற்கான முயற்சியும் இப்ப வேண்டாம். காலணா செலவு செய்யறதா இருந்தாலும் யோசிச்சுச் செய்யுங்க. புது ஆளுங்ககிட்ட எச்சரிக்கையா இருங்க.

ஜீரோ டு ஹீரோ!

நடிகர்களிடையே 'இவர் இதற்குத்தான்', 'இந்த கேரக்டரை இவர்தான் சரியாகச் செய்வார்' என்று ஒரு ரேஞ்ச் வைத்திருப்பார்கள். அதன் அடிப்படையில் மிஸ்டர் ஜீரோ துவங்கி மிஸ்டர் ஹீரோ வரை உள்ளவர்களிடம் 'நீங்கள் மறக்கணும்னு நெனைச்சாலும், மறக்க முடியாம உள்ளே உறுத்திக்கிட்டே இருக்கும் நிகழ்ச்சி ஏதாவது உண்டா' என்ற கேள்வியுடன் படையெடுத்தோம்.

மிஸ்டர் ஜீரோ -

கதாநாயகன் மேடையில் பாடும்போது, ஆடிட்டோரியத்தின் கடைசி ரோவில் உட்கார்ந்து தலையாட்டிக் கொண்டிருப்பவர். சாரி! இவர் பேட்டி கிடைக்கவில்லை, ரொம்ப பிசியான ஆசாமி. நீங்கள் இக்கட்டுரையைப் படித்துக் கொண்டிருக்கும்போது கூட, ஏதாவது தெலுங்குப் படப்பிடிப்பில், கோர்ட்டில் வெடிகுண்டு வெடித்த சீனில், செருப்பு பிய்ந்து போகிற மாதிரி தலை தெறிக்க ஓடிக் கொண்டிருப்பார்.

மிஸ்டர் 5 :

பூர்ணம் விஸ்வநாதன் :

இவரைத்தான் சார் உண்மையில் கௌரவ நடிகர் என்று அழைக்க வேண்டும். ஜட்ஜ், வக்கில், டாக்டர், சர்ச் பாதர் போன்ற கேரக்டர்களில் வருவார். நிறைய பேருக்கு ஆதர்ச அப்பா.



"என்னோட சகோதரிகள் வாழ்வுல நடந்த அவலமான நிகழ்ச்சிகள்தான் என்னால் மறக்க முடியாதவை. என்னோட ஒரு சகோதரி பேரு மீனாட்சி பூர்ணம். என்னோட இன்னொரு சகோதரியோட மகள் திருமணத்தப்போ, மொட்டைமாடில நின்னுட்டிருந்த இவங்க, தடுமாறி கீழே விழுந்துட்டாங்க. தலைல அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். நானும் என் மனைவியும் கல்யாண வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும் நடையா நடந்துக்கிட்டிருந்தோம். கல்யாணம் முடிஞ்சிடுச்சு. ஆஸ்பத்திரில அவங்களை கவனிச்சிட்டிருந்த நர்ஸ் மண்டபத்துக்கு நடந்து வர்றாங்க. எனக்குப் புரிஞ்சு போச்சு. ஆமாம்! அந்த சிஸ்டர் உயிரோட இல்லை.

"என்னோட யங்கர் சிஸ்டர் பேரு லக்ஷ்மி பூர்ணம். டெல்லில, ஆல் இந்தியா ரேடியோவுல நல்ல போஸ்ட்ல இருந்தாங்க. அது என்னவோ, கல்யாணம் வேண்டாம்னுட்டு கடைசி வரைக்கும் தனியாவே இருந்துட்டாங்க. அவங்க ரிடையர் ஆனப்புறம் நாங்க எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். மெட்ராஸுக்கு 'வா'ன்னு. அவங்க கேக்கலை. ஒரு தீபாவளி அன்னிக்கி டெல்லிலருந்து ஒரு போன் வந்தது. 'லக்ஷ்மி பூர்ணத்தை யாரோ கொலை பண்ணிட்டாங்க. உடனே வாங்கன்னு'. எனக்கு ஒரே ஷாக்! யாரோ படுபாவி நகைக்கும், பணத்துக்கும் ஆசைப்பட்டு கொலை பண்ணிட்டுப்


• நாசர்

போய்ட்டான். எங்க பார்த்தாலும் ரத்தம்!

"இந்த ரெண்டு சிஸ்டர்ங்கதான் இப்பிடி ஆனாங்கன்னா, மூணாவது சிஸ்டர் கதை வேற. அவங்க பேரு லோகநாயகி. பசங்களோட லீவுக்கு மெட்ராஸ் வந்திருந்தாங்க. எல்லாக் குழந்தையும் நல்ல புத்திசாலிங்க. மெட்ராஸ் சுத்திப் பாத்துட்டு கேரளாவுக்குப் போனாங்க. அங்க ஒரு ஆத்துல இறங்கி குளிச்சிருக்காங்க. அங்கே யானையைக் குளிப்பாட்டுற இடம் ஒண்ணிருக்காம். அது பெரிய பள்ளம். ஆழம் இல்லேன்னு நெனச்சு இறங்கி அதுல குளிச்ச என்னோட சிஸ்டர் பசங் கள்ள ஒரு பையனத் தவிர வேற யாரும் உயிரோட இல்லை! இப்படி இந்த மூணு சகோதரிகளையும் இழந்ததுதான் என்னை ரொம்பவும் பாதிச்சது!



• பூர்ணம் விசுவநாதன்



• முரளி



• ரஞ்சித்



மிஸ்டர் 4 :

எவ்வளவுதான் கட்டுமஸ் தான உடம்பிருந்தாலும், பயங் கரமான தோற்றம் கொண்டிருந் தாலும் கடைசியில் ஹீரோ விடம் அடி வாங்கியே தீரணும் என்கிற கட்டாயத்தில் தள்ளப் பட்டிருப்பவர்கள்.

பொன்னம்பலம் :

"என்னைப் பொறுத்த வரைக்கும் யாராவது நல்லது பண்ணினா ஞாபகம் வைச் சுக்குவேன். கெட்டது பண் ணினா உடனே மறந்துடு வேன். இருந்தாலும், ஒரு ஆக்ஸிடெண்ட்ல எனக்கு ஸ்பைனல் கார்டு உடைஞ் சப்போ, நான் நண்பர்கள்னு யாரை நெனச்சுட்டு இருந் தேனோ, அவங்க எனக்கு எதி ரியா இருந்தா எப்படி சந்தோ ஷப்படுவாங்களோ அந்த மாதிரி நடந்துக்கிட்டது இன்னும் உறுத் தலாவே இருக்கு. அவங்க பேர் சொல்ல விரும்பலை. இதுதான் மறக்க விரும்பினாலும் என்னை அடிக்கடி 'டிஸ்டர்ப்' பண் ணிட்டே இருக்கற விஷயம்!"

மிஸ்டர் 3 :

கதாநாயகன், கதா நாயகிகளுக்கு பெரும் பாலும் தந்தையாக வருபவர்.

• டெல்லி கணேஷ்

டெல்லி கணேஷ் :

"மறக்க விரும்பற நிகழ்ச்சி எதுவும் என் லைப்ல இல்லை. மறக்க முடியாத நிகழ்ச்சிகள், பசு மையான நிகழ்ச்சிகள் ஏராளமா இருக்கு! அதுல ஒண்ணை மட்டும் சொல் றேன். 1971-ல நான் ஏர் ஃபோர்ஸ்ல வேலை பண் ணிட்டிருந்தேன். அப்போ போர் நடந்துகிட்டிருந்தது. காஷ்மீர் போற வழில ஊதம்பூர்னு ஒரு இடம். பதினாலு நாள் எந்த வித மான தகவல் தொடர்பும் இல்லாம அங்க இருந்தது மறக்க முடியாத அனுபவம். நாங்க இருந்த இடத்துலயே பக்கத்துல அடிக்கடி குண்டு விழும். போர் முடிஞ்சு டெல்லிக்கு ரயில்ல வர் றப்போ, ஒவ்வொரு ஸ்டே ஷன்லயும் நார்த் இண்டி யன்ஸ் எங்களுக்குக் கொடுத்த வரவேற்பு நினை வுல இன்னும் பசுமையா இருக்கு! எந்தப் பாகுபாடும்

பாக்காம, வயசு வித்தியாசம் இல்லாம அவங்க டீயும், முட்டையும், பிரெட்டும் எடுத்தெடுத்துக் குடுத்து உபசரிச்சது மறக்க முடியாத நல்ல அனுபவம்."

மிஸ்டர் 2 :

இவர் துணை நாயகன். எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் என்று கூடச் சொல்லலாம்.

ரஞ்சித் :

"நான் கோயம்புத்தூர்ல நல்லா வசதியா வாழ்ந்தவன். மெட்ராஸ் வந்ததுக்கப்புறம் நண்பர்களோட சேர்ந்து பிஸினஸ் பண்ணினேன். 'பொன் விலங்கு', 'சிந்து நதிப்பூ' படத்துக்கப்புறம் நாலு வருஷம் பிரேக் விழுந்த பீரியட் அது. என்னோட மூணு நண்பர்கள் வொர்க்கிங் பார்ட்னர் ஸாவும், நான் பணம் போடற ஆளாவும் சேர்ந்து லெதர் & டிராவல் பிஸினஸ் பண்ணினோம். அப்போ என் கையில 20 லட்ச ரூபாய் இருந்துச்சு. என்கிட்ட இருக்கற ஒரு குணம், யார் சொல்றதையும் நம்பிடுவேன். எல்லாரையும் நம்புவேன். ரொம்ப சென்ஸிடிவான ஆளு. பிஸினஸ் துவங்கி ஆறு மாசத்துல செம அடி! பேங்க் பேலன்ஸ் நூறு ரூபா கூட இல்லை. ஏழு லட்ச ரூபா கடன். அதுவும் தனி வட்டின்னா சொல்லணுமா? என்னோட கார், அம்மாவோட நகை எல்லாத்தையும் விக்கற நிலைமை. என்னோட நண்பர்கள் (அவங்கதான் வொர்க்கிங் பார்ட்னர்ஸாச்சே!) அவங்க பாட்டுக்குப் பிரிஞ்சு போய், தனியா வேற பிஸினஸ் ஆரம்பிச்சுட்டாங்க. அதுல கூட என்னை பார்ட்னரா சேரச் சொல்லி கூப்பிட்டாங்க. நான்தான் தப்பிச்சுட்டேன். அப்போ யாரும் நண்பர்கள் இல்லை. ஏமாத்தறதுக்கோ, ஏமாறுவதற்கோ, எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு இல்லையா?"

மிஸ்டர் 1 :

(அதான் சார் வில்லன்.)

நாசர் :

"நல்லது கெட்டது ரெண்டும் சேர்ந்தது தான் வாழ்க்கை. என்னோட வாழ்க்கைல நடந்த நல்லது கெட்டது எதையுமே நான் மறக்க விரும்பலை."

மிஸ்டர் ஹீரோ :

பேரைச் சொன்னதுமே 'ஹீரோ' என்று சொல்லிவிடலாம்.

முரளி :

"என்னோட வாழ்க்கைல மறக்க முடியாத நிகழ்ச்சி எவ்வளவு இருக்கோ, அதே மாதிரி மறக்க விரும்பற நிகழ்ச்சியும் நிறையா இருக்கு. கசப்பான விஷயம் இருக்குன்னா, தெவிட்டற மாதிரி இனிப்பான விஷயமும் இருக்கத்தானே செய்யும்? அதனால எதையும் குறிப்பா சொல்ல விரும்பலை." ○

பேட்டி : **பாலு**

அஞ்சலி



கவிஞர் நா.சீ. வரதராஜன், (பீஷ்மன் என்ற பெயரில் கதைகளும் எழுதியவர்), மிகப் பெரிய படிப்பாளி; அறிஞர். லா.ச. ராமாமிர்தம், கரிச்சான் குஞ்சு, தி. ஜானகிராமன் செட். பிரமாதமான ரசிகர்.

நா.சீ.வ வாயால் ஒரு வார்த்தை பாராட்டுப் பெறுவது என்பது எத்தனை பெரிய விஷயம் என்று இன்றைய முன்னணி எழுத்தாளர்களைக் கேட்டால் சிலிர்த்துப் போய்ப் பேசுவார்கள்!

விகடனில் தாம் எழுதும் 'பாண்டவர் பூமி' தொடரின் ஒவ்வொரு அத்தியாயம் வெளியானதும், நா.சீ. வரதராஜனிடமிருந்து வரும் போனுக்காக ஆவலுடன் காத்திருப்பாராம் கவிஞர் வாலி. நா.சீ.வவின் விமர்சனங்கள் எத்தனை மதிப்பு மிக்கவை என்பதற்கு இது ஓர் உதாரணம்.

சிறந்த மரபுக் கவிஞரான நா.சீ.வ., கவிதை வடிவில் அழகான சிறுகதைகளைத் தொடர்ந்து எழுதி, கதைப் பாடல் இலக்கியத்துக்குப் பெரும்பங்காற்றும் 'ப்ராஜக்ட்' ஒன்று தொடங்கி செயலாற்றி வந்தார்.

'இதுவரை தாம் எழுதிய கதைப் பாடல்களிலேயே மிகச் சிறப்பானதாக அமைந்து விட்டது' என்று குறிப்பிட்டு, கல்கிக்கு ஒரு படைப்பை அனுப்பினார், கடந்த வாரம். நெஞ்சு கனக்கச் செய்யும் விதமாக நா.சீ. வரதராஜன் அமரராகிவிட்ட செய்தி, இந்த இதழ் அச்சேறும் நேரத்தில் வந்தது.

கவிஞரின் கடைசிக் கவிதையை இந்த இதழில் (பக். 92, 93) வெளியிட்டிருக்கிறோம். தலைப்பு – **பிரிவு!**

RPG

HMV

LEGENDS

M.S. SUBBULAKSHMI

The Supreme



The finest collection in a set of 5 Musicassettes & CDs

டீ.வியில் பழைய படங்களைப் பார்க்கிறபோது வேண்டுமானால் போரடிக்கலாம். ஆனால் இங்கே தரப்பட்டுள்ள பழந்தமிழ் திரையுலகச் செய்திகளின் சுவாரசியத்துக்கு கியாரண்டி!

● ஒரு வீடு - இரு வாசல் படத்தில் முன்பாதி, பின்பாதிகளில் இரண்டு கதை சொன்னது எல்லோரும் அறிந்ததுதான். ஆனால், '39-ல் என்.எஸ். கிருஷ்ணன் நடித்து 'சிரிக்காதே' என்று ஒரு படம் வந்தது. அது ஃபைவ்-இன்-ஒன் சினிமா. ஆம்! யம வாதனை, அடங்காப்பிடாரி, புலிவேட்டை, போலிச் சாமியார், மலைக்கண்ணன் என்று ஐந்து வெவ்வேறு கதைகள் இடம் பெற்றிருந்தன.

● இப்போது 'இளைய ராஜாவின் இசை மழையில்' என்கிற ரீதியில் விளம்பரம் வருகின்றன அல்லவா? 37-ல் வெளிவந்த 'பாலாமணி' என்ற படத்தின் விளம்பரத்தில் இடம் பெற்ற வாசகம் என்ன தெரியுமா?

"பாலாமணிக்குப் பாடல் எழுதியிருப்பவர் ஸ்ரீபாரதிதாசன். படம் நன்றாக இருக்க, இதைவிட வேறு ஒரு காரணமும் வேண்டுமோ?"

● அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தை, ஏவி.எம். நிறுவனம் சினிமாவாக எடுத்தது. அண்ணாவுக்குக் கதை, வசனம் எழுதத் தரப்பட்ட சன்மானம் நாற்பதாயிரம் ரூபாய். அந்தக் காலத்தில் அதுதான் மிக அதிகபட்ச சன்மானம்.

● 1935ல் வெளியான 'சதிலீலாவதி' படம், ஜெமினி எஸ்.எஸ். வாசனின் தயாரிப்பு. அது எம்.ஜி.ஆருக்கு மட்டுமில்லை; என்.எஸ். கிருஷ்ணனுக்கும் கூட முதல் படம் தான். எம்.ஜி.ஆரின் நூறாவது படம் ஒளி விளக்கு. தயாரிப்பாளர் அதே வாசன்!

● முரசொலி மாறன் இன்று முழுநேர அரசியல்வாதி என்றாலும், நாற்பது படங்களுக்குக் கதை வசனகர்த்தா. இரண்டு படங்களுக்கு இயக்குனர்!

● 39-ம் ஆண்டு மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த படமான 'சந்தனத் தேவ'னில் நடித்தார் எம்.ஆர். ராதா. அடுத்த வருடம் அவர் ஹீரோவாக நடித்த 'சத்தியவாணி' என்ற படம் ரிலீஸ். அதன் பின் சினிமாவை விட்டு ஒதுங்கி, நாடகங்கள் போடப் போய்விட்டார் எம். ஆர். ராதா. பதினாறு வருடங்கள் கழித்து,



• பாகவதர்

• அண்ணாதுரை



• கலைஞர்



• சந்திரபாபு



இருட்டடிப்பு செய்யப்பட்ட கலைஞர்!

மறுபடி சினிமாவுக்குத் திரும்பி, அவர் கொடுத்த சூப்பர் ஹிட் படம் : ரத்தக் கண்ணீர்!

● முதன் முதலில் இரட்டை வேடம் ஏற்று நடித்த பெருமைக்குரியவர் பி.யூ. சின்னப்பா. படம் : உத்தமபுத்திரன். பின்னர், இதே படத்தை வீனஸ் பிக்சர்ஸ் தயாரித்தது. அதில் சிவாஜிக்கு இரட்டை வேடம்!

● அபூர்வ சகோதரர்கள் என்ற பெயரில் எம்.கே. ராதா நடித்து ஒரு படம் வெளியானது. அதில் அவருக்கு இரட்டை வேடம். அதே கதை எம்.ஜி.ஆர். இரட்டை வேடத்தில் நடிக்க, பின் நாளில் எடுக்கப்பட்டது. பெயர் : நீரும், நெருப்பும்.

● எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த படமான சிவகவி, அப்படி ஒரு அபார வெற்றி பெற்றது. வசனம் இளங்கோவன். பாடல்கள் பாபநாசம் சிவன். இந்த சூப்பர் டூப்பர் வெற்றிக்குப் பிறகு, எம்.கே.டி. தன்னை யார் நடிக்க ஒப்பந்தம் செய்ய வந்தாலும், முதலில் வசனத்துக்கு இளங்கோவனையும், பாட்டெழுத பாபநாசம் சிவனையும் ஒப்பந்தம் செய்துவிட்டு வாருங்கள்" என்றே கண்டிஷன் போடுவாராம். சிவகவியில் மொத்தம் 29 பாட்டுகள். இதில் பாகவதர் பாடியவை பத்தொன்பது.

● தூத்துக்குடியிலிருந்து, சினிமா சான்ஸ் தேடி சென்னை வந்தார் ஓர் இளைஞர். அவரது முயற்சிகள் யாவும் தோல்வியடையவே, விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றார். ஆனால் சாகாமல் தப்பித்துவிட, அவர் மீது தற்கொலை முயற்சி கேஸ் போடப்பட்டது. கோர்ட்டில், சினிமா சான்ஸ் கிடைக்காத விரக்தியில் வாழ்க்கையை வெறுத்து, தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக அந்த இளைஞர் கூறியதாலும், அது அவரது முதல் முயற்சி என்பதாலும், விடுதலை செய்து விட்டார்கள். '47-ல், பிரபல எழுத்தாளர் பி.எஸ். ராமையா இயக்கிய 'தன அமராவதி' படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்து, பின்னர் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த அந்த தூத்துக்குடி இளைஞர் சந்திரபாபு!



• எம்.ஆர். ராதா



• எம்.ஜி.ஆர்.



• மாறன்



"அவரு தி.மு.க. அனுதாபியா இருக்கலாம். அதுக்காக சீட்டு விளையாடும் போது, சீட்டைக் கலைக்கக் கூடாதுன்னு சொல்றது கொஞ்சங்கூட நல்லாயில்லை!"

- பாம்பன் செ. சல்மான்

● பிரபல பாடகர் சி.எஸ். ஜெயராமனின் தங்கை பத்மாவதியின் கணவருக்கு, திரையுலகில் நுழைய பெரும் ஆர்வம். ஜெயராமனும், தனது செல்வாக்கால், தனது மைத்துனருக்கு, அபிமன்யு என்ற படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பை வாங்கிக் கொடுத்தார். அவரும் நன்றாகவே வசனம் எழுதினார். ஆனால், டைட்டிலில் அவருடைய பெயர் இடம் பெறாமல் இருட்டடிப்பு செய்து விட்டார்கள்! அதன் பின், ராஜகுமாரி படத்துக்கு வசனம் எழுதிய போது, டைட்டிலில் பெயர் போட்டார்கள். அதன்பின் வெகு பிரபலமாகி விட்ட அவர் கலைஞர் கருணாநிதி!

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

பொன் விளையும் பூமி

சென்னைக்கு அருகில்



- அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள்
- நம்பிக்கையான நிறுவனம்
- பாதுகாப்பான முதலீடு
- குறுகிய காலத்தில் அதிக பலன்
- சுவையான குடிநீர் / சுற்றிலும் வீடுகள்
- சுத்தமான பத்திரம்

மனையைப் பார்வையிட
இலவச வாகன வசதி. தினந்தோறும்
காலை 6, 11 மணி மற்றும்
மாலை 3 மணி.

யமுனை நகர்

ஊரப்பாக்கம் (341/98)

(வண்டலூர் மிருகக்காட்சி சாலை அருகில்)


டிஎல்வி எஸ்டேட்ஸ்

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,
(புரசைவாக்கம் நெடுஞ்சாலைக்கு எதிரில்)
புரசைவாக்கம், சென்னை - 600 007.
போன் : 5325311/12/13. ஃபேக்ஸ் : 91-44-5325363.

17233 DPS

20 வருடங்களுக்கு மேலாக நன்மதிப்பை கட்டிக் காப்பவர்கள்.

10 x 12.5 cm



Dr. மகாதன் சேகர் ராஜா PH.D

"NEEVIRTTI"

குடியிருக்கும் இடத்தில் மனப்பிரச்னையா?
தொழில் புரியும் இடத்தில் பணப் பிரச்னையா?
பணம் இருந்தும் மனப் பிரச்னையா? கவலையை விடுங்கள்!

விஞ்ஞான ரீதியில் **Metal With Gems**'ஐ பயன்படுத்தி **"Nee virtti"** செய்வதால் தங்களின் சோதனைகளை போக்கி சாதனையாக்க முடியும்.

விஞ்ஞான உலகில் மூன்று பிரம்மாக்களுக்குத்தான் ஆக்கவும், பிறகு அழிக்கவும் சக்தி உண்டு.

1. கிரகங்கள், 2. சக்தி படைத்த மனிதன்,
3. Precious Metal With Gems

இந்த மூன்று பிரம்மாக்களுக்கும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு.

உலகில் 15% சதவீத மக்கள் தான் **"Nee Virtti"** யோடு இருக்கிறார்கள். மீதம் 85% சதவீத மக்கள் போராட்ட வாழ்க்கைத்தான் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் 1% சதவீதமாவது என்னால் **"Nee virtti"**யோடு வாழ்வதற்கு, ஞானத்தோடு செய்துக் கொண்டு இருக்கிறேன்.

நம்மிடம் இல்லாத சக்தியை அபரிதசக்திக் கொண்ட **"Metal with Gems'**ஐ பயன்படுத்தி தேவைக்கு ஏற்ப அதன் பவரை கூட்டவும், கழிக்கவும் முடியும் யென்பதால் **'Neevirtti'**யால் சரி செய்து விடுவதால் **Wilpower** படைத்தவராக மாறக்கூடிய வாய்ப்பு உண்டு என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரிய சாதனையை கடந்த 4 வருடங்களாக செய்து கொண்டு வருகிறேன். இதன் மூலம் பல தொழில் அதிபர்கள், வியாபாரிகள், அதிகாரிகள் பயன் அடைந்துள்ளார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன், ஒவ்வொரு 6 வருடங்களுக்கு கிரகங்கள் மாறும்பொழுது நமது தொழில் ரீதியாகவும், மனரீதியாகவும் **BRAKE** வரும். அந்த **BRAKE** வராமல் தொடர்ந்து நமக்கு நன்மை கிடைப்பதற்கு **"NEEVIRTI"** செய்தால் நிவர்த்தி அடையலாம்.

கவனிக்க: தாங்கள் தபால் மூலமாக **(Date of Birth (Family) Marriage Date)** அல்லது நேரிலோ விஜயம் செய்தால் பயன் நிச்சயம் கிட்டும்.

'நவரத்தின திலகம்' Dr. மகாதன் சேகர் ராஜா Ph.D (Sacred Philosopher)

Vaastu - Numerologist - Gemologist 57/1, Hunters Road, Vepery, Chennai - 112.
போன் 6425967 - 6415235 Res: 4812397 செல்போன்: 9840094599 - 9840020599

தலைவர் படத்துக்கு... நான்... கதையா! சொக்கா!!



"நகரத்திலிருந்து கிராமத்துக்குச் செல்லும் ஓர் இளைஞனின் கதை" என்பது தான் ரஜினியின் அடுத்தப் படமான படையப்பாவின் ஒன் லைன். இந்த ஒற்றை வரியை சாலையில் போய்க் கொண்டிருந்த சில பொது மக்களிடம் சொல்லி 'இதை வைத்துக் கொண்டு நீங்கள் ஒரு கதை பண்ணுங்கள் பார்க்கலாம்' என்றோம் அதிரடியாக.

"தலைவர் படத்துக்கு... நான்... கதையா! சொக்கா...!" என்று புல்லரித்துப் போன (டிராவல்ஸ் டிரைவராக இருக்கும்) ரஜினி ரசிகர் குமார் உற்சாகமாக ஆரம்பித்தார்.

"அம்மா எனக்கு ஆசிர்வாதம் பண்ணி அனுப்புங்க. கிராமத்துல இருக்கிற மாமாவைச் சந்தித்துப் பழைய பகையை மறக்கச் சொல்லி, நமக்குக் கிடைக்க வேண்டிய சொத்தையும் கேட்கிறேன்"னு கிளம்பறார் தலைவர்.

"வேண்டாம்... அவங்க தொடர்பு வேண்டாம்; சொத்தும் வேண்டாம்"னு அம்மா (ஸை, பண்டரிபாய்) தடுக்க,

"இல்லேம்மா... நான் போய் வர்றேன்"னு அடம் பிடிச்சிக் கிளம்பறாரு.

கிராமத்துல கால் வெச்சதும் "மகராஜன் வந்துட்டான்பா" என்று கோரஸாகக் குரல் கேட்கிறது. பஸ்ஸிலிருந்து இறங்கிய ரஜினி சுற்றும் முற்றும் பார்க்கிறார். மகராஜன் டிரான்ஸ்போர்ட் பஸ் சீறிக் கிளம்பிச் செல்கிறது.

இப்படி என்ட்ரி ஆறார் தலைவரு.

மாமாவின் சூழ்ச்சிகளையெல்லாம் முறியடிச்சி, கடைசியில் சொத்தையும் மீட்டு மாமா பெண் சவுந்தர்யாவையும் ரவுண்டு கட்டறதுதான் ஸார் கதை. முக்கியமா ஆங்காங்கே எய்ட்ஸ் எதிர்ப்புப் பிரசாரமும்

• படம்: பிரகாஷ்

• குமார்




இருக்கும். இன்று இளைஞர்களை பயமுறுத்தும் விவகாரம் எய்ட்ஸும், போதை மருந்தும்தான். தலைவர் மூலமா சொன்னா லட்சக்கணக் கானவங்க திருந்துவாங்களே?"

கேபிள் டீவி ஆபரேடர் பிரபாகர் அடுத்து சிக்கினார்.

"படையப்பா" என்று ரஜினி வரும் கேரக்டர் முக்கியமா, படிங் கப்பா என்றுதான் சொல்லும். பள்ளி வாத்தியார் படையப்பா 'இந்தியாவின் ஆன்மா கிராமங்களில்தான் இருக்கிறது'ன்னு மாணவ, மாணவிகளுக்கு போதிப்பவர். நகர மக்களின் சுய நலமும் பேராசையும் காலப் போக்கில் காற்றும் மாசு பட்டுப் போகாத கிராம மக்களின் மனத்தைப் பாதித்து அங்குள்ள சூழலைக் கெடுப்பதைக் கண்டு வெம்புகிறார், படையப்பா. 'நம்மால் முடிந்தது ஒரு கிராமத்தை யாவது திருத்துவோம்' என்று பள்ளிகளே இல்லாத குக்கிராமத்துக்குச் செல்கிறார். 'கல்வி'யைக் கொடுத்தால் எதிர்கால சமுதாயம் நன்றாக உருவாகும் என்று பள்ளி ஒன்று தொடங்க முயற்சிக்கிறார்.

அந்த கிராம மக்களின் ரத்தத்தை உறிஞ்சி அடிமையாக நடத்தி வரும் பண்ணையார் நாசர் 'கிராம மக்களுக்குக் கிடைக்க இருக்கும் விழிப்புணர்வு தமக்கு ஆபத்தாகப் போய் விடுமே' என்று பல முட்டுக் கட்டைகள் போடுகிறார். அதையெல்லாம் தடகள வீரர் போல் தாண்டிச் செல்லும் தலைவரின் கதைதான் படையப்பா.

ஜாதிகளைத் தூண்டிவிட்டுக் குளிர்காயும் போலி அரசியல்வாதி களுக்கு சாட்டையடி வசனங்கள் படத்துல இருக்கும். தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவரான சவுந்தர்யாவை தலைவர் காதலிக்க, பட்டணத்துப் பெண் ரம்யா கிருஷ்ணன் ஏற்கெனவே தலைவரை மயக்கப் பார்க்க, கிளைமாக்ஸ் சஸ்பென்ஸ்! அருணாசலத்தில் வருவது போல் 'நகுமோ' பாட்டெல்லாம் இருக்காது. நம்மாளுங்களுக்கு கர்நாடக சங்கீதம் அவ்வளவா ஒத்துக்கல பாருங்க!"



• பிரபாகர்

பீட்டர்ஸ் சாலை சிக்னலில் பச்சைக்காக நின்று கொண்டிருந்த சுந்தர்ராஜனை ஸ்கூட்டருடன் ஓரங் கட்டினோம். விஷயத்தைச் சொல் லிக் கதை கேட்டோம்.

"தக்காளி ஒரு அழுகும் பொருள். ஏகப்பட்ட உற்பத்தி ஆகும்போது விவசாயிகள் வயிற்றெரிச்சலுடன் சந்தையில் கிலோ எட்டணாவுக்கும் ஒரு ரூபாய்க்கும் போட்டு விட்டுச் செல்வார்கள். ஆனால் பட்டணத்து சந்தைகளில் விலை இறங்காது. விவசாயிக்கும் லாபம் கிடையாது. நுகர் வோருக்கும் பயன் கிடையாது. இடைத் தரகர்கள் கொழிக்கிறார்கள். இந்த நிலையை மாற்றும் கேரக்டரில் தலைவர் வருவார். அதிக விளைச் சல் வரும்போது அவற்றைக் குளிர்சாதன கிட்டங்கிகளில் வைக்க வசதி செய்வது, வங்கிக் கடன்களை எந்தவித லஞ்சமும் இல்லாமல் பெற வழி செய்வது என்று எல்லா ஆக்ஷன்களும், விவசாயிகளின் வாழ்க் கையை உயர்த்தும் வகையில்தான் இருக்கும்!



• சுந்தர்ராஜன்

கிராமத்துச் சந்தைப் பொருளாதாரம், விவசாயி களின் கைக்கு வரும். இடைத்தரகர்கள் அவ்வளவு சுலபத்தில் விட்டு விடுவார்களா? மோதல்தான். பள்ளி ஆசிரியை சவுந்தர்யாவின் காதலும் உண்டு. இடையில் முறைப் பெண் ரம்யா கிருஷ்ணன் தலைவரோடு இணைந்து போராடி, வில்லன்களின் சூழ்ச்சிக்கு பலியாகி, சவுந்தர் யாவுக்கு ரூட் க்ளியர் செய்வார். வழக்கமான தலைவர் படத்தில் வரும் ஆட்டம், பாட் டம், கொண்டாட்டம் எல்லாம் உண்டு"



• பிந்து



• ரூபா

என்றார் சுந்தர்ராஜன்.

"தமிழ்க்கடவுள் முருகனின் அருமை பெருமைகளை சொல் லும் கேரக்டராக 'படையப்பா' இருப்பதுதான் பொருத்தம். காவடி தூக்குவது, அலகு குத்துவது போன்ற பல காட்சிகளைச் சேர்க்க முடியும். ரஜினி படத்துக்கு எப்போதும் ஒரே ஸ்டாண்டர்ட் கதை தான். அம்மா அப்பாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படும். காதல் கிளுகிளுப்பு என்று எல்லா மசா லாவும் உண்டு. கிராமத்துச் சாவடியில் பீடியும் கையுமாக உட் கார்ந்து சதா அரட்டையடித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களைத் தம் பேச்சால் கவர்கிறார் ரஜினி. அவர்களை ஒன்று சேர்க்கிறார். தமது சுயநலத் தேவைகளுக்கு இளைஞர்களைப் பயன்படுத்தும் லோக்கல் அரசியல்வாதி, ரஜினிக்குப் பகையாளி ஆகி விட, அடுக் கடுக்காய் சம்பவங்கள் தொடர்கின்றன. இறுதிக்காட்சியில் அப்பா சிவாஜியைக் கடத்திக் கொண்டு சிறை வைத்து விடுகிறார் வில்லன் நாசர். ஆனால் இறக்கும் தருவாயில்தான் அவரை மீட்க முடிகிறது. "நான் முயன்று பார்த்தேன்... முடியவில்லை.. நீதான்டா இந்த மக் களுக்கு ஒரு வழி காமிக்கணும்" என்று சொல்லி இறக்கிறார் சிவாஜி.

"அந்தக் கிராமத்தில் ஒரு பொறியாகக் கிளம்பும் நெருப்பு, நாடெங்கும் பரவி அநீதிகளை அழிக்கிறது. அக்கிரமங்களைத் தட் டிக் கேட்கிறது. 'எனக்கு எந்தப் பொறுப்பும் வேண்டாம்' என்று இறுதியில் பெருந்தன்மையாகச் சொல்லும் படையப்பா, ஒரு பெரிய படைக்குச் சொந்தக்காரர் என்பது மட்டும் நிரூபிக்கப்படுகிறது. எப்படி என் கதை?" என்று ஸ்டைலாகக் கேட்டார், நாம் அடுத்துச் சந்தித்த பிந்து.

மேற்கு மாம்பலம் ரூபா சொன்ன கதை இது: நகரத்தில் ஒரு பெரிய போலீஸ் அதிகாரி யாக இருக்கிறார் ரஜினி. ஒருநாள் எதேச்சையாக பரணில் இருக்கும் பழைய பெட்டியைப் பார்த்து அதை எடுத்து உள்ளே ஆராய்கிறார். பழைய புகைப்படம் ஒன்று மாட்டுகிறது. பார்த்த வுடன் ஆச்சர்யப்பட்டுப் போகிறார். தாம் சிறு வயதில் இருந்த அதே தோற்றம்! எதேச்சையாக அங்கே வரும் அப்பா சிவாஜி திடுக்கிடுகிறார்.

"அதையெல்லாம் ஏன்டா எடுத்தே என்று கடிந்து கொள்கிறார். "அது யாரப்பா?" என்று ரஜினி வற்புறுத்த, பிளாஷ்பேக்கில் கதை சொல் லப் படுகிறது.

கிராமத்தில் இரண்டு ஆண் குழந்தைகளுடன், மனைவியுடன் மகிழ்ச்சியாக இருக்கும் சிவாஜி. தம்பி நாசர் அண்ணனை ஏமாற்றி சொத்துக் களைப் பறித்துக் கொண்டது மட்டுமல்லாமல், வீட்டையே எரித்து விடுகிறார். ஒரு பையனை மட்டும் சிவாஜி மீட்டுக் கொண்டு நகரத்துக்கு வருகிறார்... மனைவியும் மற்றொரு குழந்தையும் இறந்து விட்டதாக சிவாஜி நினைக்கிறார். ஆனால் மற்றொரு குழந்தை தெய்வாதீனமாகத் தப்பித்து அதே கிராமத்தில் வளர்கிறது - சித் தப்பாவிடமே. புரிந்ததா? இரட்டை வேஷம் தலைவருக்கு! இரண்டு கதாநாயகிகளுக்கு அப் போதான் சரியா வரும்!

சகோதரனைத் தேடி கிராமத்துக்கு வரும் ரஜினி. சகோதரர்களையே மோத வைக்கும் சகுனி நாசர். இறுதிக் காட்சியில் சகோ தரர்களை இணைத்து வைத்து விடை பெறு கிறார் சிவாஜி. எப்படி நம்ப கதை? பத்து தமிழ்ப் படங்களை போட்டு அவி யல் செய்த மாதிரி இருக்கா..? அப்புறம், அர சியல்வாதிகளைச் சாடு வது, இளைஞர்களுக்கு அட்வைஸ் எல்லாம் உண்டு. நம்பளை வுட்டுப் பாருங்க... ரவிக்குமாரே அசந்துடுவார்."

— ப்ரியன்

படங்கள்: ஸ்ரீஹரி
அட்டை வண்ணப்படம்: 'தேர்ட் ஐ' பிரகாஷ்



"பைனான்ஸ் கம்பெனி கதவுல ஏழெட்டுப் பூட்டு தொங்குதே...ஏன்?"
"ராவோடு ராவா காலி பண்ணிட்டு போயிறக் கூடாதுன்னு பொதுமக்களும் தினசரி வந்து பூட்டுறாங்க!"
— அம்பை தேவா

2

ஜெயந்தி புரண்டு நிமிர்ந்து கவிழ்ந்து ஒருக்களித்து என்று பலவகையாகப் படுத்துப் பார்த்தாள். எதுவும் தூக்கம் தரவில்லை. மணி நான்கு இருக்கும். ஜன்னல் வழியாய் ஊர்ந்து வந்த குளிர்ச்சி இதமாய் இருந்தது. பக்கத்தில் அக்கா மீரா படுத்திருந்தாள். நல்ல தூக்கம். கொஞ்ச நாள் இந்த இடம் காலியாக இருந்தது. நிரந்தரமாகவே இந்தக் கட்டில் அவளுடைய தாகி விடும் என்றுதான் நம்பினாள். ஆனால் மீண்டும் மீரா!

தூக்கமற்றுப் போனது ஜெயந்திக்குத் தான். தனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்க வேண்டும்? பத்து நாட்களுக்கு முன் வரை எப்படிச் சொல்வது என்ற தயக்கம். சொன்ன பின், ஏற்காததின் வலி. அப்புறம் காரணம் தேடி வலி.

உண்மையில் சுந்தருக்கு என்ன பிரச்னை? தானே போய் நேரடியாகத் தன் விருப்பத்தைத் தெரிவித்தது தவறோ?

"ஜென்ட்ஸ்தான் சொல்லணும். நாம போனாபோறதுங்கற மாதிரி அக்செப்ட் பண்ணிக்கணும். நீயா போய் சொன்னன்னு வெச்சிக்கோயேன், உன்னை சீப்பா நெனைச்சுடுவாங்க. அப்புறம் லார்டு மாதிரி பிஹேவ் பண்ணுவாங்க. அதுக்குத்தான் அவனுங்கள தொங்கவுடணும்."

காலேஜ் காலத்தில் காயத்ரி சொன்னது இது. உண்மை இருக்குமோ? தெரியவில்லை. ஆனால் வாய் திறந்து, மனசைக் கொட்டியாயிற்று. இனி பொறுப்பு அவன் தலையில் என்று இருக்க முடியவில்லையே?

"உன்கிட்ட பேசக் கூடாதுன்னு இல்ல ஜெயந்தி. டீன்-ஏஜ் மேனியானெல்லாம் கிண்டல் அடிச்சுட்டேன். சாரி. நான் நினைக்கறது வேற."

"என்னது அது?"

"எப்படி சொல்றதுன்னு தெரியல. நமக்குள்ள பொருந்தி வரும்னு நெனைக்கறியா?"

"நான் கண்டிப்பா பொருத்தமா நடந்துப்பேன்."

"அதுதான் பிரச்னை ஜெயந்தி."

"என்ன பிரச்னை?"

"கலாசாரம்தான் பிரச்னை."

"கலாசாரம்னா?"

"உன் வாழ்க்கை முறை. என் வாழ்க்கை முறை... இதெல்லாம் பொருந்தக்கூடியதா..."

"நான்தான் பொருத்தமா நடந்துக்கறேன்னு சொல்றேனே."

சுந்தர் நீண்டதாய் ஒரு மூச்சை இழுத்து வெளியே விடுவது போனில் கேட்டது. ஜெயந்திக்கு இப்படியே, இப்பவே அவனைக் கன்வின்ஸ் பண்ணிவிட வேண்டும் என்ற எண்ணமில்லை. சொல்லப் போனால், அவன் அவள் காதலை நிராகரித்த அன்றே பொறுமை என்ற மிகப் பெரும் ஆயுதத்தை கைமேற் கொள்ளுவது என்று முடிவு செய்து விட்டாள்.

"இல்ல ஜெயந்தி. நீ உணர்ச்சி வசப்பட்டு பேசறன்னு நெனைக்கறேன். யோசிச்சுப் பாரு. இன்னும் டயம் எடுத்துக்கோ. என்கிட்ட எனக்கே புரியாத பல அம்சங்கள் இருக்கு. இதையும் மீறி, எதையும் சகிச்சுகிட்டு உன்னால குடித்தனம் பண்ண முடியுமா? பண்ணணுமான்னு யோசியேன்."

அவள் சிரித்தாள்.

"எதுக்குச் சிரிக்கற?"

"ஒண்ணுமில்ல. எனக்கு இருபத்து நாலு வயசாறது. நீங்க சொன்ன டீன்-ஏஜ் மயக்கம் போய், திருமணம்ங்கறதுனுடைய தேவையைப் புரிஞ்சுகிட்டு, பேசறேன்னு நெனைக்கிறேன். இப்ப நான் அவசரப்படலை. உணர்ச்சி வசப் படலை. இது மனிதத் தேவை. அன்புங்கறதும், ஆனந்தம்ங்கறதும் என்னன்னு யோசிச்சு, அதைப் புரிஞ்சுகிட் டிருக்கேன்னு நெனைக்கறேன். சரி! அத விடுங்க. வேறொரு விஷயத்துக்காகத்தான் நான் உங்க போனை டிரை பண்ணிண்டே இருந்தேன்."

"என்ன விஷயம்?"

"அக்கா பிரச்னை பெரிசாயிகிட்டே இருக்கு. அப்பா உங்ககிட்ட பேசணும்னு சொன்னார். உங்களுக்கு யாராவது போலீஸ்காரர் தெரியுமான்னு கேட்டார். நாளைக்கு வீட்டுக்கு வர முடியுமா?"

"எதுக்கு போலீஸ்லெல்லாம்? என்னாச்சு?"

"நேர்ல வாங்களேன். அப்பாவே சொல்வார்."

*ச*ரியாய் ஏழு மணிக்கு சுந்தர் வந்தான். ஜெயந்திதான் கதவைத் திறந்தாள்.

"வாங்க சுந்தர். உங்களைத்தான் தேடிக் கிட்டே இருந்தேன். அப்பப்போ வருவீங் களே, என்னாச்சுன்னு ஜெயந்திகிட்ட கேட்டேன். நீங்க எங்கேயோ வெளியூர் போயிருக்கிறதா ஜெயந்தி சொன்னா'' என்றபடி பின்னாலே புருஷோத்தமன் வந்தார்.

"புதுக்கோட்டை வரைக்கும் போயிட்டு வந்தேன் சார். எப்படி இருக்கீங்க நீங்க?"

"ப்ளெயினா சொன்னா, நல்லா இல்லை."

இயலாமை சிரிப்பு, முகமெங்கும். சுந் தருக்கு வருத்தமாக இருந்தது.

"என்ன விஷயம்னு சொல்லுங்க சார்."

தன்னை ஒழுங்கு செய்து கொள்பவர் போல் நீண்ட மௌனம். மீரா எட்டிப் பார்த்தாள். இவன் புன்னகைத்தான். அவள் புன்னகையோடு சோகம் தட்டுப்பட்டது.

"உங்களுக்குதான் மீரா பத்தி எல்லாம் தெரியுமே? இப்ப ஒரு வாரமா, அவன் திருப் பியும் பிரச்னை பண்றான். அவ ஆபீஸுக் குப் போன் பண்றான். இங்க பண்றான். பின்னாடியே பாலோ பண்றான். ஒண்ணும் இல்லன்னு ரெண்டு வீட்டார் முன்னாடியும் பிரிஞ்சாச்சு. இன்னும் தொறத்தி தொறத்தி தொந்தரவு பண்ணினா என்ன பண்ண முடியும் சொல்லு. அதான் உங்களுக்கு யாராவது போலீஸ்காரர் தெரிஞ்சா, கூப்பிட்டு வெச்சு மெரட்டினா, திருந்துவானோன்னு பாக் கறேன்."

சுந்தருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. மீராவைத் துரத்துபவன் அவள் கணவனே! கோவிந்த். எல்லாம் பார்த்து, பொருந்திதான் கல்யாணம் நடந் தது. ஆனால் நாகரீகம் என்பது, ஜாதகத்தில் தெரிவதா என்ன? பேச்சு, செயல், நடத்தை எதிலும் மரியாதையில்லை. மென்மை யில்லை. ஆண் என்ற எண்ணத்தின், கர்வத்தின் மொத்த வெளிப்பாடு.

மீரா தாங்கவில்லை. எட்டு மாதங் களுக்கெல்லாம் திரும்பி வந்தபோது, எல்லாரும் ஆடிப் போய் விட்டார்கள். மீரா பாதியாய்த் தேய்ந்திருந்தாள். உள்ளத்தள வில் சோர்ந்திருந்தாள். எந்த சமாதானங் களும் அவளைத் தேற்றவில்லை. மீண்டும் ஒரு மூன்று மாதங்கள், பெற்றோர் வற்புறுத் தலில் போய் துன்பப்பட்டாள். அத்துடன் வந்துவிட்டாள்.


இப்போது மீண்டும் பிரச்னை.

"போலீஸுக்குப் போறதுக்கு முன்னாடி, அவர்கிட்டயே போய் பேசிப் பார்ப்போமா சார்."

ஜெயந்தி காபி கொணர்ந் தாள். சின்ன மர

மனது

ஆர். வெங்கடேஷ்



ட்ரே. ஓரமெல்லாம் பூ வேலைப்பாடுகள்.

"என்னென்னு பேசறது?"

"எதுக்காக இது மாதிரி பண்றீங்க. இது உங்களுக்கே நல்லாயிருக்கான்னு கேட்டுப் பார்ப்போம்."

"எனக்கு நம்பிக்கையில்லப்பா. அவன் மனுஷனேயில்லை. மனுஷனாயிருந்தா இந்த மாதிரி ஒரு பொண்ண திட்டுவானா, அடிப்பானா, இன்னும் என்னென்னவோ எல்லாம் பண்ணுவானா, சொல்லு! அடிப்படையில, சக உயிர்ங்கறதுக்கான கௌரவம்கூடக் கொடுக்கத் தெரியலைன்னா, அவன்கிட்ட எப்படிப் போய்ப் பேச முடியும்?"



•'கள்ளழகருடன்' விஜயகாந்த் & கோ

"போலீஸுக்குப் போறதுல பிரச்னையில்ல சார். பத்திரிகைகாரங்கறதுனால, எல்லாரும் பரிச்சயம் உண்டு. போய் சொல்லலாம். ஆனா நான் என்ன பீல் பண்றன்னா, போலீஸுக்குப் போனா, கோவிந்துக்கு இன்னும் கோபம் வரலாம். அதுக்கு, மரியாதையா போய்ப் பேசியே பாத்துடலாம்."

"அவர் சொல்றபடியே செய்யுங்களேன்பா. இப்ப என்ன ஆயிடப் போறது. பேசிப் பாருங்க. நடந்தா நல்லது. இல்லன்னா வேற வழியிருக்கு."

ஜெயந்தி பேசினாள். சுந்தருக்குப் பின்னாலிருந்த அறை வாசலில் மீரா நின்றிருந்தாள். புருஷோத்தமன் அவளைப் பார்த்தார். மௌனமே அவள் பாஷையாக இருந்தது.

மறுநாள் ஆபீஸ் போனதும் கோவிந்துக்குப் போன் பண்ண வேண்டிய ஞாபகம் வந்தது. செய்தான். அலுவலகத்துக்கு இன்னும் வரவில்லை. வந்தால் தகவல் தெரிவிக்கிறேன். இனிய குரலில் அவன் அலுவலக வரவேற்பிணி உதவ முன் வந்தாள். நல்ல உத்யோகம். நல்ல சம்பளம். நல்ல படிப்பு.

> **வி**ஜயகாந்தைக் 'கள்ளழகர்' காப்பாற்றினால்தான் உண்டு. வரிசையாக வாங்கிய அடியில் மிகவும் துவண்டிருக்கிறார். அடிதடி போணியாகாது என்கிற ஞானம் சற்றுக் காலதாமதமாகப் பிறக்க, இந்தப் படத்துக் கதை, வசனத்துக்கு மகேந்திரனைத் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

சமூகக் கூட்டமைப்பில் மரியாதைக்குரிய மனிதனின் அத்தனை அம்சங்களும் ஒருங்கே பெற்றவன் கோவிந்த். யாரும் கண்ணை மூடிக் கொண்டு பெண்ணைக் கொடுக்கலாம். புருஷோத்தமன் அப்படிக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் உள்ளத்து நாகரிகம் என்பதற்கு என்ன அளவுகோல் உண்டு? தெரியவில்லை. இன்று மீரா வாழப் பிடிக்காமல் வந்து நிற்கிறாள்.

இவர்களை எப்படிப் புரிந்து கொள்ளுவது? படிப்பு, வாசனை எல்லாம் மனிதனை மேம்படுத்தத் தவறி விட்டனவா? இல்லை, மனித மேம்பாட்டுக்கும் இன்றைய கல்விக்கும் சம்பந்தமேயில்லையா?

"என் பொண்ணுங்க டாக்டராகணும், எஞ்சினீயராகணும்னெல்லாம் நான் நெனச்சதேயில்லப்பா. அவங்க மனுஷங்களா வளரணும்னுதான் நான் ஆசைப்பட்டேன். இலக்கியம் படிக்கணும். கலைகள் தெரியணும். அதுதான் ஓவரால் வளர்ச்சியே தவிர, டாக்டர், எஞ்சினீயர் எல்லாம் பரபரப்பான உலகத்தோட ப்ராடக்ட்ஸ் தான்!"

என்னவோ பேச்சின்போது, புருஷோத்தமன் சொன்ன வார்த்தைகளிவை. கேட்டபோது ஆச்சரியப்பட்டான்.

ஆனால் இன்று, அவர் போலீஸுக்குப்

போக வேண்டுமென்பதுதான் காலத்தின் ரசாயன மாற்றம் போலும். நிதானம் அழிக்கும் வேகம். தன்னைக் காத்துக் கொள்ளத் தூண்டும் வேகம்.

அலுவலகத்தை விட்டுக் கிளம்பும்முன் மற்றுமொரு முறை கோவிந்துக்குப் போன் செய்தான் சுந்தர். லைனே கிடைக்கவில்லை.

வழக்கம்போல் நிற்கும் மரத்தடியில் வண்டியை நிறுத்தினான் சுந்தர். பூட்டிவிட்டு, எதிரே கடந்து, ஜெயந்தியின் அலுவலகத்துள் நுழைந்தான். வருகிறானா என்று கேட்டுவிட்டுப் போகலாம் என்றுதான் அவன் உள்ளே நுழைந்தான்.

இவனைப் பார்த்தவுடன் சிநேகமாய் புன்னகைத்தாள் வரவேற்பிணி. ஆஷாவோ என்னவோ பெயர்.

"ஜெயந்தி இருக்காங்களா?"

"மத்தியானமே போயிட்டாங்களே."

"என்னாச்சு?"

"அவங்க சிஸ்டருடைய ஹஸ்பெண்ட் இல்ல..."

"ஆமா, கோவிந்த்."

"அவரு ஏதோ போன்ல கூப்பிட்டு மெரட்டினாராம்."

"மெரட்டினாரா?..."

"ஆமா. ஷி வாஸ் வெரி அப்செட். மத்தியானமே வீட்டுக்குப் போயிட்டா."

அநாகரிகம் மீண்டும் உறைத்தது சுந்தருக்கு.

(தொடரும்)

அமெரிக்காவில், 1984ம் ஆண்டில் 'லாஸ்ட் இன் த டஸ்ட்' என்ற ஆங்கிலப் படம் வெளியானது. அப்போது தியேட்டரில் டிக்கெட்டுடன் ஒரு சிறிய கார்டும் கொடுத்தனர். அதில், ஆறு நம்பர்கள் இருந்தன. ஸ்கிரீனில் ஒவ்வொரு நம்பர் வரும்போதும் படம் பார்ப்பவர்கள் தங்கள் கார்டில் உள்ள அதே நம்பரைச் சுரண்டி முகர்ந்து பார்க்க வேண்டும். அதாவது, திரையில் ஒருவர் மாம்பழம் சாப்பிடுவது போல் காட்சி வரும்போது, அதற்குரிய எண்ணைச் சுரண்டி முகர்ந்து பார்த்தால் கார்டில் மாம்பழ மணம் வீசும். இந்த ஒரு புதுமைக்காகவே அந்தப் படம் சக்கைப் போடு போட்டது.

– 'விசித்திர உண்மைகள்'
— மலர் சூர்யா

80

ஒரு மஹரிஷி உட்கார்ந்து கொண்டு மரத்தடியிலே தபஸ் பண்ணிக் கொண்டிருந்தார். 'கீச் கீச்' என்று ஒரு எலி, பயந்து நடுங்கிக் கொண்டு அவர் திருவடியிலே வந்து உட்கார்ந்தது... ரொம்ப பயத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்தார் மஹரிஷி... ஏன் இது இப்படி பயப்படுகிறது...? பார்த்தால், ஆசிரமத்து வாசலில் ஒரு பூனை வந்து 'மியாவ் மியாவ்' என்று கத்திக் கொண்டிருந்தது.

'ஓஹோ! பூனையைப் பார்த்து பயந்து கொண்டு வந்து விட்டது இந்த எலி' என்று கமண்டலத்து தீர்த்தத்தை எடுத்து எலி மேலே தெளித்தார்... 'நீ உடனே பூனையாகக் கடவாய்' என்றார்! அவருடைய தபோ பலத்தினால் அதுவும் உடனே பூனையாகிறது! ஒரே சந்தோஷம் அவருக்கு.

இரண்டு நாட்கள் கழித்து, பூனை பயந்து கொண்டு ஓடி வந்தது! பார்த்தால், வாசலில் 'லொள் லொள்' என்று ஒரு நாய்! 'ஓஹோ! நாயைப் பார்த்து பயந்து கொண்டு வந்து விட்டது!' என்று மறுபடியும் கமண்டலத் தீர்த்தத்தை எடுத்தார்; மந்திரத்தைச் சொன்னார் – 'நாயாகக் கடவாய்' என்றார்; அதுவும் நாயாகப் போய்விட்டது!

அப்புறம் இரண்டு நாள் கழித்து நாய் ஓடி வந்தது! நாய் ஏன் பயந்து கொண்டு ஓடி வருகிறது என்று பார்த்தால் வாசலில் ஒரு புலி வந்து உட்கார்ந்து கொண்டிருந்தது! நாயைப் பார்த்து இவர், 'புலியாகக் கடவாய்' என்றார். அதுவும் புலியாகி விட்டது. ரொம்ப சந்தோஷம் அவருக்கு. இனிமேல் தம் பாட்டுக்கு ஜபம் பண்ணலாம் என்று உட்கார்ந்து கொண்டார்.

ஆனால், இரண்டு நாள் கழித்துப் பார்த்தால், புலி பயந்து கொண்டு ஓடி வந்தது. இவர் பின்னால் பதுங்கிக் கொண்டு நின்றது. புலி பயப்படுகிறதே; ஏன் பயப்படுகிறது என்று பார்த்தார் முனிவர்... வாசலில் எதையும் காணோம். எழுந்து வெளியிலே போனார். வெளியிலேயும் எதையும் காணவில்லை. ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தார்....

பார்த்தால், ஆகாசத்தில் ஐந்தாறு பருந்துகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அப்போது அந்த முனிவர் தம் இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டார்...

"ஐயோ! இது பிறவியிலேயே புலியாக இருந்தால் பருந்தைப் பார்த்து பயந்து கொண்டு உள்ளே வருமா...? இது எலி; எலியைப் புலியாக நாம் மாற்றி வைத்தாலும் பருந்தைப் பார்த்து பயந்து கொண்டு ஓடி வருகிறதே! ஆகையினால், இயற்கையாக இருக்கிற குணம் மாறாது... என்று தெரிந்து போய்விட்டது..." என்று முடிவுக்கு வந்தார்.

அதனால் மறுபடியும் தீர்த்ததை எடுத்து, நீ மறுபடியும் எலியாகக் கடவது என்று அதன் மேலே தீர்த்தத்தைத் தெளித்தார். மறுபடியும் எலியாகப் போய்விட்டது.

எலியைப் புலியாக்கி, புலியை மீண்டும் எலியாக்கியதில் அவர் தபோ பலம் தீர்ந்து போய்விட்டது! இத்தனை நாளாக அவர் பண்ணிய தபஸ் மொத்தமும் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளவே சரியாகப் போய்விட்டது. இனிமேல் தாம் தீர்த்தத்தை புரோக்ஷித்தால் எதுவும் மாறாது. மறுபடியும் புதிதாக தபஸ் பண்ணி சக்தியை சம்பாதிக்க வேண்டும் என்று உணர்ந்தார்.

சில பேருடைய வாழ்க்கை இப்படி ஆகி விடுகிறது. எதைச் செய்கிறோம்; எதற்காகச் செய்கிறோம் என்பது தெரியாமலே போய் விடுகிறது.

ஆகையினாலே இயற்கையில் ஏற்பட்ட சுபாவம் இருக்கிறதே... அது மாறாது! அதைத் தெரிவிக்கத்தான் இந்தக் கதை சொன்னேன்.

ராமாயணத்திலே மண்டோதரியை சீதை என்று நினைத்துக் கொண்டாரே



அருள்வாக்கு



வாய் மௌனத்தோடு, தினமும் கொஞ்ச நேரமாவது எதையும் நினைக்காமல், சிந்தனை தாரையை அடக்கி வைக்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. "தூஷ்ணீம் கிஞ்சித் அசிந்தயேத்." ஸாதிப்பது கஷ்டந்தான். இதற்கென்றே உட்கார்ந்தாலும், "எப்படி ஒன்றையும் நினைக்காமலிருப்பது? 'ஒன்றையும் நினைக்காமலிருக்க வேண்டும்' என்ற நினைவுதானே இப்போதும் வந்து கொண்டிருக்கிறது?" என்று தோன்றும். மனஸ் எதையும் நினைக்காமலிருக்க வேண்டுமென்று பிரயாஸைப்படுவதும் மனஸின் ஒரு கார்யம்தான். சிந்தையை அடக்கியே சும்மா இருக்கும் திறம் அரிது என்று சொன்னது இதனால்தான். ஆனாலும் இப்படிப் பண்ண வேண்டும் என்ற பூர்ண ஈடுபாட்டோடு, விடா முயற்சியுடன் இதற்காக உட்கார்வது என்று ஆரம்பித்தால், ஈச்வர க்ருபையில் அந்த லக்ஷ்யம் கொஞ்சங் கொஞ்சமாகக் கைகூட ஆரம்பிக்கும். நாம் பண்ணக் கூடியது யத்தனம்தான். பலன் ஈச்வரன்தான் தர வேண்டும். அதனால், "சும்மா" என்று தாயுமானவர் சொன்னபடி ஒரு சிந்தையும் இல்லாமல் உட்கார வேண்டும் என்ற தாபத்தோடு முயற்சியைத் தொடர்ந்து கொண்டே போனால், என்றைக்கோ ஒருநாள் அவன் ஸித்தியை அநுக்ரஹிப்பான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

ஆஞ்சநேயர், அப்போது அவருக்கு வந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை. தம் வாலைத் தூக்கி ஒரு அடி அடித்தாராம் தரையிலே!

குரங்குகளுக்கு சந்தோஷம் ஏற்பட்டால் வாலைத் தூக்கி அடிக்கும்!

ஆஞ்சநேயர் வாலை எடுத்து முத்தம் கொடுத்துக் கொண்டாராம் - ஒரே கூத்து! நர்த்தனம் பண்ணுகிறார். அது மாத்திரம் அல்ல... கிடுகிடுவென்று ஸ்தம்பத்தில் ஏறுகிறார். அந்த ஸ்தம்பத்திலிருந்து கீழே குதிக்கிறார்!

அப்போதுதான் வால்மீகி ஆஞ்சநேயரைப் பற்றி ஏகமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார். 'பண்டிதன்; மகா வித்வான்' என்றெல்லாம் சொல்கிறார். அப்படிப்பட்டவன் ஸ்தம்பத்தில் ஏறினான் என்று சொன்னால்...!

'இவர் பெரிய வித்வான்; சதுர் சாஸ்திர பண்டிதர்' என்று ஒருத்தரைப் பற்றிச் சொல்கிறோம். 'இவரை சேவித்தாலே நல்லது' என்று சொல்லிக் கொண்டே இருக்கும் போது, அவர் கிடுகிடுவென்று ஸ்தம்பத்தில் ஏறினாரானால் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு என்ன தோன்றும்?... 'இவரா வித்வான்' என்று தோன்றும். அந்த மாதிரி ஆஞ்சநேயர், இவ்வளவு பெரிய வித்வான் கிடுகிடுவென்று ஸ்தம்பத்தில் ஏறுகிறாரே... குதிக்கிறாரே என்று கேள்வி கேட்டால், அதற்கு வால்மீகியே பதில் சொல்லி விட்டார்... என்ன பதில்?

'ரொம்ப சந்தோஷம் வந்த போதுதான் யார் என்பதைக் காட்டி விட்டான் ஆஞ்சநேயன். அதனால் ஒருத்தருக்கு இயற்கையாக இருக்கிற குணம் மாறாது என்று ஏற்படுகிறதா இல்லையா?!

ஆதலால்தான் ராவணன் இலங்கையில் அரக்கனாகவே இறுதி வரை இருந்தான். ஆனாலும் எம்பெருமானுடைய வடிவழகை அவன் அனுபவித்தான். சூர்ப்பனகையும் அதை அனுபவித்தாள். மஹரிஷிகளெல்லாம் அனுபவித்தார்கள். ராட்சசக் காட்டிலேயும் எல்லோரும் அனுபவித்தார்கள்.

மார்பிலே அம்பு தைத்து விழுகிறான் வாலி. அம்பை உள்ளே போகவிடாமல் அப்படியே பிடித்து இழுக்கிறான். அதிலே பார்த்தால் ராம நாமம்! எதிரே பகவான் வந்து நிற்கிறான். அவனைக் கண்டவாறு ஏசுகிறான் வாலி. ஏசும்போதே ஒரு வார்த்தை சொல்கிறான் :

கோவியல் தர்மம் உங்கள் குலத்துதித்
தோர்கட்கெல்லாம்
ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தாய்!
உடைமையன்றோ
ஆவியை, ஜனகன்பெற்ற அன்னத்தை
அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்
தனை போலும் செய்கை!

- கம்பராமாயணத்திலே ரொம்ப அழ

கான பாசுரம் இது. அந்த நிலையிலும் ஸ்ரீ ராமனின் வடிவழகை 'ஓவியத்தில் எழுத வொண்ணா உருவத்தாய்' என்கிறான் வாலி!

இந்தக் கம்பனுக்கு கம்பன் என்று ஏன் பெயர் வந்தது? கம்பனை ஸ்தோத்திரம் பண்ணியதாலே!

கம்பன் என்றால் யார்? நரசிம்ஹன் இரணிய வதைப் படலம் வருகிறது கம்ப ராமாயணத்தில் – யுத்த காண்டத்தில். நரசிம்ஹனின் அவதார வைபவத்தை ஸ்பஷ்டமாக அதில் பேசுகிறான் கம்பன். அவனுடைய வாக்கு விசேஷமாக இருக்கிறது. நரசிம்ஹ ஆராதனம்தான். அந்த வாக் பலத்தைக் கொடுத்து கம்பத்துள்ளிருந்து வெளிப்பட்ட கம்பக் குழந்தையான நரசிம்ஹனை ஆராதனம் பண்ணியதாலே அவனுக்கு கம்பன் என்று பெயர்.

அந்தக் கம்ப ராமாயணத்தில் வாலி வதைப் படலத்தில் வரும் காட்சியைச் சொல்லிக் கொண்டிருந்தேன்...

ராமன் அடித்து விட்டான் என்று தெரியும். ஆனால் எதிரில் இருக்கிற வடிவழகிலே ஈடுபட்டு, ''ஓவியத்தில் எழுதவொண்ணா உருவத்தாய்' என்கிறான். ஏசிக் கொண்டேயிருக்கிறபோது நடுவில் ஸ்தோத்திரம் வேறு!

"ஏண்டா சுவாமி!" என்று நாம் யாரையாவது அழைக்க முடியுமா? ஒன்று, 'சுவாமி, வாருங்கள்'' என்று சொல்ல வேண்டும் அல்லது 'ஏண்டா! வாடா!" என்று அதிகாரமாய்ப் பேசலாம். ஆனால் வாலி சொல்கிறான். வைது கொண்டே ஸ்தோத்திரம் பண்ணுகிறான்.

'ஒரு சித்திரத்தை வரையக் கூடியவன் உன் வடிவழகை எழுத வேண்டுமானால் எழுத முடியுமா என்ன!' என்கிறான். அவன் எத்தனை நேரம் முயன்று எழுதினாலும் வராது. கிழித்துத்தான் போட வேண்டும்! இது கம்பன் சொல்வது.

சுவாமி தேசிகன் இதற்கு நேர் மாறாகச் சொல்கிறார். எழுத முடியும் என்கிறார். யாதவாப்ஹ்ருதயத்திலே சொல்கிறார்.

'அப்படியானால், கம்பனுடைய வாக்கு பொய்யா?' என்று கேட்டால் பொய்யில்லை... இரண்டு பேருடைய வாக்கும் சத்யம்.

சுவாமி தேசிகன் ரொம்ப அழகாகச் சொல்லியிருக்கிற இந்த சுலோகம்தான் அப்பய்ய தீக்ஷிதரின் ஹ்ருதயத்தைக் கொள்ளை கொண்டது.

யாதவாப் ஹ்ருதயம் என்கிற அழகான காவியத்தை சுவாமி தேசிகன் எழுதினார் அல்லவா... அதற்கு அப்பய்ய தீக்ஷிதர் வியாக்யானம் பண்ணியிருக்கிறார். அவர் ஹ்ருதயத்தைக் கொள்ளை கொண்ட சுலோகம் இதுதான்:

பகவான், நம்முடைய ஹ்ருதயம் என்கிற பலகையிலே, விளையாட்டு என்கிற எழுதுகோலை எடுத்துக் கொண்டு, காருண்யம் தயை என்கிற மையில் தோய்த்துக் கொண்டு தன் உருவத்தைத் தானே எழுதுகிறான். பகவானே எழுதுகிறான்... அதை அழிக்க யாராலாவது முடியுமா?!

ஆக, அவன் வடிவழகை அவனே எழுத வேண்டுமேயொழிய நாம் எழுத நினைத்தால் முடியுமோ?! ஆதலால் கம்பன் சொல்வதும், சுவாமி தேசிகன் சொல்வதும் வேறல்ல... ஒன்றுதான்.

(தொடரும்)

முதல் ரசிகர் மன்றம்!

முதன் முதலில் நடிகருக்கான ரசிகர் மன்றம் 1902-ல் இலண்டனில் ஆங்கில நடிகரான லெஸ்லிவால்லர் என்பவருக்கு ஏற்படுத்தப்பட்டது. சங்க உறுப்பினர்கள் எந்த கோரிக்கைக்காகவும், உதவிக்காகவும் தன்னை நாடுவதில்லை என வாக்களித்த பிறகே தனக்கு சங்கம் அமைக்க லெஸ்லிவால்லர் சம்மதித்தார்.

'அதிசயம் ஆனால் உண்மை'
– மலர் சூர்யா

"நம்ம ஷங்கர் மாதிரி எதையும் பிரம்மாண்டமா செய்ய நினைக்கிறவர். அதுதான் இப்படியொரு ட்ராலி ஷாட்."
- சுல்தா





பிரிவு

கவிதை வடிவில் சிறுகதை!

அப்போது தான் வந்த அஞ்சலட்டை யைப் படித்தேன்.
இப்பாரை விட்டேநீ ஏகிவிட்டாய் என்றதது!
துக்கம் வந் தென்னுடைய தொண்டை அடைக்கவில்லை.
பொக்கென்று கண்ணீரும் பொங்கிவர வில்லையடி!
தீப்பட்ட மேகங்கள் திரியும்வான் என்னெதிரே!
பூப்பட்டு மேனியெனப் புகல்வேனே அந்நாளில்;
அந்தவுன் மேனியினை அனலில் பொசுக்கியதை
சிந்தையில் இச்செய்தி தெரிவிக்கும் இவ்வேளை...
இந்தப் பேரிடி யென்னுள் இறங்குகையில் வலியில்லை.
சொந்தத்தை இழந்துவிட்ட சோகம் குமைக்கவில்லை!
மூன்றுமா மாங்கங்கள் முன்னால்நீ என் நெஞ்சுள்
ஊன்றி நின்றாய் உன்பாதம்! உணர்வெல்லாம் ஒரு வேகம்!
உன்கா லடியோசை உண்மையிலே ஜதிபேசும்!
உன் பார்வைக் கணைகளுக்காய் உயிரேங்கிக் காத்திருக்கும்!
ஒன்றிரண்டு சொற்கள்தாம் ஊரறியா வண்ணம் நாம்
அன்று பரி மாறியவை! அவற்றை யெண்ணியே மிதந்து
கனவுக்காய்க் கண்துயின்று காலமெலாம் ஏக்கத்தின்
தினவுதரும் மயக்கத்தில் தெய்வ சுகம் கண்டிருந்தோம்!
அப்பாவின் மாற்றலினால், ஐயோ! உனைப் பிரிந்தேன்.
இப்போது கண்முன்னே ஏங்கும் மீன் விழிகளுடன்
சாளரத்துக் கம்பிகளின் தடைமீறி நீ நின்ற
கோலம் புகைபோலக் குமைகிறது! வண்டியில் நான்
விலென் றழவில்லை! விம்மியெனக் குள் அழுதேன்!
ஓடிவிட்டன நாட்கள்! உன் நினைவில் வாழ்வோடத்
தேடி வந்த கடிதமொன்றுன் திருமணத்தைச் சொல்லியது!
அந்தக் கடிதமெனை அனலாய்ப் பொசுக்கியது!
சிந்தை கலங்கியது! சித்தத்தில் பித்தேற,
உன்மத்த னாய்ச் சிலநாள் உலவிக்கொண் டிருந்தேன் நான்!
மாதங்கள் - வருடங்கள் வளர்ந்து கடமைகளிலே
காதங்கள் உனைக் கடந்து கனவான தந்நினைவும்!
காலத்தின் மாயத்தில் கனவு நிழலும் மறைய
வேலை - வேகம் - மனைவி. வீட்டில் குழந்தைகள்!
ஓடியுடல் களைத்தேன். ஓய்வுபெற்று நிற்கையிலே
நாடி வந்த இக்கடிதம் நமனுலகு நீ சென்ற
சேதியினைச் சொல்கிறது! சிந்தை கலங்கவில்லை.
போதிமர வாழ்க்கையதில் புத்தனென ஆனேனா?
என்றோ என் நினைவில்நீ எரிந்து விட்டாய் என்பதனால்
இன்றிங்கே நான்ஜடமாய் இறுகிப் போய் விட்டேனா?!

- நா.சீ. வரதராஜன்



"விருதும் வேண்டாம்; விழாவும் வேண்டாம்!"

- சிவாஜி

- ஜுராசிக் பார்க்'கை, ஹாலிவுட் மறந்து விட்டாலும், தமிழ் நாடக உலகம் மறந்து இல்லை. கிரேஸி மோகனின் அடுத்த நாடகம், 'ஜுராசிக் பேபி' சயன்ஸ் ஃபிக்ஷன்! டிசம்பரில் அரங்கேற்றம்.
- அடுத்தப் படம் எப்போது என்று ஏவி.எம். வட்டாரத்தில் கேட்டால், "அடுத்த படியாய் இரண்டு டி.வி. சீரியல்களில் பிஸி. அவற்றில் ஒன்று தூர்தர்ஷனுக்கு. சிவசங்கரி கைவண்ணத்தில் மெகா தொடரான 'ஒரு பெண்ணின் கதை!' இந்தப் பணிகள் ஆரம்பித்து பிக் அப் ஆனவுடன், சினிமா வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்" என்று பதில் வருகிறது.
- ஏ.ஆர். ரஹ்மானுக்கு, 'இளம் புயலில் ஆரம்பித்து பலவிதமான பட்டங்கள் கொடுத்தாகி விட்டது. லேட்டஸ்ட் பட்டம் 'லிட்டில் செயின்ட்'! இந்தப் பட்டம் தந்தவர் சீனியர் செயின்ட்டான ரஜினி. (வந்தே மாதரம் விழாவில்)



மூழ்காத ஷிப்

டைடானிக் படம்தான் சூப்பர் ஹிட் என்று இல்லை. அது சம்பந்தமான எல்லாமே பொன்முட்டையிடும் வாத்துகள்தான். டைடானிக் பற்றி சமீப காலத்தில் வெளியாகி, ஓகோ என்று விற்பனையாகும் புத்தகங்களின் பட்டியல் நீளமானது. டைடானிக் – லெகஸி ஆஃப் தி வோர்ல்ட்'ஸ் கிரேட்டஸ்ட் ஓஷன் லைனர் என்ற புத்தகத்தை எழுதி, பரபரப்பாய் விற்க வைத்திருப்பவர் சூசன் வெல்ஸ். டைடானிக் கப்பலைக் கட்ட ஆரம்பித்ததில் ஆரம்பித்து, இன்று வட அட்லாண்டிக் சமுத்திரத்தினுள்ளே டைடானிக்கின் மிச்சம் மீதிகள் பற்றி நடைபெறும் ஆராய்ச்சி வரை விவரமாய் எழுதப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில், மார்ஷ் என்பவர் (டைரக்டர்) ஜேம்ஸ் காமரூனின் டைடானிக் என்று டைடானிக் படம் எடுக்கப்பட்ட கதையை எழுதியிருக்கிறார் படு

"சிவாஜிக்கு எல்லாவிதமான தகுதிகளும் இருந்தும், இந்திய அரசாங்கம் இன்னும் அவருக்கு தாதாசாகிப் பால்கே விருது வழங்கவில்லையே என்று ஆதங்கப்பட்டோம். ஒரு வழியாக, அரசாங்கமும் அவருக்கு பால்கே விருது அளித்து, அந்த விருதுக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்திக் கொண்டது. அதற்கான விழாவும் டெல்லியில் முடிந்து, இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், தமிழ்த் திரையுலகம், சிவாஜிக்கு ஒரு பிரம்மாண்டமான விழாவை நடத்தவில்லை என்பது பெருங்குறை" என்று ஒய்.ஜி. மகேந்திராவின் 'லைட்ஸ் ஆன்' நாடகத்தின் நூறாவது நாடக விழாவில் பேசியவர் ஏ.ஆர்.எஸ்.

அண்மையில் தமிழ்த் திரையுலகமே இரண்டு சிறப்பான முறையில், சிவாஜி தலைமையில், கலைஞருக்கு ஒரு விழா எடுத்ததைப் போல, சீக்கிரமே கலைஞர் தலைமையில், சிவாஜிக்கு ஒரு பாராட்டு விழாவை நடத்திட வேண்டும் என்று பேசினார்கள்.

சிவாஜி பேசும்போது, "நான் விருதுகளை நாடிப் போனது கிடையாது. அவை வரும்போது ஏற்றுக் கொள்வேன். தமிழ்த் திரையுலகத்திலிருக்கிற ஒவ்வொருவரும், என்னைத் தனக்கு மிகவும் நெருக்கமானவராக நினைக்கிறார்கள் போலும்! அதனால்தான் தங்களுக்குத் தாங்களே எப்படிப் பாராட்டு விழா நடத்திக் கொள்ளுவது என்று சும்மா இருந்து விட்டார்கள்.

"இனிமேல் எனக்கு விருதுகள் எதுவும் வேண்டாம். பாராட்டு விழாக்களும் வேண்டாம்!" என்று அதிர்ச்சியளித்தார்!

வழக்கமாய் இதுபோன்ற விழாக்களை, நாடகத்தின் இடைவேளையின்போதே நடத்தி முடித்து விடுவார்கள். பின், நாடகம் தொடரும். ஆனால், மகேந்திராவுக்கு சிவாஜி இருக்கிற தைரியம்! இல்லாத, நாடகத்தை முடித்த பின், பாராட்டு விழாவை நடத்தி, தேசியகீதம் பாடப்பட்டது!

— மானஸா


சுவாரசியமாக. 1912 ஏப்ரல் 14ம் தேதி டைடானிக் கப்பல் மூழ்கியபோது நடந்த நிகழ்ச்சிகள் கப்பலைச் செலுத்தியவர்கள், பயணிகள் என்று நுணுக்கமாய் விவரிக்கும் 'தி ஃபுல் ஸ்டோரி ஆஃப் டைடானிக்' என்ற புத்தகத்தில். இதில் உபரியாக டைடானிக் மூழ்குவதைக் கண்ணால் கண்ட கலிபோர்னிய கப்பல் அதிகாரிகளின் வர்ணனைகளையும் சேர்த்திருக்கிறார் ஆசிரியர்.

டைடானிக் கப்பல் பற்றித்தான் இத்தனை புத்தகங்கள் என்று இல்லை. அதன் இளம் ஹீரோவான லியோனார்டோ டிகாப்ரியோ (வயது 23) பற்றிய புத்தகங்களும் சூடாக விற்பனை யாகின்றன. அவரைப் பற்றி வெளியாகியுள்ள ஒரு டஜன் புத்தகங்களும் விற்பனையில் படு சுறுசுறுப்பு என்பது ஆச்சரியமான உண்மை.



இன்று அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் டாப் 10ல் இடம் பெறும் புத்தகம் லியோனார்டோ டி காப்ரியோ ஆல்பம் என்ற வாழ்க்கை வரலாறுதான். ஆங்கிலம் அதிகம் பேசாத ஜப்பானில்கூட இதன் பிரதிகளின் விற்பனை பத்தாயிரத்தைத் தாண்டி விட்டது. மற்றப் புத்தகங்கள்: லியோனார்டோ டி காப்ரியோ – எ பயோகிரபி, லியோனார்டோ: மாடர்ன் டே ரோமியோ, லியோனார்டோ: ரொமான்டிக் ஹீரோ.... இன்றுள்ள தகவல்படி இவருக்கு இன்டர்நெட்டில் 400 வெப் சைட்கள் உள்ளன!

— மௌலி





இருளில் ஒரு புரட்சி!

படத்தைப் பார்த்த உடனேயே, இது அஜந்தா குகை ஓவியத்தின் போட்டோ என்று கரெக்டாகச் சொல்லி விடலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அஜந்தா, மற்றும் எல்லோரா குகை ஓவியங்களை, ஃப்ளாஷ் பயன்படுத்தி, புகைப்படம் எடுப்பதை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை தடை செய்து இருக்கிறது. காரணம், ஃப்ளாஷ் வெளிச்சம் ஓவியங்களை பாதித்துவிடும் என்பதுதான்.

எனவே, இருளான அஜந்தா குகைக்குள்ளே, ஃப்ளாஷ் பயன்படுத்தாமல் எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இங்கே உள்ளது என்றால் ஆச்சரியப்படுவீர்கள்! இவ்வகைப் புகைப்படக் கலை, போட்டோகிராபியில் புரட்சி என்று குறிப்பிடப்படுகிறது. இந்தப் புகைப்படத்தை எடுத்தவர் மும்பையைச் சேர்ந்த புகைப்பட நிபுணர் மற்றும் டாகுமெண்டரி படத் தயாரிப்பாளரான போனி பாய்.

ஃபிளாஷ் வெளிச்சம் இல்லாமல் இருளில் புகைப்படம் எடுப்பது பற்றிப் பத்தாண்டுகளாய்ப் பலவிதமான பரிசோதனை முயற்சிகள் செய்து பார்த்து, அதில் நிபுணத்துவம் பெற்று விட்டவர் போனி.

இத்தகைய புகைப்படங்கள் எடுப்பது எல்லோருக்கும் சுலபமா? பிரபல ஒளிப்பதிவு இயக்குனர் பி.சி. ஸ்ரீராமிடம் கேட்டோம்.

"விஞ்ஞான ரீதியில் பார்த்தால், இருளான எந்த ஒரு இடத்திலும் மிக மிகக் குறைந்த அளவிலாவது வெளிச்சம் இருக்கவே செய்யும். அந்த வெளிச்சத்திலேயே, ஃபிளாஷ் பயன்படுத்தாமல் வண்ணப் புகைப்படங்கள் எடுப்பது சாத்தியம். இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான பாயிண்ட், அந்த இடத்தில் இருக்கிற வெளிச்சம், மிகக் குறைவு என்பதால், அது காமிராவின் கண் வழியே நீண்ட நேரம் உள்ளே சென்று, பிலிமில் படும்படிச் செய்ய வேண்டும். நீண்ட நேரம் அசையாமல், கேமிராவைப் பிடித்துக் கொண்டிருப்பது இயலாது என்பதால், கேமராவை ஸ்டாண்டில் பொருத்தி விடலாம். இதுமாதிரி புகைப்படங்கள் எடுக்க ஹைடெக் கேமிராக்கள் தேவையில்லை. சாதாரணமான மேனுவல் கேமிராவே போதுமானது. அந்தந்த இடத்துக்கேற்ப கிளிக் செய்யும் நேரம் மாறுபடும் என்பதால் பொறுமையும், அனுபவமும் அவசியம்.

"நான் ஃப்ளாஷ் பயன்படுத்தாமல் இயற்கையாக இருக்கிற வெளிச்சத்தில் நிறைய படங்கள் எடுத்திருக்கிறேன் என்றாலும், இதுபோன்ற அஜந்தா டைப்களில் முயன்றது இல்லை."

தகவல் : **மௌலி**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)


கல்கி
இலவச இணைப்பு!
KALKI
18.10.98
உணவு ஸ்பெஷல்!



உணவு ஸ்பெஷல்!

பிரபல எழுத்தாளர் குஷ்வந்த் சிங் ஓர் உணவுப் பிரியர். ஒரு முறை இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது கண்ணில் பட்ட உணவு வகைகளையெல்லாம் உள்ளே தள்ளினாராம். நிறைய பார்ட்டிகள் வேறு. கேட்க வேண்டுமா? வயிறு ஒரு மாதிரியாகி விட்டது. அங்குள்ள இயற்கை சிகிச்சை மையத்துக்குப் போனார். அந்த அனுபவத்தை அவரே சொல்கிறார் பாருங்கள்.

"கடந்த நான்கு நாட்களாக என்னென்ன சாப்பிட்டீர்கள்?" என்று என்னைக் கேட்டார் டாக்டர். பட்டியலிட்டேன். 'நாளைக்கு வாங்க' என்று அனுப்பினார். மறுநாள் சென்றபோது எனக்குப் பேரதிர்ச்சி. ஒரு பிரம்மாண்டமான ஜாடியில் முட்டை, காப்பி, வறுவல், இறைச்சி, விஸ்கி என்று பயங்கரமான ஒரு கலவை! துர்

நாற்றம்... 'நீங்கள் நான்கு நாட்களாகச் சாப்பிட்டதாகச் சொன்ன ஐட்டங்கள்தான் இவை' என்றார் டாக்டர். அதற்குப் பிறகு என் உணவுப் பழக்கத்தில் மாறுதல் ஏற்பட்டது" என்கிறார் குஷ்வந்த் சிங்.

நம்மில் பலரும் வயிறைப் பற்றிக் கவலைப்படாமல் கிடைத்ததையெல்லாம் உள்ளே தள்ளுகிறோம்.

உணவு என்பதும், பசி என்பதும் ஒரு விதத்தில் நமக்குக் கிடைத்த வரங்கள். ருசியான உணவு என்பது ஒரு விதத்தில் 'பேஷ் பேஷ்'தான். ஆனால் நாக்கு மட்டுமல்ல; நம் உடலும் இப்படி உணருமானால், அது நிஜமாகவே பேரின்பம்! உடலுக்குத் தேவையான சத்துக்கள் உணவில் இருக்க வேண்டியது அவசியம்.

நம் உடலுக்குத் தேவைப்படும் மிக முக்கியமான சத்து தண்ணீர்தான்! மற்ற சத்துக்கள் இல்லாமல் சில வாரங்கள் வரை உயிர் வாழலாம். ஆனால் தண்ணீரில்லாமல் அப்படி இருக்க முடியாது. அதிகபட்சம் ஒரு வாரம்தான்! (தண்ணீர் கூடக் குடிக்காமல் சில வாரங்கள் உண்ணாவிரதம் இருந்த ஜைனத்துறவி நியூஸ் எல்லாம் அதிசய விதிவிலக்கு).

மற்ற சத்துக்களைக் கரைப்பது, அவற்றை எல்லா திசுக்களுக்கும் எடுத்துச் செல்வது, உணவை சக்தியாக்கும் மாயாஜாலம் இப்படி எல்லாவற்றுக்குமே தண்ணீர் முக்கியம். பெரியவர்கள் ஒவ்வொருவரும் தினமும் இரண்டரை லிட்டர் தண்ணீராவது குடிக்க வேண்டும். காப்பி, சூப், ரசம், மோர் என்று பலவிதங்களிலும் நீரை நாம் உட்கொள்கிறோம்.

நமக்கு சக்தியளிப்பதில் முக்கியப் பங்கு கார்போ-ஹைட்ரேட் எனப்படும் மாவுச் சத்துக்கு உண்டு. ஒரு கிராம் கார்போஹைட்ரேட்டிலிருந்து நாலு கலோரிகள் கிடைக்கும். இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலான உணவு வகைகளில் மாவுச்சத்து இருக்கும். சர்க்கரை, பால், பழங்கள் பல காய்கறிகள் ஆகியவற்றில் இது அதிகம்.

கொழுப்பு கூட சக்தியளிக்கும்தான். சொல்லப் போனால் ஒரு கிராம் கொழுப்புச் சத்து, ஒன்பது கலோரிகளை அளிக்கும்! இதில் உடலுக்குத் தேவையானது போக மிச்சம் இருக்கும் கலோரிகள் ஆங்காங்கே உடலில் சேர்ந்து ஊளைச் சதையாகிறது.

புரதத்துக்கு வேறு ஒரு முக்கியப் பயன் உண்டு. அதுதான் உடலில் உள்ள திசுக்களை வளர்ப்பது. தசை, தோலிலிருந்து தலைமயிர் வரை எல்லாமே ஆரோக்கியமாக இருக்கப் புரதச் சத்து அவசியம்!

மேலே குறிப்பிட்ட மூன்று சத்துக்களும் பெருமளவில் நம் உடலுக்குத் தேவைப்படுகின்றன. அதே சமயம் சிறிய அளவில் (ஆனால் கட்டாயம்) உடலுக்குத் தேவைப்படுபவை மினரல்களும், வைட்டமின்களும்.

நம் உடலில் சுரக்கும் பல்வேறு சுரப்பிகள் சரியான விகிதத்தில் அமைய மினரல்கள் தேவை. மற்ற எல்லாவகை சத்துக்களையும் உடலே ஓரளவுக்கு உற்பத்தி செய்து சமாளிக்கும் என்றாலும் மினரல் சத்து அப்படியல்ல. நாமே உணவில் சேர்த்துக் கொண்டால்தான் உண்டு. கால்ஷியம்,

மெக்னீஷியம், பாஸ்பரஸ் (இவை மூன்றும் எலும்புகளுக்கும் பற்களுக்கும் மிகத் தேவை) க்ளோரின், பொடாஷியம், சோடியம் போன்ற பலவகை மினரல்களை பால், கீரை வகைகளில் பெறலாம். இரும்பு, அயோடின், க்ரோமியம் போன்ற மினரல்கள் ரொம்பத் துளியூண்டு இருந்தால் போதும்.

வைட்டமின்கள் சிறு அளவு நம் தினசரி உணவில் சேர்ந்தால் போதும். காய்கறிகள், தானியங்கள், பால், கீரை வகைகள் இவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் தானாக எல்லா வகை வைட்டமின்களும் நம் உணவில் சேர்ந்துவிடும்.

பல உடல் கோளாறுகளும் நோய்களும் உண்டாவதற்குக் காரணமே நம் உணவில் சில வகை சத்துக்கள் இல்லாமல் போவதாலோ, அல்லது மிகக் குறைவாக இருப்பதாலோதான். அந்தச் சத்து அதிகமுள்ள உணவை உட்கொண்டாலே கோளாறு தானாகச் சரியாகிவிட வாய்ப்பு உண்டு!

இவற்றை மனத்தில் கொண்டு நாக்குக்கும் ருசி; உடல் நலத்துக்கும் ஏற்றது என்ற வகையில், இந்த "உணவு ஸ்பெஷலில்" அவ்வளவாக அறிமுகமாகாத சில உணவுக் குறிப்புகளை அளித்திருக்கிறோம்.

நட்சத்திரக் குறியிட்ட உணவுக் குறிப்புகளை அளித்து உதவியவர் சென்னை சிந்தூரி ஹோட்டலின் தலைமை சமையல் பொறுப்பாளரான தேவகுமார். வட்டமிட்ட குறிப்புகளைத் தந்து உதவியவர் சென்னை மலர் மருத்துவமனையின் சீனியர் டயட்டீஷியன் சுமித்ரா சுந்தரமூர்த்தி.

● காளான், பச்சைப்பட்டாணி கறி


காளான் உணவைக் கையால் கூடத் தொட்டதில்லை என்பவர்கள் கூட அதன் அருமை பெருமைகளை நிச்சயம் காதில் வாங்கியிருப்பார்கள். புரதம், இரும்புச் சத்து, தாமிரச் சத்து, வைட்டமின் சத்து எல்லாமே அமைந்த சூப்பர் மார்க்கெட் காளான். தவிர பட்டாணியில் இல்லாத புரதச் சத்தா? காளானும், பட்டாணியும் கை கோக்கும் இந்த ஐயிட்டம் 'புரதமோ புரதம்தான்'.

இதையெல்லாம் முதல்லே ரெடி பண்ணிக்குங்க:

ஃப்ரஷ்ஷான காளான்கள் - 400 கிராம்; வெங்காயம் - 200 கிராம்; தக்காளி (பேஸ்ட் ஆக) - 200 மில்லி லிட்டர்; பச்சை மிளகாய் - 4; இஞ்சி (பேஸ்ட்) - 5 கிராம்; பூண்டு (பேஸ்ட்) - 5 கிராம்; பச்சை ஏலக்காய் - 2; லவங்கம் - 2; சீரகம் - அரை டீஸ்பூன்; சிகப்பு மிளகாய் பொடி - 10 கிராம்; கொத்துமல்லி விதைப் பொடி - 10 கிராம்; மஞ்சள் பொடி - கால் டீஸ்பூன்; பச்சைப் பட்டாணி - 50 கிராம்; கொத்துமல்லி - ஒரு கொத்து; தயிர் - 20 மில்லி லிட்டர்; எண்ணெய் - 60 மில்லி லிட்டர்; சால்ட் - தேவையான அளவு.

ரெடியா?

கொதிக்கும் எண்ணெயில் மசாலாவை வதக்குங்கள். கூடவே சீரகத்தையும் போட்டுத் தாளியுங்கள். "பட்...பட்" வந்தவுடன் வெங்காயத்தையும் (ஏற்கெனவே நறுக்கி வைத்திருக்க மாட்டீர்களா



என்ன?) அதில் போட்டு பொன்னிறமாகும் வரை வறுக்கவும். பிறகு விழுதுகளை (ஆலமர விழுதுகள் அல்ல - இஞ்சி மற்றும் பூண்டை நன்றாக அரைத்ததனால் உண்டான விழுதுகள்) அதில் கலக்குங்கள்.

ஆச்சா, இப்ப என்ன செய்யறீங்க, தக்காளி பேஸ்ட், பச்சை மிளகாய், மஞ்சப் பொடி, சிகப்பு மிளகாய்ப் பொடி எல்லாவற்றையும் டக்



“இந்தம்மா குடும்ப ஆரோக்கியத்திலே ரொம்ப கவனம் செலுத்தறவங்க. உணவிலே கலோரி அளவெல்லாம் கச்சிதமாய் இருக்கும்.”

– குல்லூ

டக்கென்று சேருங்கள். மீண்டும் வதக்கல். எப்போது நிறுத்த? எண்ணெய் தனிப்படும் போது.

சுத்தம் செய்யப்பட்ட காளான்களையும், உங்கள் குடும்பத்தினரின் நாக்குக்கேற்ற உப்பையும் கலந்து, காளான் பதமாகும் வரை கொதிக்க வைக்கவும். (அப்போது காஸ் ஸ்டவ் ‘ஸிம்’மில் இருக்கட்டும்).


வேக வைத்த பட்டாணியை (முதல்லயே சொல்லியிருந்தா வேக வச்சிருப்போமேன்னு கடுப்படிக்காதீங்க), மற்றும் தயிர், கொத்துமல்லி விதைப் பொடி ஆகியவற்றைக் கலந்து கொதிக்க வையுங்கள்.

குடும்பத்தினர் ஆறு பேரை உட்கார வைத்துப் பரிமாறி மகிழுங்கள் (ஆறு பேருக்கான

சமையல் குறிப்பைத்தான் தந்திருக்கோம். அதைவிட அதிகம் அல்லது கம்மியென்றால் சாமான்களின் அளவுகளை மாற்றி அமைச்சுக்குங்க).

● பனீர் பக்கோடா

காதர் மட்டுமல்ல, பலருக்கும் பிடிக்கக்கூடிய இந்த பக்கோடா செய்முறை இருபது பேர்களுக்கானது. (விருந்தாளிகளுக்கெல்லாம் கொடுக்கும் வழக்கம் உண்டுதானே?) புரதச் சத்து இதிலும் கணிசமாக உண்டு. ஆனால் அடிக்கடி இதை விழுங்கிக் கொண்டே இருந்தால் கலோரிகள் ஏறி 'நானே நானா, யாரோ தானா?' என்று பாடும் அளவுக்குப் பருத்துப் போனால், நாம்



பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக் கோமகன் 'Earl of Sandwich' சீட்டுக்கட்டு விளையாடும் போதெல்லாம் தன் வேலையாளைக் கூப்பிட்டு, "இரண்டு ப்ரெட் ஸ்லைஸ்களுக்கு நடுவில் ஒரு சின்ன வறுத்த இறைச்சித் துண்டை வைத்து சாப்பிடக் கொண்டு வா" என்று உத்தரவிட, "இதென்ன அசட்டுத்தனம்?" என்று ஆச்சர்யப்பட்டபடியே அந்த வேலைக்காரன் அப்படி கொண்டு வந்து தருவானாம். என்றாலும் இந்த வகை உணவு நாளடைவில் வெகு பிரபலமாகிவிட அதன் பெயரே சான்ட்விச் என்றாகிவிட்டது.

பொறுப்பல்ல!

கைவசம் வெச்சுக்குங்க தயாரா :

பனீர் – 1000 கிராம்; கடலை மாவு – 100 கிராம்; ஓமப் பௌடர் – 5 கிராம்; தனியா பௌடர் – 5 கிராம்; பச்சை கொத்துமல்லி – அரை கட்டு; இந்து உப்பு பொடி – 1 கிராம்; சிவப்பு மிளகாய்ப் பொடி – 10 கிராம்; பூண்டு பேஸ்ட் – 15 கிராம்; சாட் மசாலா – 5 கிராம்; எலுமிச்சை சாறு – 60 மில்லி லிட்டர்; பேக்கிங் பௌடர் – 3 கிராம்; மற்றபடி எண்ணெய், உப்பு.

களத்தில் இறங்குவோம் :

இரண்டுக்கு ஒன்று சென்டிமீட்டர் என்கிற அளவில் (சேச்சே, ஸ்கேல் எல்லாம் வேண்டாம்) பனீரை வெட்டுங்கள். உப்புத் தூளைத் தெளி



"என்னய்யா இது சாப்பாட்டுலே ஆணி கிடக்குது?"
"எல்லாம் ஒரு இரும்புச் சத்துதான்!"

யுங்கள். எலுமிச்சை சாறையும்தான். சிவப்பு மிளகாய்த் தூளைக் கலக்கும் நேரமும் இதுவே. எல்லாவற்றையும் இலேசாகக் கலந்து ஒருபுறம் வைத்துக் கொள்ளவும்.


கொத்துமல்லியைச் சிறிதாக நறுக்கிக் கொள்ளுங்கள். பேகிங் பௌடரை கடலை மாவுடன் சேர்த்து சலித்துவிட்டு, அதில் இந்து உப்பு, தனியா, ஓமப் பொடி, மிளகாய்ப் பொடி ஆகியவற்றைக் கலக்கவும்.

தொடக்கத்தில் தனியாக வைக்கப் பட்டிருந்த பனீர் சமாசாரத்தில் பூண்டு விழுது, கொத்துமல்லி இலை ஆகியவற்றைச் சேர்த்து ஊர வைக்கவும். கொஞ்சம் கடலை மாவைத் தெளித்தால் அது ஈரத்தை இழுத்துக் கொள்ளும்.

பொன்னிறம் வரும்வரை வறுத்துவிட்டு, சாட் மசாலாவைத்



ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் ஐஸ்க்ரீமின் சுவையை அறிந்தவர்கள். மார்கோ போலோ தனது கடல் பயணத்தின் போது, இது பற்றி அறிந்து இத்தாலியில் இந்த ஐஸ்க்ரீம் மகாத்மியத்தைப் பரப்பினார். பிரான்ஸ் நாட்டு செல்வந்தர்களுக்கு இந்தச் செய்தி பரவியது. உடனே அவர்கள் ஐஸ்க்ரீம் செய்யும் முறையை அறிந்து கொண்டதோடு, அது சாதாரண மக்களுக்குத் தெரிந்துவிடாத வகையில் ரகசியம் காத்தனர். சொல்லப் போனால் செல்வந்தர்களின் கௌரவச் சின்னமாகவே ஐஸ்க்ரீம் விளங்கியது. ஆனால் கொஞ்ச காலத்திலேயே ஐஸ்க்ரீம் தயாரிப்பு முறை ரகசியம் அம்பலத்துக்கு வந்துவிட, ஏழைகளும் ஐஸ்க்ரீம் சொர்க்கத்தை அனுபவிக்க ஆரம்பித்தார்கள்.



"தினமும் 'வாக்' போறாரே, இவர் பாவம், ஏன் இவ்வளவு குண்டா இருக்கார்?"

"ராஜாபவன்லேருந்து சீதா பவனுக்கு வாக் போனா உடம்பு இளைக்குமா!"

தூவவும்.

புதினா சட்னியோடு கூட்டணி அமைத்தால் பனீர் பகோடாவுக்கு கம்ப்ளீட் மெஜாரிடி தந்து விடுவீர்கள்!

● சாகோ வடை

ஜவ்வரிசியில் புரதச் சத்து கிடையாது. "ரொம்ப ப்ரோட்டீன் உடலிலே சேர வேண்டாம்" எனும்படியான உடல்நிலை என்றால் ஜவ்வரிசி வடை சரியான சாய்ஸ். கல்லீரல் பிரச்னை, சிறுநீரகம் அவ்வப்போது மக்கர் செய்கிறது என்றெல்லாம் உடல் கொஞ்சம் ரிப்பேரானால், ஜவ்வரிசி வடையை சுட்டுத் தள்ளுங்கள்; உள்ளே தள்ளுங்கள்.

பட்டியலைப் பார்த்துக்குங்க :

ஜவ்வரிசி - 250 கிராம்; மைதா - 50 கிராம்; சீரகம் - கால் டீஸ்பூன்; கொத்துமல்லி - ஒரு கொத்து; உப்பு - தேவைக்கேற்ப; சர்க்கரை - 10 கிராம்; கொழுப்பில்லாத சமையல் எண்ணெய் - வறுப்பதற்கு.

பதமாகப் பண்ணுங்க :

ஜவ்வரிசியை நீரில் சுத்தமாகக் கழுவிவிட்டு ரெண்டு மணி நேரம் ஊறப் போடுங்க. (மறக்காம வேக வெச்சிடுங்க.)

இப்ப இந்த ஜவ்வரிசியையும் இதர ஐட்டங்களையும் சேர்த்துக் கலக்கி ஒரு ஸ்மூத்தான கலவையாக்குங்க. பிறகு இந்தக் கலவையைப் பந்துகளாக உருட்டுங்க. கால் பந்து சைஸுக்கெல்லாம் இல்லே. கோலி குண்டை விட கொஞ்சம் பெரிய சைஸ். அம்புடு





''நான் சத்துணவுதான் சாப்பிடணும்னு டாக்டர் சொல்லிட்டாரு!''

தேன். இப்ப எண்ணெயிலே இந்த குண்டுகளைப் போட்டுப் பொரித்து எடுங்க. ஜவ்வரிசி வடைன்னா கொஞ்சம் ஏளனமா நினைப்பாங்களோன்னு தோணினா, "சாகோ வடை"ன்ற அதோட ஸ்டைலான மற்றொரு திருநாமத்தைச் சொல்லுங்க.

மேலே குறிப்பிட்ட அளவில் தயாரிக்கப்பட்ட வடைகள் ஒரு நாலு பேருக்குப் போதுமானது.

● மாதுளை சர்பத்

"பார்த்தாலே தெரியுது ரொம்ப அனீமிக்கா இருக்கேன்னு" என்று ஒருவரைப் பார்த்துப் பரிதாபப்படுவதைவிட உத்தமமான காரியம் ஒரு தம்ளர் மாதுளை சர்பத்தை அவருக்கு அளிப்பது. உடலில் இரும்புச் சத்து குறைவாக

உள்ளவர்கள் "இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்" என்றபடி இதை அருந்தலாம். நான்கு தம்ளர் சர்பத்துக்கான செய்முறைதான் கீழே!

தேவை :

மாதுளை - 1000 கிராம்; மலாய் (பாலேடு) - 60 கிராம்; தேன் - 20 மில்லி லிட்டர்.

செய்து பார்த்துடுவோம்:

மாதுளை ஓட்டிலிருந்து தனித்தனியாக விதைகளைப் பிரித்தெடுங்கள். மிக்ஸியில் போட்டு ஓர் அடி. பிறகு வடிகட்டல். சாறை ஃபிரிட்ஜில் ஜில் படுத்துங்கள். மிக்ஸியில் உள்ள 'விப்பரை'ப் பயன்படுத்தி பாலேட்டையும்



தேனையும் ஒன்று சேர வையுங்கள். மாதுளை சாற்றுக்கு மேலே இந்த க்ரீமைப் போட்டுக் கொடுங்கள்; குடியுங்கள். சூப்பர்!

● காரட் பச்சைப் பயிறு சாலட்

காரட்டில் உள்ள முக்கிய சத்து வைட்டமின் 'ஏ'ன்னு ஒண்ணாங்கிளாஸ் பையனுக்கும் தெரியும். வைட்டமின் 'சி'யும் காரட்டிலே உண்டு. பச்சைப் (முளை) பயிறு சுலபமாக ஜீரணமாகும். தவிர உடலுக்குத் தேவையான மினரல் உப்புகள் அதிலே வேண்டிய மட்டும் உண்டு. சில வைட்டமின்களும்தான். மொத்தத்தில் குறைவான கலோரி கொண்ட இந்த ஐட்டம் நாக்குக்கு



விருந்து; உடம்புக்கு மருந்து.

இதெல்லாம் இல்லேன்னா இதைப் பண்ண முடியாது *(பத்து பேருக்கானது)* :

துருவிய காரட் – 400 கிராம்; முளைவிட்ட பச்சைப் பயிறு – 150 கிராம்; எலுமிச்சை சாறு; சர்க்கரை; வெள்ளை மிளகுப்பொடி; சால்ட்.


அதெல்லாம் இருந்தா இப்படிச்

செய்யுங்க :

எலுமிசை ஜூஸ், சர்க்கரை, மிளகுப் பொடி, உப்பு இதையெல்லாம் ஒரு கலக்கு கலக்குங்க. ஒரு பாத்திரத்திலே காரட்டையும் பச்சைப் பயிறையும், மேற்படி கலவையையும் சேர்த்து மிருதுவாக மிக்ஸ் செய்யுங்க. அப்படியே சாப்பிட்டால் ஒரு தப்பும் இல்லை. ஆனால் கொஞ்ச நேரமாவது ஃபிரிட்ஜில் வைத்துவிட்டுப் பிறகு விழுங்கினால், ஆஹா அது அமிர்தம்!

• அபிஜித்

பனீரிலே பொதுவாக கட்டியைத்தான் பயன்படுத்துவார்கள். ஆனால் அது போக மிஞ்சியிருக்கிற திரவத்திலே எத்தனை சத்துக்கள்



தெரியுமா? வைட்டமின், மினரல்கள் எல்லாம் இருப்பதோடு கலோரியும் குறைவு. எனவே பருமனானவர்களும் பயமின்றிச் சாப்பிடலாம்.

பட்டியலைப் பார்த்துக்குங்க :

பால் – 1 லிட்டர்; எலுமிச்சை ஜூஸ் – 10 மில்லி லிட்டர்; பைனாப்பிள் அல்லது மாம்பழ ஜூஸ்



"என்ன செய்ய, நிறைய வெண்டைக்காய் சாப்பிட்டால் மூளை வளரும்னு சொன்னது என் விஷயத்திலே உண்மையாயிடிச்சு!"

– 400 மில்லி லிட்டர்; ஏலக்காய் – 3; சர்க்கரை – 100 கிராம்.

ஸ்டவ்வை மூட்டியாச்சா?

பாலைக் கொதிக்க வைக்கவும். பிறகு எலுமிச்சை சாறை விடுங்கள். பால் மனம் போன போக்கில் திரியட்டும். மெல்லிய துணியில் வடிகட்டி, நீரைத் தனியே எடுங்கள். (துணியில் தங்கும் ஆடைக் கட்டியை பனீர் பதார்த்தம் செய்யப் பயன்படுத்தலாம்) சாறில் சர்க்கரையைப் போடுங்கள். கொதிப்பு அடங்கிய பிறகு பைனாப்பிள் அல்லது மாம்பழ ஜூஸ் அதில் சேர்க்கவும். ஏலம், ஏலம் ஏலம் (ஏலம் விடலே; மூன்று ஏலக்காய் என்பதால் இப்படி!) சேர்த்துக் கலக்குங்க. பிறகு ஜில்லாக்கி சாப்பிடுங்கள். லல்லல்லா பாடத் தோணும்!

★ ரப்டி

இதில் உள்ள கால்ஷியம் சத்து எலும்புகளை பலமாக்கும். சர்க்கரை வள்ளிக் கிழங்கில் வைட்டமின் 'ஏ' உண்டு; கண்ணுக்கு நல்லது.

தேவை! தேவை! :

கொழுப்பு நீக்கிய பால் – 1 லிட்டர்; சர்க்கரை வள்ளிக்கிழங்கு – 175 கிராம்; சர்க்கரை – 150 கிராம்; குங்குமப்பூ – கொஞ்சம்; பாதாம் பருப்பு (சின்னதாக கட் செய்யப்பட்டது) – 2; பிஸ்தா – 2.

செய்யுங்கள்! செய்யுங்க!

கொதிக்க வைத்த பாலில் தோல் நீக்கிய சர்க்கரை வள்ளிக்கிழங்கைச் சேர்த்து நன்றாக மசியும் வரை வேக வைக்கவும். அதில் சர்க்கரையையும்



"இது லெகான் முட்டை. இது நாட்டு முட்டை."



பசி உணர்வு நமக்குத் தோன்றுவது எப்படி? 'இதென்ன கேள்வி? வயிறு காலியானால், தானாக பசியெடுக்கிறது' என்பது உங்கள் பதிலானால் அது தப்பு. ரத்தத்தில் சில சத்துக்கள் குறைந்தால் மூளையில் உள்ள 'பசிமையத்துக்கு' இது பற்றிய தகவல் அனுப்பப்படுகிறது. உடனே அது வயிறு, குடல் ஆகிய பகுதி களை மேலும் சுறுசுறுப்பாக செயல் படத் தூண்டுகிறது. இதுதான் பசி உணர்வு (பசிக்கும்போது சிலர் தங்கள் வயிற்றில் ஒருவித சலசலப்பை உணரு வது இதனால்தான்).

சேர்த்துக் கொதிக்க வைத்து, வெளியே எடுத்து, குளிரச் செய்யவும். குங்குமப்பூவை இளம் சூடான தண்ணீரில் சேர்த்துக் கரைத்த பிறகு இதைப் பாலுடன் சேர்த்து கலக்க வேண்டும். நன்றாகக் குளிர்ந்த பிறகு இதில் ஏலக்காய் பொடியைச் சேர்த்து ஒரு மணி நேரம் குளிரவைக்கவும். பரிமாறுவதற்கு முன்பு பாதாம், பிஸ்தா ஆகியவற்றை சின்னச் சின்னதாக வெட்டி அதை அலங்கரித்து குளிர்ச்சியாகப் (பரிமாறுபவர் உணவுப் பொருள் இரண்டுமேதான்) பரிமாறவும்.

★ தக்காளி பருப்பு சூப்

வைட்டமின் ஏ நிறைந்த உணவு. சிறு நீரகங்களை சுத்தம்

செய்யவும், கொஞ்சம் கோளாறான வயிற்றை சரி செய்யவும் பார்லி உதவும். பி. காம்ப்ளெக்ஸ், வைட்டமின் மற்றும் தேவைப்படும் அமினோ அமிலங்களும் உண்டு, இந்தக் கலோரி குறைவான அயிட்டத்தில்.

சூப் 'ஷேப்'பாகத் தேவை :

பாசிப் பருப்பு - 120 கிராம்; பெரிய வெங்காயம் - 6; தக்காளி (பெரியது) - 10; கடலை மாவு - 20 கிராம்; பார்லி - 30 கிராம்; பச்சைப் பட்டாணி - 50 கிராம்; கேரட் - 30 கிராம்; பீன்ஸ் - 5; எண்ணெய் (சூரிய காந்தி) - 30 மில்லி லிட்டர்; மிள காய்த் தூள் - 5 கிராம்; மஞ்சள் தூள் - 2 கிராம்; இஞ்சி - 15 கிராம்; பூண்டு - 15 கிராம்; மிளகுத் தூள் - 10 கிராம்; கரம்மசாலா பௌடர் - 5



"சின்ன வயசிலே இருந்து தினமும் நிறைய கேரட் சாப்பிட்டதாலே எனக்கு கண் பார்வை ரொம்பப் பிரகாசம்."

"அதுக்காக இந்திர சபையிலே ஊர்வசி ஆடுவது தெரியுதுன்னு வானத்தைப் பார்த்து சொல்வதெல்லாம் ரொம்ப ஓவர்."



கிராம்; சீரகம் – 5 கிராம்; சோம்பு – 5 கிராம்; கொத்துமல்லி – 5 கிராம்; உப்பு – தேவையான அளவு; தண்ணீர் – 1500 மில்லி லிட்டர்.

'சூப்'பரா செய்யுங்க! :

பாத்திரத்தில் எண்ணெயை சூடாக்குங்கள். மிதமான சூடா? போடுங்கள் சீரகத்தை. கூடவே சோம்பையும்.

வெங்காயத்தை நறுக்குங்கள். கொஞ்சம் பெரியதாகவே போட்டு வதக்கவும். அதில் இடித்த இஞ்சியைச் சேருங்கள். பூண்டையும். கமகம மணம் வரும். கடலை மாவைப் போடுங்கள். கிளறுங்கள். பிறகு பெரிதாக நறுக்கப்பட்ட தக்காளி, துருவிய காரட், பொடிசாக நறுக்கப்பட்ட பீன்ஸ், பட்டாணி இவற்றைப் போடுங்கள். நன்றாகக் கிளறவும்.

இப்போது போட வேண்டியவை, மிளகாய்த் தூள் மற்றும் மஞ்சள் தூள். வதக்குங்கள். தண்ணீரில் பாசிப் பருப்பை வேக வைத்திருப்பீர்கள். அதையும் பார்லியையும் மேலே குறிப்பிட்ட கலவையில் போட்டுக் கொதிக்க விடவும். கால் பகுதி தண்ணீர் வற்றியவுடன், எடுங்கள்


மத்தை, கடையுங்கள். மற்றொரு பாத்திரத்தில் வடிகட்டுங்கள்.

இப்படி 'வடிகட்டிய புத்திசாலி'யான பிறகு, வடிகட்டிய சூப்பில் தேவையான அளவு உப்பு, மிளகுத் தூள், கரம் மசாலா இவற்றையும் போட்டு ஒருமுறை கொதிக்க வைக்கவும்.

பிறகு அதை கப்புகளில் ஊற்றி, பொடியாக நறுக்கிய கொத்துமல்லியைப் போட்டு அலங்கரிக்கவும்; அருந்தி அனுபவிக்கவும்.

✱ உருளை கெப்பே

உருளையில் இல்லாத மாவுச்சத்தா? இன்ன பிற பொருள்களின் சேர்க்கையால், ஏ, பி, சி, கே ஆகிய வைட்டமின்கள் மற்றும்



"என்னம்மா ஓடிவரே?"

"என் மகனுடைய அகோரப் பசியைக் குறைப்பதற்காக ஒரு நாளைக்கு ரெண்டுன்னு நாற்பது மாத்திரைகள் கொடுத்தீங்களே, அத்தனையையும் அவன் ஒரேயடியாக முழுங்கிட்டான்!"



காப்பர், மக்னீஷியம் சத்துக்களும் இதில் கிடைக்க வாய்ப்புண்டு.

ஸ்டாக் இல்லேன்னா வாங்கிடுங்க :

வேக வைத்த உருளைக் கிழங்கு - 250 கிராம்; சின்னதாக நறுக்கிய இஞ்சி, பூண்டு - 30 கிராம்; சிறியதாக நறுக்கிய பச்சை மிளகாய் - 10 கிராம்; சிறியதாக நறுக்கிய கொத்தமல்லி, புதினா - 20 கிராம்; எலுமிச்சை பழச்சாறு - 5 மில்லி; சிறியதாக நறுக்கிய வெங்காயம் - 40 கிராம்; கோதுமை ரவை - 100 கிராம்; சிறிதாக நறுக்கப்பட்ட காளான் - 50 கிராம்; சிறியதாக நறுக்கிய பசலைக்கீரை - 50 கிராம்; மிளகாய்த் தூள் - 5 கிராம்; மஞ்சள் தூள் - 3 கிராம்; கரம் மசாலா பௌடர் - 5 கிராம்; உப்பு, எண்ணெய் - தேவையான அளவு.

சரி பார்த்துக்கிட்டு சமைக்கத் தொடங்குங்க :

மசிய வைத்த உருளைக் கிழங்குடன், நறுக்கிய இஞ்சி, பூண்டு, புதினா, கொத்துமல்லி, பச்சை மிளகாய் இவற்றைப் போதிய அளவு சேர்த்து தேவையான அளவு உப்பையும், கோதுமை ரவாவையும்


சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி அது சூடானதும் வெங்காயத்தைப் போட்டு வதக்குங்கள்.

வதங்கிய வெங்காயத்துடன், இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் ஆகியவை பாக்கியிருக்கும் இல்லையா? அதையெல்லாம் போட்டு, கூடவே கரம் மசாலா, காளான், பசலைக் கீரை ஆகியவற்றையும் போட்டு வதக்கவும்.

இப்போது மிளகாய்த் தூள், மஞ்சள் தூள் இவற்றையும் சேர்த்து சுண்ட வதக்குங்கள். அப்புறம் எலுமிச்சை பழச்சாற்றை சேர்த்துக் கிளறவும்.

மசிய வைத்த உருளைக்கிழங்குக் கலவையை கையில் வைத்து வடை



அளவுக்குத் தட்டையாகத் தட்டவும். பிறகு அதில் ஒரு டீஸ்பூன் அளவுக்குக் காளான் - பசலைக் கலவையை வைத்து முட்டை அளவுக்குப் பிடித்து அதை குளிர் சாதனப் பெட்டியில் (பவர் கட் இல்லாத நேரமாகப் பார்த்து!) அரை மணி நேரம் வைக்கவும்.

அப்புறம் என்ன? ஃப்ரிட்ஜிலிருந்து



எடுத்த கெப்பேவை சற்றுப் பொறுத்து, வாணலியில் எண்ணெய் சூடான பின் (வடை செய்வது போல்) போட வேண்டியதுதான்; பொன்னிறம் வரும்வரை காத்திருந்து எடுக்க வேண்டியதுதான். கொஞ்சம் கொதிப்பு அடங்கியவுடன் ரசித்து சாப்பிட வேண்டியதுதான்.

* தளிர் சோளக்கதிர் கறி

தளிர் சோளக்கதிரில் கார்போஹைட்ரேட் சத்தும் அதிகம், நார்ச்சத்தும் அதிகம். கொத்துமல்லித் தழையில் வைட்டமின் ஏ, சி மற்றும்

இரும்புச் சத்து உண்டு.

இவையெல்லாம் வேணுமே :

தளிர் சோளக்கதிர் – 300 கிராம்; பால் – 60 மில்லி; பட்டை – 2; ஏலக்காய் – 2; கிராம்பு – 2; எலுமிச்சை சாறு – 5 மில்லி; சூரியகாந்தி எண்ணெய் – 30 மில்லி; உப்பு – தேவையான அளவு; பெரிய வெங்காயம் – 30 கிராம்; கொத்துமல்லி – 50 கிராம்;

மசாலாவுக்கு : பச்சை மிளகாய் – 7; துருவிய தேங்காய் – 20 கிராம்; பூண்டு – 7 பல்; கசகசா – 20 கிராம்; இஞ்சி – 15 கிராம்.

இதைச் செய்து பார்க்க :

அரைத்த மசாலாவை எண்ணெயில் வதக்குங்க நன்றாக. ஏலக்காய், பட்டை, கிராம்பு இதையெல்லாம் சேர்த்துப்



பொரித்தெடுங்க.

அதிலே எலுமிச்சை சாறை சேர்த்து கலகலன்னு கலக்குங்க.

வேக வச்ச தளிர் சோளக்கதிர், பால், உப்பு இதெல்லாம் இருக்குதில்லையா, இதையெல்லாம் கூட அதோடு சேர்த்து வேக வையுங்க. அப்புறம் கொத்து மல்லியை மேலே தூவி சும்மா கல்யாணப் பெண் மாதிரி அலங்கரித்து சூடாகப் பரிமாறுங்க.



✱ பச்சைப் பயிறு புலாவ்

பயறுக்கு வைட்டமின் சத்தும் உண்டு. நரம்பு மண்டலத்துக்கும் நல்லது. சக்தி அளிக்குது. திசுக்களின் வளர்ச்சிக்கும் உதவுது. ரத்த சோகைக்கும் நல்லது. இதைவிட என்ன எதிர்பார்க்கறீங்க?

கைவசம் இருக்கா?

கைக்குத்தல் அரிசி - 200 கிராம்; பிரியாணி இலை - 2; சீரகம் - 3 கிராம்; பட்டை - 1; கிராம்பு - 2; சூரியகாந்தி எண்ணெய் - 15 மில்லி; உப்பு - தேவையான அளவு;

புதினா – 10 கிராம்.

பருப்புக்கலவை :


முளைகட்டிய பச்சைப் பயிர் – 150 கிராம்; சிறியதாக வெட்டிய வெங்காயம் – 30 கிராம்; சிறியதாக வெட்டிய பச்சை மிளகாய் – 5 கிராம்; சிறியதாக நறுக்கிய பசலைக் கீரை – 100 கிராம்; எண்ணெய் – 15 மில்லி; உப்பு – தேவையான அளவு.

வாங்க புகுந்து புறப்படலாம் :

முதல்லே புலாவ் சம்பந்தமானது:

ஒரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி, சூடானதும் பிரியாணி இலையைப் போட்டுப் பொரிக்கவும். பொரிச்சீங்களா? இப்போ சீரகம், பட்டை, கிராம்பு இதையெல்லாம் அதோட சேர்த்துக் கொஞ்ச நேரம் வதக்குங்க.

நன்றாகக் கழுவிய கைக்குத்தல்



பீட்ஸா என்பது மைதாவை அடிப் படையாகக் கொண்ட பொருள். தக் காளி சாஸ், சீஸ் ஆகியவை கலந்த ஒன்று இது. இதன் மேல் அலங்கரிக்கப் பயன்படும் பொருளைக் கொண்டுதான் இது சைவப் பிரிவா அசைவப் பிரிவா என்பது தீர்மானிக்கப்படும். இத்தாலி யைத் தாயகமாகக் கொண்ட பீட்ஸா அமெரிக்காவுக்குச் சென்றதும் அங்கு மிகவும் பிரபலமடைந்தது. பிறகு மற்ற நாடுகளுக்கும் இது பரவக் கேட்பா னேன்!



அரிசியையும், உப்பையும் சேர்த்து, ஒரு மூணு முறை நன்றாக, சீராகக் கலக்கவும்.

நானூறு மில்லி (பயப்படாதீங்க வேறெதுவுமில்லை) தண்ணீரை இதிலே சேர்த்து மூடி வேக வையுங்க.


அடுத்ததுப் பருப்புக் கலவையைப் பார்ப்போம் :

இன்னொரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி, நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், இதையெல்லாம் போட்டு நன்றாக வதக்கவும்.

அதனுடன் முளைகட்டிய பருப்பைச் சேர்த்து மூணு நிமிடம் வேக வைக்கணும். இப்போ பசலைக் கீரையையும் சேர்த்து வேக வையுங்க.

1+1 = 2

இப்படி வெந்தவுடன், முதலில்



வேக வைத்த (அரிசி) புலாவையும் சேர்த்து நன்றாகக் கலக்கி, நறுக்கிய புதினாவை மேலே தூவி சூடாகப் பரிமாறி சொக்கவையுங்கள்.

✱ வெஜ் ப்ரெட்

ப்ரெட்ல என்னென்ன சத்துன்னு புதுசா சொல்லணுமா என்ன? இது வெஜிடபிள் ப்ரெட் வேற! ஜமாய்ங்க.

தேவை :

மைதா – 500 கிராம்; உப்பு – 1 டீஸ்பூன்; ஈஸ்ட் – 1 டீஸ்பூன்; தண்ணீர் – 1 கப்; சர்க்கரை – 1 டீஸ்பூன்; முட்டை ஒன்று அல்லது கொஞ்சம் பால்; பீன்ஸ் & கேரட் – 1 கப் (நறுக்கி, வேக வைக்கப்பட்டது); இவை தவிர ப்ரெட் தயாரிக்கும்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. %N/MS(S)M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS(S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to KALKI 18.10.98

'Loaf tin' பாத்திரம் அவசியம்.

செய்யலாமா? :

முதலில் மாவை சலிக்கவும். பிறகு அதில்உப்பு சேர்த்துக் கலக்கவும். பின் அந்தக் கலவையின் நடுவில் அகல் போல் ஒரு குழி செய்து கொள்ளவும்.

ஈஸ்டை வெதுவெதுப்பான நீரில் கரைத்து, சர்க்கரை சேர்த்து நன்றாகக் கலக்கவும். இக்கலவையை முன்பு தயார் செய்துள்ள மாவுக் குழியில் ஊற்றவும். இது மிருதுவான, சீரான கலவையாகும் வரை பிசையவும். 'Loaf tin' என்கிற ப்ரெட் தயாரிக்கும் பாத்திரத்தின் உட்புறத்தைக் கொஞ்சம் நெய்யால் பூசி, லேசாக மைதா மாவைத் தூவவும். தயாராயுள்ள கலவையை, பாத்திரத்தின் பாதி வரை கொட்டி நிரப்பவும்.

சற்றுப் பொறுத்து, கலவை பொங்கி, பாத்திரம் முழுவதும் நிரம்பும். மீண்டும் அதை வெளியே எடுத்துப் பிசையவும். பிறகு, மொத்தமாகச் செவ்வக வடிவில் அமைக்கவும். குறுக்கு வாக்கில் இரண்டாக வெட்டி, நடுவில் பீன்ஸ், கேரட் கலவையை போட்டு, இரண்டு பாதியையும் சேர்க்கவும்.

மறுபடியும் அதே 'டின்'னில் போட்டு கால்மணி நேரம் பொறுக்கவும். மேலே கொஞ்சம் பால் அல்லது முட்டையைத் தெளித்தால் பளபளப்பு வந்துவிடும்.

பிறகு ஓவனில் இதை ஒரு மணி நேரம் வைக்கவும். (கவனிக்க: கால் மணி நேரம் ஆனதும் வெப்பத்தைக் குறைத்து விட வேண்டும்.)

வெளியே எடுத்தால், வாவ்! வெஜ் ப்ரெட்!


தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

தீபாவளி என்றாலே கொண்டாட்டம்
கொண்டாட்டம் என்றாலே கோ-ஆப்டெக்ஸ்

சிறப்பு தீபாவளி தள்ளுபடி
20%-80%

உங்கள் தீபாவளியை வண்ணமயமாக்க – **கோ–ஆப்டெக்ஸ்.** தரமிக்க பட்டுப் புடவையிலிருந்து மிருதுவான கைத்துண்டுகள் வரை நியாயமான விலையில் வாங்கி மகிழ உங்களை வரவேற்கிறது – **கோ–ஆப்டெக்ஸ்.**

- தீபாவளி வரை வாரம் ஏழு நாட்களிலும் விற்பனை உண்டு.
- வட்டியில்லாத கடன் வசதி.
- தமிழக அரசுப் பணியாளர்களுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் வரை கடன் வசதி.
- பொது நிறுவனங்கள், வங்கிகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் கடன் வசதி உண்டு.





கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

DIPR/DIS/98

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /98* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

